





# தமிழரசு

டிசம்பர் 16–31, 1998, ரூ.3











**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்


- சமத்துவபுரம் புதிய சமுதாயத்தை உருவாக்கும் விதை 2
- சிப்பாய்க் கலகம் நினைவுத்தூண் 5
- மங்கலங்கிழார் 7
- பூலித்தேவன் மாளிகை 9
- இழந்தது 13
- ஊனமா? 16
- விஸ்வநாததாஸ் நினைவகத் திறப்பு விழா 17
- தமிழ்நாட்டில் பால் உற்பத்தி 21
- இசைத்துறை வித்தகர்களுக்கு விருது 24
- தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 27
- அம்பேத்கர் மணிமண்டபம் பணிகள் தொடக்கம் 31
- தமிழ்நாடு உப்பு நிறுவனம் 33
- சாதி சமய நல்லிணக்க விழா 35
- வாசனைத் திரவியங்கள் பயிரிட்டு வளம் பெறலாம் 39
- பொழுதின்னும் விடியலையே! 41
- எலும்புப் புற்றுநோய் 42
- மீன்வளத்துறை 45


## திருக்குறள்

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு.

மனத்தில் பொறாமையில்லாமல் வாழும் இயல்பை ஒழுக்கத்திற்குரிய நெறியாகப் பெற்று விளங்கிட வேண்டும்.

(கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து)


**தமிழரசு**

திருவள்ளுவராண்டு 2029

மார்கழி

டிசம்பர் 16–31, 1998

மலர் : 30 இதழ்: 12

விலை ரூ.3


முதல் பக்க அட்டை :

பொய்கை சமத்துவபுரம், முதல் சுதந்திரப்போராட்ட நினைவுத் தூண் திறப்பு விழா

கடைசிப் பக்க அட்டை :


வீரத்தியாகி விஸ்வநாததாஸ் நினைவகம், மாவீரன் பூலித்தேவன் மாளிகைத் திறப்பு விழா.

# சமத்துவபுரம்

## புதிய சமுதாயத்தை உருவாக்கும் விதை

**சா**தி பேதங்கள், மத பேதங்கள், சாதிகள், மதங்கள் இவைகள் பேரால் நடைபெறுகின்ற சச்சரவுகள், கலவரங்கள், வன்முறைச் சேட்டைகள், பலாத்கார நடவடிக்கைகள் இவைகள் எல்லாம் கூடாது என்பதற்காகத்தான் பாரதியார் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாப்பாக்களுக்கே சொன்னார். ஆனால் பெரியவர்களுக்குச் சொல்ல வேண்டிய காலம் இன்னமும் இருக்கின்றது என்ற கவலைதான் எனக்கு. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர், உத்தமர் காந்தியடிகள் இப்படிப்பட்ட பெருந்தலைவர்கள் எல்லாம் எதற்காக உழைத்தார்களோ, எதற்காக பாடு பட்டார்களோ, அந்தப் பணிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுக்கு உரிய பலன் இன்னும் கிடைக்க வில்லையே என்கின்ற ஆதங்கத்தின் காரணமாகத்தான் இதையாவது செய்து பார்ப்போம் என்று இந்த சமத்துவபுரம் உருவாக்குகின்ற நிகழ்ச்சியிலே நான் ஈடுபட்டேன்.

சமத்துவபுரத்தில் எல்லோரும் எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களும் குடியேறி அவர்கள் ஒருவருக்கொருவர் கட்டுப்பாட்டோடு நிபந்தனைகள் என்னென்ன விதிக்கப்பட்டு இருக்கின்றதோ அவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு வாழ்வார்களேயானால் சமத்துவபுரத்தின் நோக்கம் நிறைவேறும் என்பதுதான் என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.



இங்கே உருவாகி இருக்கின்ற இந்த சமத்துவபுரத்தை மிக நேர்த்தியாக அமைத்திருக்கின்றார்கள். முன்னாள் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. டேவித்கார் இப்பொழுது இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சிவக்குமார் இவர்கள் ஆற்றியுள்ள அரும் பணியின் காரணமாக இதுவரையில் உருவாக்கப்பட்டுள்ள ஒன்பது சமத்துவபுரங்களையும் மீறுகின்ற வகையில் இந்த சமத்துவபுரம் அழகோடு, பொலிவோடு நல்ல முறையில் உருவாகி இருக்கின்றது.

### கடுகு உள்ளத்தோடு சிந்திப்பவர்கள் இதனை குறை சொல்கிறார்கள்

நான் உள்ளே நுழைந்ததும் பார்த்தேன். இந்த சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை, அழகிய பூங்காவை. அந்தப் பூங்காவில் பூத்துக் குலுங்குகின்ற மலர்களை, செடிகளை, கொடிகளை இவைகள் வளர வளர எவ்வளவு நேர்த்தியான அழகை. சமத்துவபுரத்திற்கு இந்தப் பூந்தோட்டம் தரும் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. அதைப் போலவே சமத்துவபுரத்தில் இருக்கின்ற சாலைகள், சுகாதார வசதி, தண்ணீர் வசதி இவைகளையெல்லாம் பார்க்கும்போது சமத்துவபுரத்திலே நமக்கு ஒரு வீடு கிடைக்காதா? என்கின்ற எண்ணம் பல பேருக்கு ஏற்படுவது நியாயம்தான்.

ஆனால், இந்தச் சமத்துவபுரத்தை குறை சொல்கிறவர்களும் ஆங்காங்கு நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. உண்மையிலேயே குறை இருந்தால் நாங்கள் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். திடீரென்று வரலாறு காணாத மழை பொழிந்து அதன் காரணமாக கருங்கல் கட்டடங்களில்கூட தண்ணீர் கசிவு ஏற்படும் என்றால் இந்த புதிதாக கட்டப்பட்டுள்ள சமத்துவபுரக் கட்டடங்களில் சில இடங்களில் தண்ணீர் கசிந்தது ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இவைகளைப் பற்றி சில பத்திரிகைகள் எழுத நான் உடனடியாக ஒரு அதிகாரியை அந்த இடத்திற்கு அனுப்பி அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்துபேசச் செய்து சட்டமன்ற உறுப்பினரிடம் விசாரித்து, உடனடியாக பரிகாரம் காணப்படுகிறது.


நான் அப்படி குறை சொல்வதை வரவேற்கிறேன். ஆனால், சமத்துவபுரத் திட்டத்தினால் கழக அரசுக்கு ஒரு பெருமை வந்துவிடும். கருணாநிதிக்கு ஒரு பெயர் வந்து விடும் என்று கடுகு உள்ளத்தோடு சிந்திக்கின்ற சில பேர் இது என்ன சமத்துவபுரம். சமத்துவபுரம் கட்டிவிட்டால் சாதி ஒழிந்துவிடுமா? என்று கேட்கிறார்கள். அப்படி சொல்கிறவர்கள் யார் என்று நீங்கள் அடையாளம் தெரிந்து கொள்ளுங்கள். உயர்ஜாதி ஆணவக்காரர்கள் ஆதிக்கக்காரர்கள் அவர்கள்தான் அப்படி இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எழுதுகின்ற பத்திரிகைகளும் உயர்ஜாதி ஆணவத்தோடு எழுதுகின்ற பத்திரிகைகள்தான். உள்ளபடியே குறைகள் நீங்கவேண்டும் என்று சொல்கின்ற பத்திரிகைகள் அல்ல. சில பத்திரிகைகள் சுட்டிக் காட்டிய குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்கின்ற பணியிலே நான் ஈடுபட்டிருக்கின்றேன். நெல்லை மாவட்டத்தில் கட்டப்பட்ட சமத்துவபுரத்தில் உள்ள குறைகளை ஒரு பத்திரிகை சுட்டிக்காட்டியது. உடனடியாக உள்ளாட்சித்துறைச் செயலாளரை அங்கே அனுப்பி, அந்த அதிகாரி அதுகுறித்த அறிக்கையை என்னிடம் தந்து அந்த அறிக்கையை படித்துவிட்டு நான் எனக்கு வந்த கோப்பில் எழுதியிருக்கிறேன்.

இந்தப் புகாரின்மீது அதிகாரி அங்கே சென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார். இது சிறப்புடைய ஒரு காரியமாகும். நம்முடைய அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டிருக்கின்ற சமத்துவபுரங்களை மாதம் ஒரு முறையாவது மாவட்ட அமைச்சர்கள் அந்த மாவட்டத்திலே அமைச்சர் இல்லாவிட்டால் பக்கத்திலே உள்ள மாவட்ட அமைச்சர்கள் வாய்ப்பை ஏற்படுத்திச் சென்று குறைகளை கவனித்து நிவர்த்தி செய்ய வேண்டும் என்று நான்கு நாட்களுக்கு முன்பு நான் ஒரு கோப்பிலே கையெழுத்துப் போட்டு இந்தச் செய்தியை எல்லா அமைச்சர்களுக்கும் சொல்லவும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கின்றேன். அவ்வளவு அக்கறையோடு இந்த காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சமத்துவபுரத்திலே எல்லா சாதிக்காரர்களையும் கொண்டு வந்து குடிவைத்துவிட்டால் சாதி ஒழிந்து விடுமா? என்று கேட்கிறார்கள். அவர்களுடைய வாதப்படி ஒழியாதுதான் என்று வைத்துக்கொண்டாலும்கூட அது ஒழிய வேண்டும். சாதிபேதம் அகல வேண்டும் என்பதற்கு ஒரு ஆரம்பமாக இருக்குமா இருக்காதா?

சகோதரத்துவத்தை, நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம். ஒரே குலம். ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை கடைப்பிடிக்கின்ற அளவிற்கு எதிர்காலத்திலே ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய விதைதான் இந்த சமத்துவபுரம் என்கின்ற பெயரால் ஊன்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு எல்லாம் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சமத்துவபுரம் நான் எல்லா இடங்களிலும் சொல்வதைப் போல தம்பி துரைமுருகன் இங்கே கோடிட்டுக் காட்டியதைப் போல பொய்கையிலே மாத்திரமல்ல. தமிழ்நாடே சமத்துவபுரமாக மாறவேண்டும். அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு மாற வேண்டும். சாதி தகராறுகள் மாய்ந்திடவேண்டும். மத மோதல்கள் இருந்திடக் கூடாது. அந்த நல்ல சமுதாயத்தை, அந்த நல்ல தமிழகத்தை அந்த சமத்துவபுரத்தை ஒரு பொய்கையிலே அல்ல, தமிழ்நாடு முழுவதும் நாம் உருவாக்குவோம். தமிழ்நாடே சமத்துவபுரம் ஆக நாம் பாடுபடுவோம். தமிழ்நாடு மாத்திரமல்ல, இந்தியாவே சமத்துவபுரமாக ஆக நாம் பணியாற்றுவோம் என்கின்ற சூளுரையை இந்த விழாவிலே மேற்கொள்ளுவோம்.



– வேலூரில் பொய்கை சமத்துவபுரத்தை 20.12.1998 அன்று திறந்து வைத்து முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.



★ பெரியார்

★ அம்பேத்கர்

★ திரு.வி.க.

★ பாரதியார்

★ பாவேந்தர்

விருதுகளை

மாண்புமிகு முதலமைச்சர்

கலைஞர்

வழங்கினார்.


**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
1998ஆம் ஆண்டிற்கான
பெரியார் விருதினை திரு. நாத்திகம் இராமசாமி அவர்களுக்கும்,
அம்பேத்கர் விருதினை திரு. எல். இளையபெருமாள் அவர்களுக்கும்
திரு.வி.க. விருதினை புலவர் மருதவாணன் அவர்களுக்கும்,
பாரதியார் விருதினை திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும்,
பாவேந்தர் விருதினை திரு. முரசு நெடுமாறன் அவர்களுக்கும்
சென்னை கலைவாணர் அரங்கில்
மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்
தலைமையில், நடைபெற்ற விழாவில் வழங்கினார்.
விருது பெற்றவர்களுக்கு தங்க பதக்கமும்,
ரூ.1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது.
இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
முனைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன், திரு. வ. முல்லைவேந்தன்,
திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,
சமயநல்லூர் திரு.எஸ்.செல்வராசு
ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# வேலூரில் "சிப்பாய்க் கலகம்"-

# முதல் சுதந்திரப் போராட்ட நினைவுத் தூண்





முதல் சுதந்திரப் போராட்டத்தை இந்தியாவிலே தமிழ்நாடுதான் நடத்தியிருக்கிறதென்பதற்கு வேலூரில் நடைபெற்ற இந்தப் போராட்டம் மாத்திரமல்ல. தமிழகத்திலே பல்வேறு இடங்களில் நடைபெற்ற போராட்டங்கள் சான்றாக அமைந்திருக்கின்றன. வேலூரை பொறுத்தவரையில் இங்கே நடைபெற்ற சுதந்திரப் போரில் வெள்ளைச் சிப்பாய்களும், நம்முடைய சிப்பாய்களும் மோதிக் கொண்டு இரு சாரார் சார்பிலும் பலர் மாண்டனர். ஆனால் வேடிக்கையான வேதனை என்னவென்றால் அந்த வெள்ளைக்காரச் சிப்பாய்களுக்கு வேலூரில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் அவர்களால் கொல்லப்பட்ட இந்திய சிப்பாய்களுக்கு - தமிழ்நாட்டு சிப்பாய்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படவில்லை. இருபதாண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அப்பொழுது இறந்துபோன - வெள்ளைக்காரர்களுக்கு - கொல்லப்பட்ட வெள்ளைக்காரர்களுக்குத்தான் நினைவுச் சின்னம் இங்கே அமைக்கப்பட்டதேயல்லாமல், அந்தப் போராட்டத்தில் மாண்டு மடிந்த தமிழ் வீரர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏனோ எழவில்லை. அதையும் நாம்தான் வந்து செய்ய வேண்டுமென்று இருந்திருக்கும் பொழுது அந்தப் பணியை, அதற்குக் கடமைப்பட்ட நாம், இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறோம்.

வெள்ளைக்காரர்களை எதிர்த்த வீரர்களுக்கு, வீர மன்னர்களுக்கு, வேந்தர்களுக்கு, தளகர்த்தர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்களை கழக அரசு கடந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி அமைத்திருக்கின்றது. கடந்த காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கோட்டை கட்டினோம்; மருதுபாண்டியர்களின் நினைவுச் சின்னத்தை சிவகங்கை மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடத்திலே அமைத்திருக்கிறோம். தென்னாப்பிரிக்க போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் சேர்ந்து போராடி உயிர் நீத்த தில்லையாடி வள்ளியம்மாள் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணிக்கு தஞ்சை மாவட்டத்தில் தில்லையாடியிலே வள்ளியம்மாள் நகர் என்று மாற்றி அங்கே அரிய நினைவுச் சின்னத்தை அமைத்திருக்கின்றோம்.

வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு எந்த சிறைச்சாலையில்

இருக்கிறதென்று தேடிக் கண்டுபிடித்து அந்த செக்கை கொண்டு வந்து சென்னையில் கண்காட்சியாக வைத்ததும் தி.மு.கழக ஆட்சியிலேதான் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

இப்போது நாடு முழுவதும் சுதந்திரம் பெற்ற ஐம்பதாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிற கால கட்டத்தில் - நல்ல வேளையாக நாமே ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிற காரணத்தால் அந்த நினைவைப் போற்றிக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக கடந்த இரண்டரை ஆண்டு காலத்திலே செய்யப்பட்ட காரியங்கள். ஜீவா மணிமண்டபத்தை நாகர்கோவிலில் கட்டியிருக்கிறோம். ஜீவானந்தம் அவர்களை நான் அண்ணன் ஜீவா என்றுதான் அழைப்பது வழக்கம்.

சென்னையில் போர் நினைவுச் சின்னத்திற்குப் பக்கத்தில் சுதந்திர நினைவுச் சின்னம் ஒன்றை இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே மிக ஃநர்த்தியாக - எழுச்சியாக அமைத்திருக்கின்றோம்.

### நேதாஜி சிலையை கடற்கரையில் திறந்து வைத்திருக்கிறோம்

நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் சிலையை பல இலட்ச ரூபாய் செலவில் சென்னை கடற்கரையில் அமைத்து அதைத் திறந்து வைத்திருக்கின்றோம். அண்மையில் நண்பர் குமரிஅனந்தனின் கோரிக்கையை ஏற்று கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகில், இராஜாஜி மண்டபத்திற்கு அருகில், காமராஜர் நினைவு மண்டபத்திற்கு அருகில் தியாகிகள் மணிமண்டபம் என்று ஒன்று கட்டப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்த மணிமண்டபம் திறக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட காங்கிரஸ் தியாகிகள் அத்தனை பேருடைய படமும் அதிலே இடம்பெற வேண்டுமென்று சொல்லி படங்களும் பலரால் அனுப்பப்பட்டு அந்தப் படங்களெல்லாம் கிண்டியிலுள்ள தியாகிகள் மணிமண்டபத்திலே வைக்கப்பட்டிருக்கின்றது.

அமைச்சராக இருந்த கக்கனின் சிலையை மதுரையிலே இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு நான்தான் திறந்து வைத்தேன். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலு பெயரால் சென்னையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு பெயர் சூட்டி அவருடைய சிலையும் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வரிசையிலேதான் இன்றைக்கு இந்தத் தூண் நிறுவப்பட்டிருக்கின்றது. இதைத் திறந்து வைக்கிற அதே நேரத்தில் அவர்கள் சுதந்திரம் பெறுவதற்காகப் பாடுபட்டார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு பெற்ற சுதந்திரத்தை காப்பாற்ற சமூக விரோதச் செயல்களை கண்டிக்க காவல் நிலையங்கள் தேவையல்லவா? அப்படிப்பட்ட காவல் நிலையங்களில் ஒன்று இங்கே இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றது.

### வேலூர் மாவட்டத்தில் ரூபாய் மூன்று கோடி செலவில் காவல் நிலையங்கள்

இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் மாத்திரம் ஏறத்தாழ ரூபாய் மூன்று கோடி செலவில் வேலூர் மாவட்டத்தில் மாத்திரம் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காவல் நிலையத்தைக் கூட இங்கு இருந்தவாறே திறந்துவைத்தால் நல்லது என்று சொன்னேன். ஆனால் உங்கள் எம்.எல்.ஏ. ஞானசேகரன் தான் ஸ்டேஷனுக்கு வந்து திறக்க வேண்டுமென்று சொன்னார். நான் திறப்பதற்கு வந்தேன். அவரைத்தான் காணோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்.டி. சண்முகம் இங்கே பேசும்போது சில கோரிக்கைகளெல்லாம் இருக்கிறது; தொகுதிப் பிரச்சினைகளெல்லாம் இருக்கிறது; நிறைய பேச வேண்டும், பரவாயில்லை, பொய்கையில் நடைபெறவிருக்கிற விழாவிலே பேசிக் கொள்கிறேன் என்று சொன்னார். உங்களிடத்திலே இருக்கிற பிரச்சினைகளை பேச அவர் மேடைக்கு வந்திருக்கிறார். சில பேர் தொகுதிப் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு வராமலே இருந்தால் நான் என்ன செய்ய முடியுமென்பதை மாத்திரம் நீங்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வீரர்களின் நினைவு என்றென்றும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

*- வேலூரில் 'சிப்பாய்க் கலகம்' என்ற முதல் சுதந்திரப் போராட்ட நினைவுத்தூணை 20-12-1998 அன்று திறந்துவைத்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*

**சா**திகளைக் காணாது குறள் ஒளித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகள்

**- கலைஞர்**

# மங்கலங்கிழார்

– இரா.இளங்கோவன்

மொழிப்பற்று, மொழியின்பற்று, மொழிநிலப்பற்று இவற்றோடு மாந்தநேயம் என்னும் நான்கும் ஒருருவில் நடமாடிய பெருந்தகை மங்கலங்கிழார்.

தமிழ் எங்கே வேலியாக இருக்கிறதோ, அங்கே தமிழகம் இருக்கிறது என்பது சங்கப் பரிபாடல் உரை. அதனைக் கடைப்பிடியாகக் கொண்டு தமிழர் இழக்க இருந்த திருத்தணியைக் காத்த அடித் தொண்டர் தனித்தலைவர் மங்கலங்கிழார்.

வேலூர் மாவட்டம் அரக்கோணம் சார்ந்த புளியமங்கலம் அவர் பிறந்த மண். பெற்றோர் ஐயாச்சாமி – பொன்னுரங்கம். பிறப்பு 1897ஆம் ஆண்டு. மங்கலங்கிழார் இயற்பெயர் குப்புசாமி. புளியமங்கலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்று, சென்னை, பச்சையப்பன் உயர்பள்ளியில் பயிலும்போது, தம்மைக் காத்த தமக்கையார் தம் கணவரை இழக்கத் தமக்கையாரை தம் உழைப்பால் காக்கும் கடமையை மேற்கொண்டார்.



தச்சுவேலை செய்தார். ஆயினும், இச்சை தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வியில் இருந்தது. அதனால் அந்நாளில் சென்னை புரசைவாக்கத்தில் வழக்கறிஞர் சேசாசலம் என்பார் தமிழ் இலக்கிய இலக்கண வகுப்பு இரவுப் பொழுதில் நடத்தி வருவது அறிந்து அவரிடம் தொடர்ந்து கற்றார். அவர் நடத்தி வந்த 'கலா நிலையம்' என்னும் கிழமை இதழ்ப்பணியிலும் பெரும் பங்கு கொண்டார். அதன் பொருள்முடை தீர்வதற்காக நாடகம் நடத்தியபோது குப்புசாமியே பெண் வேடமிட்டு நடித்து நாடகத்திற்குப் பெருமை சேர்த்தார். பயன்மிக்க இதழ்களுக்கு வரும் நோய் – பொருள்முடை. 'கலா நிலையம்' நின்றது. ஆனாலும் தமிழ்க்கல்வி தொடர்ந்து நிகழ்ந்தது.

குப்புசாமிக்கு அகவை 25; (1922) கமலம் என்பாரை வாழ்க்கைத் துணையாக ஏற்றார். வாழ்வளிக்க உதவியது தச்சுத் தொழில்.

வயிற்றுப் பாட்டொடு நில்லாமல் வாழ்வுத் தொண்டுக்கு மேலும் கற்க வேண்டும் என்று விரும்பினார் குப்புசாமி. அவர்க்கு நட்பினராக இருந்த மே.வீ.வேணுகோபாலரும் தமிழ் கற்க விரும்பினார். இருவரையும் பரிந்துரைத்தார் தமிழ்புலவரும் புரவலருமாகிய கா.நமச்சிவாயர். அவர் பரிந்துரையால் பெரும் புலவர் கா.ர.கோவிந்தராசர் கனிவு கொண்டு கற்பித்தார். பல்லாண்டுகள் அவரிடம் இருவரும் பயின்றனர். பின்னாள் மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் மே.வீ.வேணுகோபாலரே உடன் மாணவர் என்பது எத்தகையபேறு!

ஆசிரியர் பெருந்தகைமை தம்மை நாடி வந்து நன்முறையில் கற்ற மாணவர் இருவரும் வயிற்றுப் பாட்டுக்காகத் தச்சுத்தொழிலும் எழுத்தர் பணியும் செய்வது, படித்த படிப்புக்குப் பயனில்லையே என்று கருதி, குப்புசாமியை பெரம்பூர் கலவல கண்ணனார் உயர்பள்ளியிலும் வேணுகோபாலரை முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளியிலும் தமிழாசிரியர் பணியாற்ற உதவினார். குப்புசாமி அப்பள்ளியில் 15 ஆண்டுகள் சிறந்த பணிபுரிந்தார்.

வாழ்க்கைத் துடிப்புமிக்க குப்புசாமிக்குக் குருதித்துடிப்பு நோய் வாட்டியது. உண்ட கடிய மருந்தால் பல் கட்டியது. அப்பற்கட்டு நீங்கப் புறவின் புலால் உண்ண வேண்டும். இல்லையேல் பல்லை எடுத்தே ஆகவேண்டும் என மருத்துவக் கட்டளை பிறந்தது. பல் இழப்பினும் பிறிது எது இழப்பினும் இழப்பேன்; புலால் தொடேன் என உறுதிப்பிடியில் நின்றார். மெய்ப்பற்களையெல்லாம் இழந்து பொய்ப் பற்களைக் கட்டிக் கொண்டு வள்ளுவ மெய்யர் ஆகத் திகழ்ந்தார் குப்புசாமி.

அவர் உடல்நிலைக்கு, உணர்வுமிக்க அவர் தமிழ்ப் பணியைவிட்டாக வேண்டும் என்று உணர்ந்தார். பணியை விடுத்தார். ஆயினும், கல்வியைத் தொடுத்தார். விடுதலை வீரர் வ.உ.சி. அந்நாளில் சென்னையில் வாழ்ந்தார்; அவரிடம் திருக்குறளைக் கற்று மேலாய்வு செய்தார். தொல்காப்பிய விளக்கமும் ஓங்கினார். பெரும்புலவர் கே.வடிவேலரிடம் வேதாந்தப் பாடம் கற்றார்.

குப்புசாமியின் தந்தையார்க்கு சிற்றூர் மணியம் அல்லது பட்டாமணியம் என்னும் பரம்பரை வேலை. அவர் இயற்கை எய்த, அப்பணி பார்க்கக் குடும்பத்தில் தக்கார் இலராக, இவரே அப்பணி ஏற்றுப் புளியமங்கலம் சார்ந்தார்.

புளியமங்கலம் மணியமான பின் சிற்றூர்ச் சூழல் அவரைத் தொண்டில் சிறகடித்துப் பறக்கும் பறவையாக்கிற்று. சென்னைச் சேசாசலா பணி வழிகாட்டியது. தமிழ்நிலம் சார்ந்த தமிழர்கள் தமிழ் எழுத்தும் அறியாராய் இருந்தனர். தமிழ்ப் பள்ளிகள் இல்லை. தமிழ் கற்பிப்பாரும் கற்பாரும் இல்லை. இவற்றின் விளைவு என்னாம்? தமிழ் மண்ணைக் கண்காண ஆந்திரமாக்குவார். வல்லாண்மைக்கே இடமாக்கி விடும் என்பதை உணர்ந்தார். இரவுப் பள்ளி அமைத்தார் இளையர்க்கும், முதியர்க்கும் தமிழ் கற்பித்தார்.

தமிழ்மணம் தென்றலாய்த் தவழ்ந்தது. வளர்புரம் என்னும் ஊரார் நம்மூரில் தமிழ்ப்பள்ளி ஏற்படுத்த விரும்பினார். குப்புசாமி வளர்புரத்தார் விரும்புதலைக் கரும்புச்சாறாகக் கருதிச் சென்று தமிழ்ப்பள்ளி வைத்தார். வளர்புரத் தமிழ் எப்படி வளர்ந்தது?

குருவராயப்பேட்டை, அம்மையார்குப்பம், மின்னல், நரசிங்கபுரம், கீழ்ப்புத்தூர், மேல்புத்தூர், நாராயணவனம், சத்திரவாடி, சிந்தலபட்டடை, பொதட்டூர்ப்பேட்டை, அத்திமாஞ்சேரிப்பேட்டை, புதுப்பேட்டை, சுரைக்காய் பேட்டை, மத்தூர், மத்தேரி முதலாய்த் தமிழ்ப்பள்ளிகள் எழுந்தன.

தமிழ் கற்பிக்க ஒருவர் போதுமா? புலவர்களைத் தாமே உருவாக்கினார். மேனிலைப் படிப்பும் பட்டமும் பெறவும் விடுத்தார். அப்புலவர்கள் வழிவழித் தமிழ் மண்ணைக் காக்கும் காவல் தெய்வங்கள் ஆயினர். தெய்வங்களின் மேலியக்க இறையாகக் குப்புசாமி ஆம்! மங்கலங்கிழார் திகழ்ந்தார்.

மங்கலங்கிழார் தொண்டுக்கு இறும்பூது எய்தியவர் திரு.வி.க., தமிழ்ப்புலவர்கள் தொண்டு சிற்றூர்களில் திகழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் திரு.வி.க. மங்கலங்கிழாரின் தொண்டினைப் பாராட்டுகிறார்.

> **தீண்டாமை இருக்கும் வரை நமக்கு முழுமையான விடுதலை கிட்டாது.**
>
> **– காந்தியடிகள்**

மங்கலங்கிழார்க்கு வித்தியானந்தர் என்றொரு பெயரும் உண்டு. பற்றற்ற இல்லறத் துறவாக வாழ்ந்து காட்டிய அவரை, "வித்தியானந்தரின் தமிழ்த்தொண்டு வடார்க்காடு சித்தூர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் செவ்வனே நடைபெற்று வருவது எனக்குத் தெரியும். அப்பெரியார் தொண்டு நிகழும் எந்தக் கிராமத்தினின்றும் அழைப்பு வந்தால் யான் உடனே ஓடுவதை ஒரு தொண்டாகக் கொண்டுள்ளேன். வித்தியானந்தரின் நிஷ்காமியத் தொண்டு (பற்றற்ற தொண்டு) என்னை ஈர்க்கிறது. அத்தொண்டு மேலும் மேலும் வளர்வதாக இன்னும் அவர் வழிவழியே பல வித்தியானந்தர் தோன்றுவாராக" என்கிறார்.

மண்ணைக் காக்கும் தொண்டில் தலைத்தொண்டு மொழித்தொண்டு என்பதை உண்மையாக உணர்ந்து தமிழ்வழக்கு நிலமாக்க அயராது பாடுபட்டார். விடுதலை பெற்ற மகிழ்விலே தமிழக அரசு திளைத்தது. தெலுங்கமும் கேரளமும் கருநாடகமும் எடுத்துக் கொண்டு எஞ்சின்ற மண் நம்மண் எனப் பெருநலம் பிரித்தது. விழிப்பில் தலைநிற்றலும், ஒன்றுபட்டு நிற்றலும் என்றும் போற்றும் அண்டை மாநில அரசுகள் கையை நீட்டிப் பிரித்தன. வடவேங்கடம் எங்களதே, சித்தூர் எங்களதே திருத்தணி எங்களதே, ஏன் சென்னையும் எங்களதே என்றனர்.

மொழிப்பற்றும் இனப்பற்றும் இல்லாத் தமிழர் இடப்பற்றும் இன்றி இருக்கும்போது, தமிழ் மண்ணினைக் காக்க எல்லைப் போரைத் தொடங்கினார்; தொண்டர்களைத் திரட்டினார். தமிழகத்தில் ம.பொ.சி. திருவாங்காடு, திருத்தணிகை, நகரி, புத்தூர், திருப்பதி ஆகிய இடங்களில் கூட்டங்கள் கூட்டி அவையெல்லாம் தமிழ்நிலமே எனப் பொதுமக்கள் உணரச்செய்தார். எல்லைப் போர் வலுப்பெற்றது. திருத்தணிகை வட்ட அலுவலகத்தின் முன் மறியல் நிகழ்ந்தது. காவல்துறையினர் அடிதடியில் இறங்கினர். அறப்போராளிகளின் தலைவராய் நின்ற கிழார்க்கும் அப்பரிசு வாய்த்தது. முடிவு என்ன தமிழ்வேங்கடத்தைக் காவு கொடுத்துக் தமிழ்த் திருத்தணிகை மீட்கப்பட்டது. மங்கலங்கிழாரின் புகழுடம்பாகத் தமிழ்முருகன் தணிகையும் தமிழகத்தோடு தங்குவதாயிற்று.

மங்கலங்கிழார் 31.8.1953 இல் இயற்கை எய்தினார்.

***"தமிழ்க்காக வாழ்ந்தமங் கலங்கிழாரின்***
***தாமரைத்தாள் வாழ்த்துகின்றோம் நாம் உய் தற்கே"***

– என்று பாடுகின்றார் பாவேந்தர்.

– தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் நூற்றாண்டு விழாவினை 24.12.1998 அன்று சென்னை எழும்பூர் அருங்காட்சியகக் கலையரங்கில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மங்கலங்கிழார் நூற்றாண்டு விழாவினையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

★

# நெற்கட்டும் செவலில் பூலித்தேவன் மாளிகை



இன்றைக்குத் திகழ்கிறது. காரணம், இது பூலித்தேவன் வாழ்ந்த பூமி என்பதுதான். எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல இந்தியாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலே 17 ஆண்டு காலம் போரிட்ட ஒரு பாளையக்காரன் உண்டென்றால் அது ஒரே ஒரு மாவீரன் பூலித்தேவன்தான்.

**"நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும்**
**நெற்கட்டும் செவல் கோட்டையன்றோ"**

என்று புகழ்ந்து பாடப்படுகின்ற இந்தப் பகுதியில் பூலித்தேவனுடைய கோட்டையைப் புதுப்பித்து பூலித்தேவனுடைய சிலையைத் திறந்து வைத்து, பூலித்தேவனுடைய வீரத்தைப் பாராட்டி, தியாகத்தைப் பாராட்டி, சுதந்திரக்கனலைப் பாராட்டி உங்களிடத்திலே சில கருத்துக்களை சொல்ல நின்று கொண்டிருக்கிறேன்.


**17 ஆண்டு காலம் போரிட்ட**
**ஒரே மாவீரன் பூலித்தேவன்**

இந்த நெற்கட்டும் செவல் புகழ்பெற்ற மண்ணுக்கு கீர்த்தி பெற்ற சொல்லுக்கு இலக்கணமாக

ஒன்றல்ல இரண்டல்ல, பதினேழு ஆண்டு காலம் தொடர்ந்து போரிட்டான். அவன் கட்டிய கோட்டையை இன்றைக்கு அதன் அடையாளம் மாறாமல் புதுப்பித்து ஏறத்தாழ 3 இலட்ச ரூபாய் அந்த பூலித்தேவனின் உறவினர்களுக்கு அந்த மனையைப் பெறுவதற்காக அரசு சார்பில் வழங்கி, மேலும் 50 இலட்ச ரூபாய் செலவிட்டு திருமண மண்டபம், தர்பார் மண்டபம், பூலித்தேவனுடைய சிலை, நூலகம், காட்சியகம் அத்தனையையும் இங்கே அமைத்திருக்கிறோம்.

**கலைநுட்பத்தோடு கட்டப்பட்ட**
**பூலித்தேவன் கோட்டை**

இந்தக் கோட்டை அந்தக் காலத்திலே எப்படி கட்டப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தபோது,



விசித்திரமாக இருக்கிறது. எவ்வளவு கலை நுட்பத்தோடு எவ்வளவு பொறியியல் நுட்பத்தோடு இந்தக் கோட்டை அன்றைக்குக் கட்டப்பட்டது என்பதை எண்ணி நான் வியப்படைகிறேன்.

பனை ஓலை, பனை நாரை பொடி செய்து கடுக்காய் பொடியைக் கலந்து அத்தனையையும் பதநீரிலே ஊறவைத்து, ஊறவைக்கப்பட்ட பதநீரோடு முட்டையைக் கலந்து அப்படிக் கட்டப்பட்ட கோட்டைதான் பகைவர்களால் அழிக்கப்பட்டது. அந்தக் கோட்டைதான் இன்றைக்கு மீண்டும் உங்களுடைய முன்னிலையிலே புதுப்பிக்கப்பட்டு பொலிவோடு தோன்றுகிறது.



இந்தக் கோட்டையைக் கட்டுவதென்று அறிவித்து 18 மாதங்கள் ஆகின்றன. கட்டுவதற்கான அனுமதி தரப்பட்டு, அனுமதி 13-1-98 அன்று வழங்கப்பட்டது என்று எனக்கு நினைவு. ஏறத்தாழ பத்து மாத காலத்தில் இந்தக் கோட்டையைக் கட்டி முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் தனவேலு, ஐ.ஏ.எஸ்., அவர்களும், பொதுப்பணித்துறையும், குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் அரும் பாடுபட்டு இதை அமைத்திருக்கிறார்கள். செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் முல்லைவேந்தன் அடிக்கடி இந்த இடத்திற்கு வந்து கோட்டை எப்படி உருவாகிக் கொண்டிருக்கிறது. சிலை எப்படி உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை எனக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய போராட்டத்திற்கு முன்பே நடத்தப்பட்ட போராட்டம் பூலித்தேவன் நடத்திய சுதந்திரப் போராட்டம் என்பதை எந்த வரலாற்றுப் பேராசிரியரும் மறைக்க முடியாது என்பதை திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியும்.

### 53 ஆண்டுகள் வாழ்ந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்

பூலித்தேவர் 1715ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் பிறந்தார். 1715 முதல் 1767 வரை 53 ஆண்டுகள் வாழ்ந்தார். 53 ஆண்டுகள்தான் வாழ்ந்திருக்கிறார். அதற்குள்ளாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் உயிர் துறந்தார். அவருடைய இயற்பெயர் காத்தப்ப துரை. ஆறு வயது சிறுவனாக இருந்தபோது திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தார். 12வது வயதிலேயே குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, வாள்வீச்சு, அம்பு எறிதல், கவண் எறிதல், வல்லயம் எறிதல் ஆகியவற்றில் போர்ப் பயிற்சிகள் பலவற்றைப் பெற்றார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச் சிலை போன்ற உடற்கட்டும் கொண்டவர் பூலித்தேவர் என்று வருணிக்கப்படுகிறார்.

வீரம், நேர்மை, தன்மான உணர்வுகள் இவற்றின் வடிவம்தான் பூலித்தேவர். அதுமாத்திரமல்ல; கொடையுள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை, எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கவழககமுடையவர். சாலை வசதிகளைச் செய்து மக்கள் பணியாற்றினார்.

ஏழை, எளியவர்கள் தங்கிட மண்டபங்கள் பல கட்டி, அந்த மண்டபங்களிலே ஏழை எளியவர்களுக்கு உணவளித்தார்.

### கப்பம் கட்ட முடியாது என்று அடித்துச் சொன்னவர் பூலித்தேவர்

குளங்கள், கிணறுகள், ஏரிகள் அமைத்து வேளாண்மையை வளர்த்தார். பல கோயில்களுக்கு திருப்பணியும் செய்துள்ளார்.

ஆர்க்காட்டு நவாபு உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு ஆங்கிலேயர்களுக்கு முதன்முதலாக கதவைத் திறந்துவிட்டவர் ஆர்க்காட்டு நவாப். அந்த ஆர்க்காட்டு நவாப்பின் முதல் ஆங்கிலத் தளபதியின் பெயர் அலெக்சாண்டர். அந்த அலெக்சாண்டர் "நெல்லைச்சீமைக்கு வரிவசூல் செய்ய வந்தார். வந்தபோது கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக்காசும் கட்ட முடியாது" என்று ஓங்கியடித்துச் சொன்னவர்தான் பூலித்தேவர்.

அதுமாத்திரமல்ல; "நெல்லாவது கொடு, வரிக்கு பதிலாக" என்று கேட்டபோது, "வரி என்று நீ கேட்டால்

ஒரு மணி நெல்லைக்கூட நான் உனக்குத் தரமுடியாது" என்று பூலித்தேவர் மறுத்துக் கூறினார். ஒரு மணி நெல்கூட தரமுடியாது, கட்டமுடியாது என்று சொன்ன காரணத்தால்தான் 'நெல் கட்டான் செவல்' என்று இந்த ஊருக்கே பெயர் வந்தது. 'நெல் கட்டான்' - வரியாக நெல்லைக் கட்டமாட்டான் என்று சொன்ன அந்தச் சொல்தான் இந்த ஊருக்கே பெயராக அமைந்தது. அதுதான் இப்போது திரிந்து, 'நெல் கட்டும் செவல்' என்று ஆகிவிட்டது.

கட்டமாட்டேன் என்று சொன்ன காலமது. நெல் கட்டும் என்று சொல்கின்ற அளவிற்கு அந்தப் பெயரே பொருளை மாற்றுகின்ற அளவிற்கு மாறிவிட்ட விபரீதம் ஏற்பட்டு விட்டது.

**பாளையக்காரர்களுடன் கூட்டணி அமைத்து போரிட்டவர்**

1806 சிப்பாய்க் கலகத்திற்கு முன்பே1857 சிப்பாய்ப் புரட்சிக்கும் முன்பே இவர் நடத்திய அந்த சுதந்திரப் போராட்டத்தில் முதல் முழக்கத்தில் ஒரு கூட்டணி அமைத்து போரிட்டிருக்கிறார். பல பாளையக்காரர்களையெல்லாம் தன்னோடு இணைத்துக்கொண்டு வெள்ளையவர்களை எதிர்த்த விவேகி பூலித்தேவர்.

கொல்லங் கொண்டான், சேத்தூர், சொக்கம்பட்டி, தலைவன் கோட்டை, ஊத்துமலை போன்ற பாளையங்களுடைய அரசர்களுடன் இணைந்து, வலுவாக கூட்டணி அமைத்து வெள்ளையனை எதிர்த்தவர் பூலித்தேவர்.

1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 ஆண்டுகள் பலமுறை வெள்ளைக்காரர்களோடு அவர் யுத்தம் செய்திருக்கிறார்.

திருச்சியில் இராபர்ட் கிளைவுடன் சண்டையிட்டதாகப் 'பூலித்தேவன் சிந்து' கூறுகிறது.

அலெக்சாண்டர் கெரானுடன் 1755இல் போர் நடத்தியிருக்கிறார்.

களககாட்டில் மாபுஸ்கானுடன் 1755இல் போர் நடத்தியிருக்கிறார். அந்தப் போரில் மாபுஸ்கான் தோல்வியுற்றார். மாபுஸ்கானை அழைத்து வந்து தன்னுடைய மாளிகையிலேயே விருந்தாளியாக வைத்து மரியாதையோடு நடத்தினார் என்று வரலாறு கூறுகின்றது.

திருவில்லிபுத்தூரில் ரகீமுடன் 1755இல் போர் நடத்தினார்.


திருநெல்வேலியில் 1756இல் போர் நடத்தினார்.

நெல்கட்டும் செவலில் 1759இல் யூசுப்கான் என்று சொல்லப்படுகின்ற கான்சாகிப்போடு போர் நடத்தியிருக்கிறார்.

வாசுதேவ நல்லூரில் 1759 மற்றும் 1760 ஆகிய ஆண்டுகளில் யூசுப்கானுடன் மீண்டும் போர் நடத்தியிருக்கிறார்.

1761இல் நெல் கட்டும் செவல், வாசுதேவநல்லூர் கோட்டைகளில் அதே யூசுப்கானுடன் மறுபடியும் போர் நடத்தினார்.

1767இல்



வாசுதேவநல்லூரில் ஆங்கிலத் தளபதி டோனால்டு காம்பெல்லுடன் நடத்திய போர்தான் கடைசிப் போராகும்.

இவற்றைத் தவிர கங்கைகொண்டான், ஆழ்வார் குறிச்சி, சேத்தூர், கொல்லங்கொண்டான், ஊத்துமலை, சொக்கம்பட்டி, தலைவர்கோட்டை ஆகிய கோட்டைகளில் நடைபெற்ற போர்களிலும் பூலித்தேவன் பங்கு பெற்றார்.

**பூலித்தேவர் புகழ்பாடும் பல்வேறு பாடல்கள் வெளிவந்தன**

இந்த மாவீரனுடைய புகழைப் பாட பூலித்தேவன் சிந்து, புதுக்கோட்டைச் சண்டை, பூலித்தேவன் வண்ணக் கோடாங்கிப் பாடல்கள், பூலித்தேவன்

உடுக்கு அடிக்கும் பாடல், பூலித்தேவன் கும்மிப்பாடல்கள், பூலித்தேவன் தாலாட்டுப் பாடல், பூலித்தேவன் ஒப்பாரிப் பாடல் என்று பல பாடல்கள் பூலித்தேவன் பெயரால் வெளியாகி பல பகுதிகளிலே பாடப்படுகிற நிகழ்ச்சியையும் உங்களிலே பலர் அறியக்கூடும்.

அமெரிக்க உள்நாட்டுப் போர், பிரெஞ்சுப் புரட்சி ஆகிய புரட்சிகள் நடைபெறுவதற்கு முன்னரே இந்தியாவில் விடுதலைப் புரட்சியை நடத்தியவர்தான் இங்கே நம்முன் சிலையாக நிற்கின்ற மாவீரன் பூலித்தேவன் என்பதை நான் சொல்லுகின்ற நேரத்திலேயே வீரம் கொப்பளிக்கின்றது. அப்படிப்பட்ட வீரன் வாழ்ந்த மண் இந்த மண். அந்த பூலித்தேவருக்குத் துணையாக யார் யார் இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கேதான் நேற்று மாலை நடைபெற்ற சமுதாய நல்லிணக்க நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தச் செய்தியை நான் உங்களுக்கு திரும்பச் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர் வெள்ளையத்தேவன் பாதர் வெள்ளை..அந்த வெள்ளையத்தேவனுடைய ஆருயிர் நண்பன் சுந்தரலிங்கம். சுந்தரலிங்கம் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர். வெள்ளையத்தேவனும் வீரன் சுந்தரலிங்கமும் இணைந்து பல போராட்டங்களை வெள்ளைக்காரர்களோடு நடத்தியிருக்கின்றார்கள். வீரன் சுந்தரலிங்கம் - கட்டபொம்மனைக் காப்பாற்றுவதற்காக, வெள்ளையத் தேவனைக் காப்பாற்றுவதற்காக தன்னைத்தானே மாய்த்துக் கொள்கின்ற தற்கொலைப் படை வீரனாக மாறி உயிர் நீத்தவர்.

கட்டபொம்மனுக்கு கோட்டை கட்டியவன் மாத்திரமல்ல இந்த கருணாநிதி, அந்த சுந்தரலிங்கத்திற்கும், சுந்தரலிங்கம் நகர் என்ற ஒரு நகரை நிர்மாணித்து அண்மையிலே திறந்துவைத்தவன்தான் நான். ஏன் சொல்கிறேன் என்றால், அந்தப் போராட்டத்திலே வெள்ளையத் தேவன், சுந்தரலிங்கம் என்ற ஆதிதிராவிடர் - இந்த இருவரும் ஒன்றாக இணைந்து நின்று சுதந்திரப் போராட்டத்தை நடத்த முடிந்தது.

**பூலித்தேவனுக்கு உதவியாக இருந்த ஆதிதிராவிட வீரர்கள்**

அதைப்போலத்தான் பூலித்தேவனுக்கு உதவியாக முன்னணியில் இருந்தவர்கள் பகடை ஒண்டி வீரன், வெண்ணிக்காலாடி - இவர்கள் இருவரும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

இருவரும் பூலித்தேவனுக்கு உதவியாக முன்னணியிலே இருந்தவர்கள். அதுமாத்திரமல்ல, இவர்களுடன் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த தளபதிகள் 350 பேர் பூலித்தேவனுக்கு உதவியாக இருந்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

அந்தக் காலத்தையும் எண்ணிப்பாருங்கள். இந்தக் காலத்தையும் எண்ணிப்பாருங்கள். சமுதாய நல்லிணக்கத்திற்கு இன்று சொல்லப்பட்ட செய்தியையும் எண்ணிப்பாருங்கள். நேற்று சொல்லப்பட்ட செய்தியையும் எண்ணிப்பாருங்கள். ஒரு வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும் ஒன்றாக இருக்க முடிந்தது. அதைப் போல ஒரு பூலித்தேவனும், பகடை ஒண்டி வீரனும், வெண்ணிக்காலாடியும் ஒன்றாக இருக்க முடிந்தது. இன்றைக்கு முடியவில்லையே? என்ன காரணம்?

என்ன சதி இடையிலே குறுக்கிட்டது. அந்தச் சதியை முறியடிக்க வேண்டாமா? நாமெல்லாம் தமிழர்கள். தமிழர்களுக்காக இருக்கின்ற அரசு தமிழர்களுக்காக இருக்கின்ற நாடு என்கின்ற அந்த உணர்வைப் பெற வேண்டாமா?

- நெல்லை மாவட்டம், நெற்கட்டும் செவலில்
28-12-1998 அன்று **பூலித்தேவன்** மாளிகையைத்
திறந்துவைத்து,
மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

**எத்தனை உயிர்கள்! எத்தனை ரத்தம்!**
**நித்தமும் தந்து பெற்றது விடுதலை!**
**இத்தரை குடைந்து மெத்தவும் உழன்று**
**பத்தரை மாற்றைப் பெற்றபின் அதனைக்**
**கைத்திறம் காட்டி அணிநகை பூட்டிச்**
**சித்திரப் பெண்டிர்க் களித்திடலன்றிக்**
**குப்பைக் குழியில் போடுதல் நன்றோ?**
**- கலைஞர்**



# இழந்தது

– செ.யோகநாதன்

மெல்லிய குளிராயினும் உடம்பு சூடாக இருந்தது. அழுதுவடியும் விடிகாலையில் மௌனம் இனந்தெரியாத அச்சத்தை உண்டாக்கிற்று. அதுவும் வீட்டுவாசலில் கட்டப்பட்டிருந்த வாழை மரங்கள் பளீரென்று நெஞ்சை உதைத்தன. நெஞ்சு படபடவென்று அடிக்கத் தொடங்கிற்று. சட்டென்று நாவறண்டது. வார்த்தைகளை இழந்து போனாற்போலச் சுருண்டது. கையில் லேசாயிருந்த சூட்கேஸ் இரும்புக் குண்டாகக் கனக்கத் தொடங்கிற்று. நெற்றியிலும், மார்பிலும் வேர்வைத் துளிகள் பொலபொலவென்று அரும்பின. தலை சுற்றுவது போல உணர்ந்தான்.

கண்ணன் வந்திட்டீங்களா?



அந்தக் குரல் அவனது தோளில் தொட்டது. தளர்ந்து சரியப்போன அவனைப் பிடித்து நிறுத்திற்று. விவேகானந்தன் பரிவோடு அவனது வலது கையைப் பற்றிக்கொண்டார்.

"உங்க மாமியார் நேற்றுச் சாயந்தரம் காலமாயிட்டாங்க. கடைசி மூச்சின் போதும் உங்களைத் தேடினாங்க..." விவேகானந்தனின் குரலில் கவலை விம்மிற்று.

"அருமையான பிறவி...இரவு முழுவதும் தூக்கமே வரேல்லை...பாருங்க..."

கண்ணனின் மனம் இப்போது லேசாவதை உணர்ந்தான். அதற்குள் ஏற்பட்ட அதிர்ச்சியில் எத்தனை நினைவுகள் மனதைக் கொதறிவிட்டன. நான்கு நாட்களின் முன்னர் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது, பவதாரிணிக்கு உடலைத் தூக்கி எறிந்து கொண்டிருந்த வினோதமான காய்ச்சல். டாக்டர் கூட நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். "அப்பா அப்பா" என்று வேதனையோடு முனகியவளை வாத்சல்யத்தோடு நெற்றியில் தடவி விட்டான். அவள் முனகியவாறே தூங்கிப்போனாள். வினோதன் எப்போதும் வேகமாகவே சைக்கிளில் செல்வான். நாலைந்து முறை கருணாகரனே வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். "என் காருக்கே வெகு அருகே மூர்க்கமாகப் பறந்து வந்தான். சட்டென்று பிரேக் போட்டேன். ஆனால் இன்னொரு வாகனம் வந்திருந்தால் யாரும் காப்பாற்றி இருக்க முடியாது. வினோதனைக் கொஞ்சம் எச்சரிக்கை பண்ணிவை..." நீலாவுக்கு சென்ற வாரம் நெஞ்சடைத்தது, டாக்டர் பரிசோதித்துவிட்டு இரத்த அழுத்தம் 110-171 என்று சொல்லி விட்டு கண்ணனை வெளியே கூட்டிச்சென்று, "ஜாக்கிரதையாக உங்க மனைவியைக் கவனிக்க வேணும். கொஞ்சம் தவறி இருந்தால் சிவியர் ஹார்ட் அட்டாக் வந்திருக்கும்" என்றார். அன்று இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை, விடிந்ததும் வீட்டு வேலைகள் செய்ய வேலைக்காரி கனகத்தை ஏற்பாடு செய்துவிட்டான். நீலாவுக்காக உப்பு, காரம், கொழுப்பு யாவையும் உணவில் விட்டு விடுவதற்கு அவனும் வினோதனும், பவதாரணியும் முடிவுசெய்தனர். வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது நீலாவை அத்யந்தமாக அவன் பார்த்தப்போது புன்னகையோடு, "எனக்கு எண்பது வயது வரை ஆயுள் பலம் இருக்குது, பயப்படாமல் போய்விட்டு வாருங்கள்" என்றாள்.

தொலைவில் வாழைமரங்கள் வீட்டுவாசலில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டபோது, இந்தச் சம்பவங்கள் அலைமோதி அவனைத் தடுமாறச் செய்தன.

மாமியார் நினைவில் வரவேயில்லை. தன்னை அறியாமல் பெருமூச்சு விட்டான்.

“வாருங்க...” என்றவாறு அவன் எதிரே கண்களைத் துடைத்தவாறு வந்தாள் நீலா. குரல் தளதளத்து உடைந்து விம்மியவளை மெல்லத் தோளில் தொட்டு ஆதரவான குரலில், “நீலா...டென்சன் ஆகக்கூடாது. உடம்புக்கு நல்லதில்லை” என்றான். அவள் அதைக்கேட்டதாகத் தெரியவில்லை. அழுகை சூழிக்க, “அம்மா, கடைசிவரை உங்களைக் கேட்டுக்கொண்டேயிருந்தா...உயிர் போகிறபோது கூட சுவரில் மாட்டியிருந்த உங்க போட்டோவிலதான் கண்குத்திட்டு இருந்தது...என்றாள்.

சூட்கேசை சுவர் ஓரமாக வைத்துவிட்டு நடு ஹாலில் தூங்குவதுபோலக் கிடந்த மாமியாரை - லட்சுமி அம்மாவைப் பார்த்தான். தலைமாட்டிலிருந்த குத்துவிளக்கின் சுடர் ஒளியில் மூக்குத்தி மின்னிற்று. நம்ப முடியவில்லை இந்த மரணத்தை. அவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது எந்த நோய் நொடியும் இருக்கவில்லை, வெளியே வந்து பார்த்துவிட்டு, “நீலா, அவரைப் புறப்படச்சொல்லு...நல்ல சகுனம்” என்றாள் கணீரென்ற குரலில் லட்சுமி அம்மாள். அவன் வெளியே புறப்படும்போது எப்போதும் இப்படித்தான். இந்த இருபத்திரெண்டு வருஷகாலத்திலும் அவர்களோடுதான் வாழ்ந்து வருகிறாள். ஆனால், ஒருநாள் கூட அவனோடு நாலைந்து வார்த்தைகளுக்கு மேல் பேசியதில்லை, அவனும்தான்.

பவதாரணியும் வினோதனும் அப்பாவைக் கண்டதும் அருகே வந்தனர். இருவரும் கண்கலங்கி அழுதனர். மௌனமாக அவர்களைப் பார்த்தான். கண்ணன், பிறகு நீலாவைப் பார்த்து, “கதிரவனுக்கும் வித்தியாவுக்கும் செய்தி சொல்லியாகிவிட்டதா?” என்றான்.

“எல்லோருக்கும் ‘போன்’ பண்ணினோம் அப்பா. விழுப்புரம் மாமாவுக்கும் கமலா அத்தைக்கும் ‘டெலிகிராம்’ கொடுத்தோம்; அனேகமாக எல்லோரும் காலையில் வந்திடுவாங்க...” என்றான் வினோதன்.

பவதாரணி இயல்புக்கு வராமல் நேற்றைய நினைவிலேயே மனம் அழுந்தி நின்றாள், “அப்பா, பாட்டி, உங்களைத்தான் கடைசிவரை கேட்டா...” விம்மினாள்.



“பாரம்மா, சும்மா அழக்கூடாது. அப்புறம் மீண்டும் ஜுரம் வந்துவிடும்...”

பவதாரணி சுவர் ஓரமாக உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் கழிந்துபோய் விட்ட. இனந்தெரியாத சோகம் இன்னமும் அங்கே சூழ்ந்திருந்தது, வந்துபோனவர்களெல்லாம் லட்சுமி அம்மாவை வியந்து பேசிய வார்த்தைகள் கண்ணனின் மனதில் அழுத்தமாகப் பதிந்திருந்தன. நடு ஹாலில் மாட்டப்பட்டிருந்த தனியான போட்டோவைப் பார்த்தான், பத்து வருஷங்களின் முன்னே அவனது மாமனார் நடராசனே கட்டாயப்படுத்தி எடுத்த போட்டோ. கம்பீரமான தோற்றமுள்ள லட்சுமி அம்மா உயிரோடு புன்னகை செய்வது போல அவனுக்குத் தெரிந்தாள். பெரிய, தீட்சண்யமான கண்கள், வட்டமான முகம், எப்போதும் லேசான புன்னகை, கூர்மையான மூக்கு இந்திரா காந்தியை நினைவூட்டும் பிரகாசமான முகத்தில் அழகூட்டும் திலகம்.

முதல் நாளன்று, அந்த வீட்டுக்கு வந்தபோது லட்சுமி அம்மாதான் அவனை வரவேற்றாள், பளீரென்று இருந்தாள், எவரையும் வசீகரிக்கிற புன்னகை, நீலாவை உள்ளே போய்க்கூப்பிட்டாள். பின்னர் அவன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனுக்குப் பிரியமான லட்டு, மெதுவடையை அவளே தயாரித்துக் கொடுத்தாள். நீலாவை அவன் காதலிக்கிற செய்தி தெரிந்தபோது முகத்தில் லேசான தயக்கம் பரவி அழிந்தது. சுகுமாரனுக்கு நீலாவை நினைத்துவைத்திருந்தாள். பிறகு தானாகவே, “நீலாவின் விருப்பப்படியே நடக்கட்டும். அவர் மிகவும் நல்லவர்” என்றாள். “அம்மாவுக்கு என்ன சொக்குப்பொடி போட்டீங்க” என்றாள் முகம் மலர்ந்த மகிழ்ச்சியோடு கண்ணனைப் பார்த்து நீலா.

இருபத்திரண்டு வருஷங்கள் அக்கவுண்டனாகி மேலே மேலே உயர்வுகள் பெற்றபோது அலைச்சல்கள் அதிகமாகிவிட்டன. ‘ஆடிட்’ அது இதென்று ஓயாத வேலைகள்.

நீலா பள்ளி ஆசிரியை. வீட்டு வேலைகள் யாவற்றையும் அக்கறையோடு செய்யும் தாயாரை வாஞ்சையோடு பார்ப்பாள் நீலா.

சுத்தம், எதிலும் சுறுசுறுப்பு, களைப்பறியாத முகம், என்றாலும் இரண்டு வருஷங்களாக உடலில் தளர்வு தெரிந்தது. வைட்டமின் மாத்திரை சாப்பிட மறுத்துவிட்டாள், நீலா வலிந்து வேலைசெய்து அவளுக்கு ஓய்வுதந்தாள். ஆனால், கண்ணனுககுப் பிரியமான பலகாரங்களை அடிக்கடி அவளே செய்து கொடுப்பாள்.

வெளியே ஏதோ சத்தம் கேட்டது. விவேகானந்தன் உள்ளே வந்தார். மௌனமாக அவனுக்கு அருகே உட்கார்ந்திருந்தார். எதையோ நினைத்தவரின் கண்களிர் கண்ணீர் பெருகிற்று. துண்டால் வாயை மூடிக்கொண்டார்.

கண்ணனுக்கு விவேகானந்தரின் போக்கு ஆச்சரியத்தை அளித்தது, அவனது மாமியார் இறந்து போனதற்காக அவனது கண்களிலிருந்து ஒருசொட்டுக் கண்ணீர்கூட இதுவரை வரவில்லை, அறுபது வயதை எட்டிய லட்சுமி அம்மாவின் இழப்பு மனதை உறுத்தியதுதான், ஆனால் அவர்களோடு எந்தச் சொந்தமும் இல்லாத விவேகானந்தனுக்கு ஏன் இவ்வளவு கவலை? கண்ணீர் சொரிகின்ற சோகம்?

"பத்து வருஷமா இந்தக் கடையை நடத்தி வருகிறேன். ஒவ்வொரு நாளும் என் கடைக்கு வருவாங்க. அதுவல்ல விஷயம். உங்க மேல அந்த அம்மா வைத்திருந்த அன்பை இந்தக் கடையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருப்பேன். எனக்குப் பொறாமையே உண்டாகும். நீங்க காலையில் வெளியே புறப்படும்போது சகுனம் பார்ப்பாங்க. நீங்க வெளியே இறங்கிப் புறப்பட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டே நிற்பாங்க. சாயந்தரமும் அப்படித்தான். நீங்க வரும் வரை அதோ பாருங்க வாசற்படியில் அந்த இடத்தில் உட்கார்ந்திருப்பாங்க. ரோட்டிலேயே பார்வை இருக்கும். உங்களைக் கண்டதற்குப் பிறகுதான் உள்ளே போவாங்க... ஒரு நாளல்ல, பல தடவை இரவு பத்து, பதினொரு மணிவரை, நீங்க வரும் வரை அவங்க இந்த வாசற்படியில் உட்கார்ந்திருந்ததை நான் பார்த்திருக்கிறேன்..."

விவேகானந்தரின் வார்த்தைகள் அவனுக்கு ஆச்சரியத்தை விதைத்தன. எதேச்சையாக ஒன்றிரெண்டு தடவைகள் தான் லட்சுமி அம்மாவை அவன் வீட்டு வாசலில் கண்டிருக்கிறான். விவேகானந்தன் சொன்ன வார்த்தைகள் அவனையறியாமலே நெஞ்சை உலுப்பத் தொடங்கின.

நீலா அவனோடு பேசிக் கொண்டிருக்கிறபோது அவனுக்கு விருப்பமானதென்னை என்று கேட்பாள். சொல்வான், தேனில் ஊறவைத்த பலாச்சுளை, லட்டு, போளி, மெதுவடை, கத்தரிக்காய் சட்னி. சொன்னதற்கு மறுநாளே அவனுக்கு அது கிடைக்கும். ஆச்சரியமாக நீலாவைப் பார்ப்பான். அவள், "இதெல்லாம் உங்க மாமியார் உபயம்" என்பாள். அப்போதெல்லாம் ருசித்துச் சாப்பிட்டுவிட்டு புன்னகை செய்வான். அவ்வளவுதான்.

நீலாவின் தங்கை வித்யா. அவள் கணவன் கதிரவன் விமானி. அடிக்கடி மாமியாரைப் பார்க்க வருவான். நிறையப் பொருட்கள் கொண்டு வருவான். வித்யா அவனைக் கேலி செய்வாள். ஆனாலும் முகத்திலே அளவுமீறிய பெருமையிருக்கும். இறந்துபோன லட்சுமி அம்மாவைப் பார்த்து அவன் விம்மி விம்மி அழுதான். அந்த அழுகை மனதை உலுப்பிற்று. கண்ணனுக்கு இது வினோதமாயிருந்தது.

தனியே உட்கார்ந்திருந்த கதிரவனை விவேகானந்தன் ஆறுதல் படுத்தினான். கதிரவன் தளதளத்த குரலிலே கூறினான்; "அருமையானவங்க, என்னால் அவங்க மரணத்தை நம்பவே முடியவில்லை. இன்னும் பல வருஷங்கள் இருந்திருக்கலாம். அன்பானவங்க இறந்து

> **தீண்டாமையை வளர்க்க**
> **நினைத்தால்**
> **தேசம் இனிமேல்**
> **எதற்காக?**
>
> **- புலவர் மு.விரையன்**

போய்விடுகிறது பெரிய துயரம். அவங்க எத்தனை வயசானவங்களாக இருந்தாலும்கூட....அது தாங்க முடியாத இழப்புத்தான்..."

கண்ணனின் காதிலும் இந்த வார்த்தைகள் விழுந்தன.

கோயம்புத்தூருக்கு அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்த கண்ணன் நீலாவைப் பார்த்து, "நான் புறப்படலாமா?" என்றான். நீலாவும் பவதாரிணியும் மௌனமாக அவனைப் பார்த்தனர். நீலாவின் கண்கள் கலங்கின.

கண்ணன் ஹாலையும் வெளிப்புறத்தையும் நோட்டம்விட்டான். எல்லாம் வெறுமையாயிருப்பது போலத் தோன்றிற்று. எங்கும் மௌனம் வேதனையோடு முனகுகிறாய்போல் உணர்ந்தான். உற்சாகமின்றி வெளியே புறப்பட்டான்.

வெளியே இறங்கிக் கொஞ்சத் தூரம் நடந்தவன் தன்னையறியாமலே திரும்பிப் பார்த்தான். வாசற்படியில் யாருமில்லை. அந்த வெறுமை மனதை சட்டென்று அரக்கத்தனமாக உலுப்புவதுபோல உணர்ந்தான். வாசற்படிக்கு எதிரேயுள்ள கடையில் உட்கார்ந்து தன்னையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த விவேகானந்தன், ஏதோ சொல்வதாய் நினைத்தான்.


கண்ணனின் நெஞ்சுள் சட்டென்று விம்மல் முட்டிற்று. அவனால் தன்னைச் சமாளிக்க முடியவில்லை. வெறிச்சோடியிருந்த வீதியில் அவன் விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

*- தமிழரசு இலக்கிய மலரிலிருந்து...*

# ஊனமா?


– அ. அப்துல்லா அஹமத்

ஓ! மானிடனே!
உனக்கு ஊனமா?
இல்லை.
எழுத்திலே நடக்கிறாய்!
கருத்திலே ஓடுகிறாய்!!
ஊனத்தையே
ஊனமாக்கி ஓயாது உழைத்து
மானிட தர்மத்தை
காக்கிறாய்
உனக்கா ஊனம்!
இல்லை.
எண்ணம் தடுமாறுவோரே
உண்மையில் ஊனமுற்றோர்
உனக்கு ஊனம் என்பவர்கள்
கண்ணிலே ஊனமுடையவர்கள்
கருத்திலே ஊனமானவர்கள்!



# வீரத் தியாகி விஸ்வநாததாஸ் நினைவகத் திறப்பு விழா

வீரத் தியாகி **விஸ்வநாததாஸ்** நினைவில்லத்தையும், அந்த இல்லத்தில் அமைந்துள்ள நூலகத்தையும், அந்த இல்லத்தை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தையும் அந்தப் பெருமகனுடைய சிலையையும் திறந்து வைக்கின்ற இந்த உணர்ச்சி மிகுந்த வைபவத்தில் இந்த வட்டாரத்தில் உள்ள பயனாளிகள் பலருக்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவில் பல்வேறு அரசு உதவித் திட்டங்களை



வழங்குகின்ற நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டிருப்பது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தியாகி விஸ்வநாததாஸ் தியாகத் திருவிளக்காக, இந்த நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட மாபெரும் கலைஞராக வாழ்ந்தவர். இன்றைக்கும் நமது நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தியாகி விஸ்வநாததாஸ்.

ஒரு வாரப் பத்திரிகையில் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் எழுதிய கட்டுரை ஒன்று என்னுடைய கவனத்திற்கு வந்தது. அந்தக் கட்டுரையில்தான் வீரத்தியாகி விஸ்வநாததாஸ் அவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

**சுந்தரலிங்கம் வாரிசுகளுக்காக ஒரு நகரமே நிர்மாணிக்கப்பட்டது**

அதற்கு முன்பே 'விகடன்' பத்திரிகை என்று கருதுகிறேன். அந்தப் பத்திரிகையில் வீரன் சுந்தரலிங்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தளபதிகளில் ஒருவர் வீரன் சுந்தரலிங்கம்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு – முன்பிருந்த கழக அரசு கோட்டை கட்டி எழுப்பியது. அவருடைய வாரிசுதாரர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுத்து வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. ஆனால் கட்டபொம்மனுக்கு, தளபதியாக இருந்த சுந்தரலிங்கத்தினுடைய வாரிசுதாரர்கள், வழித்தோன்றல்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று 'விகடன்' பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதப்பட்டிருந்தது. அந்த வாரிசுதாரர்களின் பெயர்கள் சிலவற்றையும், 'விகடன் ஏடு'

குறிப்பிட்டிருந்தது. உடனடியாக நான் அந்த வாரிசுதாரர்களுக்கு கடிதம் எழுதச் சொல்லி, அவர்களை வரவழைத்துப் பேசி, சுந்தரலிங்கம் பெயரால் கட்டபொம்மன் கோட்டைக்குப் பக்கத்திலேயே, "வீரன் சுந்தரலிங்கனார் நகர்" என்ற ஒன்றை அமைத்து அங்கே 200 வீடுகளைக் கொண்டு ஒரு நகரமே நிர்மாணிக்கப்பட்டு அங்கே அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்து, சுந்தரலிங்கத்தினுடைய வாரிசுகள், வழித்தோன்றல்கள் அத்தனை பேரையும் அங்கே குடியமர்த்துகின்ற காரியத்தைச் செய்து முடித்தேன்.

### குமரி அனந்தன் கட்டுரையைப் படித்தவுடன் கோட்டையில் அறிவிப்பு

அதைப்போல 'குமுதம்' பத்திரிகையைப் படித்தவுடன், அதில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் எழுதிய கட்டுரையைப் படித்தவுடன், படித்த மறுநாள் ஆகஸ்டு 15 – அவர் இங்கே குறிப்பிட்டதைப்போல – சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றுகின்ற நாளின்போதே நான் குறிப்பிட்டேன்; "வீரத் தியாகி விஸ்வநாததாசுக்கு அவர் வாழ்ந்த இடத்திலேயே, அந்த வீட்டிலேயே நினைவகம் அமைக்கப்படும்" என்று சொன்னேன்.

**ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப்பதுதான் மதங்களின் நோக்கம்**

**– காந்தியடிகள்**

அந்த எண்ணத்தை வெளியிட்டு அதை உடனடியாக செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் காசி விஸ்வநாதன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, மிக விரைவில் அதைக் கட்டி முடித்திருக்கிறார். அவருக்கும் அவருக்குத் துணையாக இருந்த பொதுப்பணித்துறைக்கும், மற்ற நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை, பாராட்டுதலை, வாழ்த்துக்களை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இல்லம் கடனில் மூழ்கிய காரணத்தால் – ஒருவர் அதை ஏலத்தில் 2000 ரூபாய் அளவிற்கு எடுத்து தன் வசப்படுத்தியிருந்தார். அந்த இல்லத்தில் எப்படி நாம் நினைவு இல்லம் எழுப்ப முடியும் என்று யோசித்தபோது, அவரிடத்திலே பேசி 11 இலட்சம் ரூபாய் அந்த இல்லத்திற்காகத் தந்து, மேலும் 50 இலட்சம் ரூபாய் செலவழித்து ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்டதுதான் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் என்பதை உங்களிடம் நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

### இரயிலடி வரை சென்று தியாகிகளை வழியனுப்பி வைத்த ஒரே முதல்வர்

1969–ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்தக் கால கட்டத்தில், 1972ல் இந்திய சுதந்திரத்தின் வெள்ளிவிழா ஆண்டின்போது இந்தியாவின் தலைநகரான டெல்லிக்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தியாகிகளை அனுப்பி வைத்தார்கள். ஆனால் அப்படி அனுப்பி வைக்கப்பட்ட தியாகிகளை இரயிலடி வரையிலே சென்று அவர்களுக்கு சால்வை அணிவித்து வழியனுப்பி வைத்த ஒரே ஒரு மாநில முதலமைச்சர் நான் தான் என்பதை உங்களுக்கு அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்வேன்.


டெல்லிக்குச் சென்ற மற்ற மாநிலங்களின் தியாகிகள் எல்லாம் எவ்வளவு வசதிக் குறைவால் கஷ்டப்பட்டார்கள். ஆனால் நம் மாநிலத்திலிருந்து சென்ற தியாகிகள் எவ்வளவு வசதியாகச் சென்று திரும்பினார்கள் என்பதும், அவர்களே மற்றவர்களிடம் கூறிய செய்திகளாகும். அது நம்முடைய இலக்கியச் செல்வருக்கும் தெரிந்த ஒரு செய்திதான்.

### குமரி அனந்தன் கோரியபடி தியாகிகள் மணிமண்டபம் அமைக்கப்பட்டது

இலக்கியச் செல்வரைப் போன்றவர்கள் – இந்த விஸ்வநாததாஸ் இல்லம் மாத்திரமல்ல; இலக்கியச் செல்வர்தான் சென்னையில் காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் பல வடநாட்டுத் தலைவர்கள் எல்லாம் கலந்துக் கொண்ட விழாவில், காங்கிரஸ் கட்சியினுடைய முதுபெரும் தலைவர் நிஜலிங்கப்பா கலந்து கொண்ட விழாவில், கேப்டன் லட்சுமி அம்மையார் கலந்து கொண்ட அந்த விழாவில் குமரி அனந்தன் தான் சொன்னார், "தியாகிகளுக்கு ஒரு மணிமண்டபம் அமைக்க வேண்டும்" என்று அவர்தான் சொன்னார். அது கடந்த சில வாரங்களுக்கு முன்பு சென்னையிலே இராஜ்பவனுக்கு அருகிலே அமைக்கப்பட்டு தமிழகத்திலே இருக்கின்ற எல்லா தியாகிகளின் படங்களும் அங்கே வைக்கப்பட்டு அந்த விழாவும் நடத்தப்பட்டது. அதற்கு நான் குமரி அனந்தன் அவர்களை அழைத்திருந்தேன்.

யார் காரணகர்த்தாக்களாக இருந்து தூண்டி விடுகிறார்களோ, அவர்களை அந்த விழாக்களுக்கு அழைப்பது ஒரு பண்பாடு என்ற முறையிலே அவரை அழைத்தேன். அதைப்போல சட்டமன்றத்திலே நண்பர்கள் சந்தானம் அவர்களும், வல்லரசு அவர்களும், "சுதந்திரதின பொன்விழாவின் போது நேதாஜியின்

சிலையை சென்னையில் அமைக்க வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையை ஏற்று சென்னை கடற்கரையில் நேதாஜியின் சிலையைத் திறந்து வைத்தேன். அதற்கு அந்தப் பண்பாட்டு



உணர்வோடு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் அய்யணன் அம்பலம் அவர்களை அழைத்து அந்த திறப்பு விழா நிகழ்ச்சியை நடத்தினேன். காரணம்; தூண்டுதலாளர்களாக இருந்தார்கள் என்பதால்!

அதைப்போல இன்றைக்கு இந்த விழாவிற்கு இலக்கியச் செல்வர் குமரி அனந்தனை அழைத்திருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் வேறு ஒன்றும் அல்ல; சில பத்திரிகைகளில் கூட பார்த்தேன். "கருணாநிதி தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து வரும் போதெல்லாம்; காங்கிரஸ்காரர்களை அழைத்து அவர்களுக்கு விருதுகள் கொடுப்பார்" என்று ஒரு தலைவர் பேசியதை இன்று பத்திரிகைகளில் பார்த்தேன்.

**வ.உ.சி. இழுத்த செக்கை சென்னையில் கண்காட்சிப் பொருளாக வைத்தோம்**

1969 –ல் நான் முதலமைச்சராக வந்தபோது வ.உ.சிதம்பரனார் அவர்கள் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லி, அது கோவை சிறைச்சாலையில் இருப்பதைக் கண்டு, அதைக் கொண்டு வந்து அந்த செக்கை – சென்னையில் வைத்து கண்காட்சிப் பொருளாக ஆக்கியவன் இந்தக் கருணாநிதி. அப்பொழுது ஒன்றும் கருணாநிதிக்கு ஆட்சி போய்விடும் என்ற கவலை இல்லை, அச்சம் இல்லை, பயம் இல்லை.

நல்லதைச் சொன்னால், நல்லதை நினைவூட்டினால் நினைவூட்டியதை இன்று செய்து முடித்திருக்கிறோம். தொடர்ந்து பல விஷயங்களை இங்கே அவர்கள் சொன்னார்கள். இங்கே உள்ள தெருக்களுக்கு பெயர் வைக்க வேண்டும் என்பதைப் பற்றிக்கூட இலக்கியச் செல்வர் சொன்னார்.

**தெருக்களுக்கு பெயர் சூட்ட அரசு தயாராக உள்ளது**

அவர் இன்றைக்குச் சொல்கிறார். ஆனால் நம்முடைய என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் 22.12.98 தேதியிட்டு ஒரு கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் திருமங்கலத்தில் டிசம்பர்

27ஆம் தேதி தாங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் மறைந்த மூத்த தியாகிகளின் நினைவாக எங்கள் தந்தையார் திரு.என்.வீரபத்திரத் தேவர் வாழ்ந்த ஜவஹர் நகர் 7வது தெருவின் பெயரை "தியாகி என்.எஸ்.வீரபத்திரன் தெரு" என்றும், திரு.புலி எஸ்.மீனாட்சி சுந்தரம் அய்யர் வாழ்ந்த உசிலம்பட்டி சாலையை, "தியாகி புலி மீனாட்சி சுந்தரம் தெரு" என்றும் பெயர் மாற்றி, தாங்கள் இந்த நிகழ்ச்சியிலே அறிவிக்க வேண்டும் என்று மெத்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று என்.எஸ்.வி.சித்தன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

இதை நான் அறிவிப்பதற்கு பதிலாக, இங்கே நகராட்சி மன்றத் தலைவர் அதியமான் அவர்களுக்கு சிபாரிசு செய்கிறேன். நகராட்சி மன்றத்திலே இதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை அரசுக்கு அனுப்பினால், அதை அரசு ஏற்றுக் கொண்டு – அந்தப் பெயர்களைச் சூட்டத் தயாராக

இருக்கிற என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஸ்வநாததாஸ் வாரிசுகளை இந்த அரசு கைவிட்டு விடவில்லை**

தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் வாரிசுகளை இந்த அரசு கைவிட்டு விடவில்லை என்பதற்கு அடையாளமாக சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

விஸ்வநாததாஸ் அவர்களின் முதலாவது மகன், தியாகி சுப்பிரமணியதாஸ் காலமாகி விட்டார். இவரது துணைவியார் திருமதி கண்ணம்மாள். இந்த அம்மையாருக்கு மைய அரசின் தொடர் ஓய்வூதியமாக 3000 ரூபாய் கிடைக்கிறது. மாநில அரசு ஓய்வூதியமாக 500 ரூபாயும், மருத்துவப்படியாகக 15 ரூபாயும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

அடுத்து விஸ்வநாததாஸ் அவர்களின் மகள் திருமதி. பிச்சம்மாள். இவருக்கு மாநில அரசு தொடர் ஓய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக 15 ரூபாயும் அளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்து, அவருடைய மகன் காசிநாதன். இவர் காலமாகி விட்டார். இவருடைய மகள் திருமதி பாப்பாத்தியம்மாள். அவருக்கு மாநில அரசு தொடர் ஓய்வூதியமாக 1,500 ரூபாயும் மருத்துவப்படியாக 15 ரூபாயும் அளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்து – அவரது மகள் தங்கத்தாய். இவர் மாநில அரசின் தொடர் ஓய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக 15 ரூபாயும் பெற்று வருகிறார்.

அடுத்து அவருடைய மகன் முத்தையா தாஸ். இவர் மாநில அரசின் தொடர் ஓய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக 15 ரூபாயும் பெற்று வருகிறார். விஸ்வநாததாசின் மகன் முத்தையா தாசுக்கு திருவல்லிபுத்தூர் வட்டம் – பாட்டக்குளம் சல்லிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் சமத்துவபுரத்தில் ஒரு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஸ்வநாததாசின் பேரன் குணசேகரனுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 40,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

விஸ்வநாததாசின் பேத்தி நிர்மலா தேவியின் கணவரான கே.கணேசனுக்கு ரெடிமேடு ஆடைகள் தயாரிக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 20,000 ரூபாய் நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

விஸ்வநாததாசின் பேரன் குணசேகரனுக்கும், பேரன்களின் மனைவியரான திருமதி.கிருஷ்ணவேணி, திருமதி. உமாராணி ஆகியோருக்கும் பேத்தியர் சரஸ்வதி, பாக்கியலட்சுமி, பஞ்சவர்ணம், நிர்மலா தேவி ஆகியோருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் அரசினால் இன்றைக்கு வழங்கப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் வசித்து வரும் விஸ்வநாததாசின் மகள் திருமதி.பிச்சம்மாளின் பேத்தி திருமதி. அமலம் புஷ்பத்திற்கு 3,500 ரூபாய் செலவிலே ஒரு தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.

அதேபோல் விஸ்வநாததாசின் மற்றொரு மகன் திருமதி.தங்கத்தாயின் பேத்தி திருமதி. எலிசபெத் ராணிக்கு 3,500 ரூபாய் செலவில் ஒரு தையல் இயந்திரமும் இந்த விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் அந்தக் குடும்பத்திலே உள்ள உறுப்பினர்களை மறவாமல் அரசின் சார்பில் செய்யப்படுகின்ற காரியங்கள்.

இவைகள் மாத்திரம் விசுவநாததாசின் புகழுக்கு, அவருடைய தியாகத்திற்குப் போதுமானவை என்று சொல்ல மாட்டேன். விஸ்வநாததாசின் குடும்பத்திலே திருமணமாகாத பெண்கள் இருப்பதாக குமரி அனந்தன் இங்கே சொன்னார். அதைப்பற்றியும் நிச்சயமாக விசாரித்து அந்த திருமண உதவியையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துக்காட்டுகிறேன்.

**நேருவுக்கே பயப்படாத அரசாங்கம் விஸ்வநாததாசுக்கு பயப்பட்டது**

விஸ்வநாத தாஸ் எந்த அளவிற்கு பல ஏகாதிபத்தியங்களால் வெறுக்கப்பட்டவர் அல்லது எத்தனை ஏகாதிபத்தியங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தவர் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், பண்டித ஜவஹர்லால் நேரு, அவருடைய திருமகளார் இந்திராகாந்தியோடு இலங்கைக்குச் சென்றார். அவர்கள் சென்ற அதே கப்பலில் விஸ்வநாத தாஸ், அவருடைய குழுவினரோடு கலை நிகழ்ச்சி நடத்த இலங்கைக்குச் சென்றார். தலைமன்னாரில் போய் கப்பல் நின்றதும் ஜவஹர்லால் நேரு அவர்களையும் இந்திராகாந்தி அவர்களையும் இலங்கையிலே இறங்க அந்த அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் விஸ்வநாத தாசையும், அவரது குழுவினரையும், அங்கே இறங்கக் கூடாது என்று திரும்ப இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது; காரணம் அவர்கள் அங்கே வந்து பாடினால், கலை நிகழ்ச்சி நடத்தினால் பெரிய புரட்சி ஏற்படும் என்ற அந்த பயத்தின் காரணமாக அவர்களை திருப்பி அனுப்பி வைத்தது.

இப்படி நேருவுக்கே பயப்படாத அரசாங்கம், அன்றைக்கு விஸ்வநாத தாசுக்குப் பயப்பட்டது என்றால், ஒரு கலைஞனுக்குக் கிடைத்த அந்தப் புகழ் – நானும் ஒரு கலைஞன் என்பதால் அந்தப் புகழில் எனக்கும் பங்குண்டு என்கின்ற காரணத்தால் அந்தப் பங்கினைப் பெறுவதிலே எனக்குப் பெருமை உண்டு என்பதால் இந்த விழா இவ்வளவு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*– மதுரை மாவட்டம். திருமங்கலத்தில், தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லத்தைத் திறந்துவைத்து 27–12–98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

**சாதி, ஆணவம், சுயநலம் ஆகியவற்றை விட்டொழித்தால்தான் முன்னேற முடியும்!**

**– பேரறிஞர் அண்ணா**

# தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

பால்வளத்துறை 1958ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. நவீன பால் பண்ணைகள் மாத்வரத்திலும் மதுரையிலும் நிறுவப்பட்டுள்ளன. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப் போல் பால் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குக் கொண்டதாகும். கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமாகவும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றன.

பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள் நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமாக விலை கிடைக்க வழி செய்தல் மற்றும் நுகர்வோர்களுக்கு பாலும், பாலில் இருந்து பெறப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல் ஆகும்.

***பால்வளத் துறையின் முன்னேற்றம்:***

முதன்மை சங்கங்கள் 9,092 மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் 17 இயங்கி வருகின்றன. இவைகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 26.81 இலட்சம் ஆகும். நாள் ஒன்றுக்கு சங்கங்களின் அளவில் 23 இலட்சம் லிட்டரும், ஒன்றிய அளவில் 16.20 இலட்சம் லிட்டரும் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. சென்னை நகரத்தில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு 8 இலட்சம் லிட்டர் ஆகும். பால் பதப்படுத்தப்படும் 19 ஆலைகளில் நாள் ஒன்றுக்கு 27.39 இலட்சம் லிட்டர் பதப்படுத்தப்படுகிறது. 42 குளிரூட்டும் நிலையங்களில் நாள் ஒன்றுக்கு 11.49 இலட்சம் லிட்டர் பாதுகாத்து வைக்கப்படுகிறது. இவ்விணையம் 205 தானியங்கி பால் நிலையம் மூலம் நுகர்வோர்களுக்கு பால் வழங்கி வருகின்றது.

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்த தேவைப்படும் உறைவிந்து தயாரிக்கத் தேவையான பொலிகாளைப் பண்ணைகள், உறைவிந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் நிர்வகித்து வருகிறது. தற்சமயம் இவ்விணையத்தின் கீழ் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அயனாவரம் ஆகிய நான்கு இடங்களில் பால்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. 1.5.96 முதல் இயங்கி வரும் சோழிங்கநல்லூர் பால்பண்ணையும் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. மாதவரம் பால்பண்ணை நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. இப்பால் பண்ணைகள் பாலைப் பதப்படுத்தி பாலித்தின் பைகளில் நிரப்பி சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விநியோகம் செய்து வருகின்றன. அயனாவரத்தில் நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பண்ணையில், பால் பொருட்களான சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), ஐஸ்கிரீம், பால்கோவா ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.



ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைந்து வழி நடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகளையும் இயந்திரச் சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் 'டர்ன்கீ' (Turn-key) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும் பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பால்

பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

### பால் கொள்முதல் விலை

பால் உற்பத்திக்கு தேவைப்படும் தீவனம் மற்றும் இடுபொருட்கள் போன்ற கால்நடை பராமரிப்புச் செலவின் உயர்வைக் கருத்திற்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை 7.4.98 முதல் உயர்த்தப்பட்டது. அதன்படி எருமைப் பால், ஒரு லிட்டரின் விலை ரூ.9.45லிருந்து ரூ.10.94 ஆகவும், பசும்பால், ஒரு லிட்டரின் விலை ரூ.7.51லிருந்து ரூ.9 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### பால் மற்றும் பால் பொருட்கள்

சென்னை பால் பண்ணைகளால் 1997–98ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 8.10 இலட்சம் லிட்டர்கள் 31.3.98 வரை விற்பனை செய்யப்பட்டன. 509 பால் விற்பனை நிலையங்கள், 34 பாலகங்கள், 205 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 277 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி.டேங்க்) மூலமாக முறையாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நிறுவனங்களுக்கு மொத்தமாகவும், தனி வாடிக்கையாளர்களுக்கு பாலித்தின் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சென்னையிலும், சென்னையைச் சுற்றிலும் 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பாலை நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன.




### பால் பொருட்கள் விற்பனை

1997–98ஆம் ஆண்டுப் பால் பொருட்களான வெண்ணெய் 1052.10 டன்னும், நெய் 504.70 டன்னும் பால்பொடி 8.30 டன்னும் விற்பனை செய்யப்பட்டன.

### ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட் விற்பனை:

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆவின் யோகர்ட் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனையைப் பெருக்கிட பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சிகள் காரணமாக பெருமை வாய்ந்த வியாபார நிறுவனங்களான ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் போன்ற நிறுவனங்கள் முதன்முதலாக ஆவின் யோகர்ட்டை வாங்க துவங்கியுள்ளன. இந்தியன் ஏர்லைன்ஸில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சர்வீசுகளில் ஆவின் சிறப்புவகை யோகர்ட் வழங்கப்படுகிறது. புகழ் வாய்ந்த ஓட்டல்களான டிரைடன்ட், தாஜ் கோரமண்டல், சோழா மற்றும் புட்வேர்ல்ட் தொடர் உணவகங்களும் வளர்ந்து வரும் ஆவின் வாடிக்கையாளர்களின் குடும்பத்தில் இணைத்துள்ளன.

அதே போன்ற சமீப காலத்தில் தனியார் துறை நிறுவனங்களின் கடுமையான போட்டிக்கிடையே ஆவின் ஐஸ்கிரீம் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நுழைவதில் வெற்றி கண்டுள்ளது.

### நுகர்வோர் நலன் பாதுகாப்பு

நுகர்வோர் குறை மற்றும் ஆலோசனைகளைக் கேட்டறிவதன் மூலம் நுகர்வோரையும் பால் விநியோகத்தில் ஈடுபடச் செய்யும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி 24 மணி நேரமும் இயங்கும் புகார்ப் பிரிவினை தவிர, நுகர்வோர் தங்களது குறைகள் மற்றும் ஆலோசனைகளை எழுத்து மூலம் தெரிவிக்க ஏதுவாக, அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்ட உள் அஞ்சல் தாள்களில் விற்பனை நிலையம் மற்றும் விற்பனையாளரது செயல்பாடு குறித்த விளக்கங்கள் அச்சிடப்பட்டு, அதனை வெவ்வேறு கோணங்களில் மதிப்பீடு செய்யக்கோரி, பால் வாங்கிச் செல்ல வரும் வாடிக்கையாளர்களுக்கு, அனைத்து தானியங்கி நிலையங்களிலும் விநியோகிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்டு, திரும்பப் பெறப்பட்ட அஞ்சல்தாள் படிவங்களின் விவரங்கள் கணிப்பொறிகளில் பதிவு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது.

நுகர்வோர்களது மதிப்பீடு, ஒரு தானியங்கி நிலையச் செயல்பாடுகள் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினை விட குறைவாக இருந்தால், அந்த விற்பனையாளரது ஒப்பந்தம் ரத்துச் செய்யத் தகுதியுடையதாகக் கருதப்படுகிறது. மற்ற தானியங்கி நிலையங்களில் தவறுகள் ஏதும் நடக்காமல் இருக்க இணையத்தின் விழிப்புத் துறையினால் தொடர்ந்து திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவினால், பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல் மாவட்ட அளவிலான 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில், 14 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப் பேற்றுள்ளார்கள்.

***பால் பொருட்கள் விற்பனை:***

ஆவின் வெண்ணெய், நெய், பால் பவுடர் விற்பனையுடன் ஆரோக்கியம் அளிக்க வல்ல, புரதம் நிறைந்து, குறைந்த அளவு கொழுப்புச் சத்துடன், எளிதில் சீரணிக்கக் கூடிய சுவையான 'நறுமணப் பால்' விற்பனைச் செய்யப்படுகிறது. இது சிறியோர் முதல் பெரியோர் வரை பெரிதும் விரும்பப்படுகிறது.


***யோகர்ட்:***

ஜீரண சக்தியை தூண்டும் 'யோகர்ட்' கால்சியம் சத்து அதிகம் கிடைக்கச் செய்வதுடன் இரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. இவை பலவகை சுவைகளில் கிடைக்கிறது. ஆவின் யோகர்ட் தரத்தின் சிறப்பை அறிந்த இந்திய விமான போக்குவரத்து நிறுவனம் விமானங்களில் பயணிகளுக்கு வழங்குவதற்காக ஆவின் நிறுவனத்தின் வாடிக்கையாளர் ஆகியுள்ளது. ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் வெளிநாட்டுப் பயணிகள் இவற்றை மி கவும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். 21 வகையான சுவைகளில் தூய்மையான ஐஸ்கிரீம் பல அளவுகளில் கிடைக்கிறன. இதன் தரம் மற்ற நிறுவன ஐஸ்கிரீம் வகைகளைவிட சிறப்பாக உள்ளதால் எல்லோராலும் விரும்பப்படுகின்றன. ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கூட ஆவின் நிறுவனத்தின் ஐஸ்கிரீம் வாடிக்கையாளர்களாக உள்ளன என்பது குறிப்பிடத்தகுந்தது.

***கோவா:***

நல்ல தரமான பால்கோவா சர்க்கரை சேர்த்தது, சர்க்கரை சேராதது என இரு வகைகளில் வெவ்வேறு அளவுகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் தரம் மற்ற நிறுவன பால்கோவாவை விட அதிகமாகவும் விலை குறைவாகவும் உள்ளதால் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறது.

இணையம் மேற்கொண்ட தீவிர முயற்சியால் 2.10.98 அன்று 23.20 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஒரு வரலாறு படைத்தது. தற்போது நாளொன்றுக்கு 16.20 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்வதன் மூலம் நகரத்திலிருந்து கிராமத்திலுள்ள பால் உற்பத்தியாளர் களுக்கு நாளொன்றுக்கு ரூ.1.3 கோடி சென்றடைகிறது. அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ.40 கோடியும் வருடத்திற்கு ரூ.480 கோடியும் கிராம மக்களைச் சென்றடைகின்றது. விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த ரூ.480 கோடி பெரிதும் உதவுகிறது. இதனால் 26 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுகின்றனர். இப்பொருளாதார வளர்ச்சியால் கிராமங்களிலுள்ள பால் உற்பத்தி யாளர்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக உயர்ந் துள்ளது. ★



## உலகின் முதல் நூலகம்

கி.மு. 500க்கும் முன்னால் பாபிலோன் நகரத்தில் முதல் புத்தகசாலை இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். உலகின் முதல் புத்தகம் களிமண்ணால் ஆனது.

# இசை துறையில்

# சாதனை

# புரிந்த

# 18 கலைஞர்களுக்கு

# விருதுகள்

## — முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

**வ**லையபட்டி நாதலயா அறக்கட்டளையின் சார்பில் இசை நாட்டிய விழா 25.12.98 அன்று சென்னை ஏ.வி.எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் தொடங்கியது.

விழாவை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழாவில், முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு வலையபட்டி நாதலயா அறக்கட்டளையின் சார்பில்-நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாடுதுறை டி.என்.இராஜரத்தினம் பிள்ளை அவர்களின் பெயரிலான விருதினையும், தங்கத்தாலான நாதஸ்வரத்தினையும் பரிசாக வழங்கி கௌரவித்தனர்.

இசைத்துறையில் சாதனை புரிந்த 18 கலைஞர்களுக்கு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

**முதல்வர் கலைஞர் உரை**

பொதுவாக நான் ஏமாறுவதில்லை. முதன்முதலாக வலையப்பட்டி என்னை ஏமாற்றி விட்டார். ''இப்படியொரு நிகழ்ச்சி ஆண்டுதோறும் இந்த மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. ஒருமுறை மூப்பனார் கலந்து கொண்டார், ஒரு முறை நடிகர் திலகம் சிவாஜி கலந்து கொண்டார், நடிகர் திலகம் சிவாஜிக்கு மணிமகுடமெல்லாம் அணிவித்துப் பாராட்டினோம். அதைப் போலவே நீங்களும் இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டார். நான் சொன்னேன்; ''ஏற்கெனவே தமிழகத்தின் மகுடம் என் தலையில் இருக்கிறது, எனவே நீங்கள் புதிதாக மகுடமெல்லாம் வைத்தால் வரமாட்டேன்'' என்றேன். சரியென்று ஒப்புக்கொண்டார். இசை விழா என்பதால் இசையைப் பற்றி இங்கே இருக்கின்ற சகலகலா வல்லவர்களுக்கு முன்னால் நான் என்ன பேசமுடியுமென்பதற்காக முதலில் வருவதற்கு இசையவில்லை. பிறகு இசையநேரிட்டது - வலையப்பட்டியின் பிடிவாதம் காரணமாக.



## ஆச்சர்யத்தில் என்னை மூழ்கடித்த விருது



இங்கே 18 இசைக் கலைஞர்களுக்கு விருதுக்ள் வழங்கப் பட்டிருக்கின்றன. அந்த விருதுகள் என் வாயிலாக இங்கே வலையப்பட்டியின் சார்பில் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல் இன்று மாலையில் என் பார்வைக்கு வந்தபோது, இந்த 18 பெயர்களையும் படித்து விட்டு குடந்தை ராஜமாணிக்கம் பிள்ளையின் நூற்றாண்டு விழா, திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளையின் நூற்றாண்டு விழா என்ற சூழ்நிலையில் நடைபெறும் விழாவில் இந்த 18 விருதுகளில் இராஜரத்தினம் பிள்ளை பெயரால் ஒரு விருதுகூட இல்லையே என்று நான் வருத்தப்பட்டேன்.

அது எப்படி இராஜரத்தினம் பிள்ளை ஒரு நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொண்டால் வருவாரா, வரமாட்டாரா என்ற சந்தேகம் கடைசி வரை இருக்குமோ, அதைப் போல இராஜரத்தினம் பிள்ளை பெயரால் விருது உண்டா இல்லையா என்பது சந்தேகமாக இருந்து, அந்த விருது எனக்குத்தான் என்று இங்கே அளிக்கப்பட்டிருப்பது உள்ளபடியே என்னை ஆச்சரியத்திலே மூழ்கடித்து விட்டது.

அதுவும் ஒரு தங்க நாதஸ்வரத்தை என்னிடத்திலே வழங்கியிருக்கிறார் வலையப்பட்டி அவர்கள். என்னைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, நான் இசைக் குடும்பத்திலே பிறந்தவன் என்று குறிப்பிட்டார். நாதஸ்வர மேதை முத்துவேலருடைய மகன் நான் என்றார்.

என்னுடைய தந்தை திருக்குவளையில் வாழ்ந்த அந்தக் கால கட்டத்தில் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளையானாலும், திருவெண்காடு சுப்பிரமணியம் பிள்ளை ஆனாலும், குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை ஆனாலும் அவர்கள் எல்லாம் வழக்கமாக திருக்குவளைக்கு அருகேயுள்ள எட்டுக்குடி சுப்பிரமணிய ஷேத்திரத்திற்கு அடிக்கடி கச்சேரிக்கு வருவதுண்டு. நம்முடைய செம்மங் குடியார் கூட திருவாரூருக்கு அருகேயுள்ள மடப்புரம் தெட்சணாமூர்த்தி மடம். அதை கருணாநிதி மடம் என்று சொல்வார்கள். அந்த பெயரைத்தான் எனக்கு வைத்தார்கள். இவர்கள் எல்லாம் அங்கே வந்து இலவசமாக கச்சேரி செய்வது வாடிக்கை.

அப்படி இராஜரத்தினம் பிள்ளை, பிச்சையப்பா பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரெல்லாம் வரும்போது திருக்குவளைக்கு என் இல்லத்திற்கு வந்து என் தந்தையாரிடத்திலே பல பாடங்களைப் பற்றி ஐயப்பாடுகளைக் கேட்பார்கள். பல பாடங்களை அவரிடத்திலே கற்றுக் கொள்வார்கள், எனக்கு நன்றாகத் தெரியும். இப்படி அவர்கள் எல்லாம் கற்றுக் கொண்டார்களே தவிர நான் என் தந்தையிடம் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. இதைக் கற்றுக் கொள் என்று என்னை பக்கத்து வீட்டிலே உள்ள முத்துக்குமாரசாமி பிள்ளையிடம் என் தந்தை அனுப்பினார்.

## சட்டை போட்டுக்கொண்டு நாதஸ்வரம் வாசித்த தன்மான வீரன்

ஆனால் அந்தக் காலத்திலே நாதஸ்வரம், தவில் வாசிப்பவர்கள் எல்லாம் பெரிய மனிதர்களைக் கண்டு விட்டால், சீமான்களை, பூமான்களை, மிட்டா மிராசுகளைக் கண்டு விட்டால் தோளிலே உள்ள துண்டையெடுத்து இடுப்பிலே கட்டிக் கொள்ள வேண்டும் என்று ஒரு நிலை இருந்தது. இதை ஒரு நாள் கவனித்து விட்டு எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவரே ஒரு பெரிய மனிதரைப் பார்த்துவிட்டு தோளிலே இருந்த துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக் கொண்டதைக் கவனித்து விட்டு - அன்றைக்கு

நாதஸ்வரத்தை விட்டவன்தான் நான். இதை நான் இன்றல்ல, பல நேரங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். துண்டை தோளிலே போட்டிருப்பது மாத்திரம் அல்ல, சட்டை போட்டுக்கொண்டு கூட நாதஸ்வரம் வாசிக்கலாம் என்ற ஒரு நிலையை சங்கீத உலகத்திலே உருவாக்கிய அந்த தன்மான வீரன்தான் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்டவர் பெயரில் உள்ள விருது எனக்குக் கிடைத்ததில் ஒரு பொருத்தம் இருக்கிறது. இன்னொன்று, தங்க நாதஸ்வரம் எனக்குக் கொடுத்ததில்கூட ஒரு பொருத்தம் இருக்கிறது. என் தந்தை அந்தக் காலத்தில் அந்த வட்டாரத்தில் தங்க நாதஸ்வரம் வைத்து வாசித்தவர் என்று ஒரு பெயர் அவருக்கு உண்டு. நாதஸ்வரம் என்றால் முழுவதுமே தங்கமாக இருந்தால் ஒலி கிளம்பாது. அவர் வாசித்த அந்த நாதஸ்வரத்தில் தங்கத்தாலான பட்டை வைக்கப்பட்டு தங்க நாதஸ்வரம் வாசித்தவர் என்ற பெயர் அவருக்குண்டு.

நான் பிறந்த சிசுவாக இருந்தபோது என் வீட்டில் ஒரு பெரிய திருட்டு நடந்து விட்டது. என் பெற்றோரின் தூக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏதோவொரு மயக்க மருந்தை வீட்டிற்குள் வீசி, அதிலே மயங்கிக் கிடந்தபோது என் தாயாரின் தாலி உட்பட அனைத்தையும் திருடர்கள் பறித்துக் கொண்டு போய் விட்டார்கள். நல்லவேளை, நான் அன்றைக்கு அழுதிருந்தால் யாரும் விழித்துக் கொள்வார்கள் என்ற பயத்திலே என் நெஞ்சை நெறித்து விட்டுப் போயிருப்பார்கள். எனக்கும் தொல்லை தீர்ந்திருக்கும். தமிழ்நாட்டிலே உள்ள சிலருக்கும் என்னால் தொல்லை இல்லாமல் இருந்திருக்கும். அப்படி திருடிக் கொண்டுபோன பொருள்களிலே ஒன்றுதான் அந்தத் தங்க நாதஸ்வரம். யார் திருடிக் கொண்டு போயிருப்பார்கள் என்று இதுவரை தேடித் தேடிப் பார்த்தேன். இன்றுதான் ஆள் அகப்பட்டார். "ஏலேலே சிங்கன் பொருள் ஏழு கடல் போனாலும் திரும்பிவரும்'' என்பதைப் போல அது இன்று வலையப்பட்டி மூலமாக திரும்பி வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அவர் அதற்காக நாதஸ்வரத்தை அளித்தாரா, அல்லது உனக்கு அரசியல் போதும், அரசியலிலே நீ பட்ட பாடு போதும், இனிமேல் இதை ஆரம்பித்து விடு என்று கொடுத்தாரா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும் மிக்க அன்போடு என்னுடைய அன்புத் தம்பி வலையப்பட்டி வழங்கியுள்ள இந்த விருதை நான் மிகுந்த நன்றிப் பெருக்கோடு உங்கள் அனைவர் சார்பிலும் பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

**சங்கீத உலகில் மறைந்தும் மறையாத பெரியோர் பெயரில் விருதுகள்**

இங்கே பல மகா வித்வான்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பிரபலமாக இருந்து வாழ்ந்து மறைந்து ஆனால் சங்கீத உலகத்தைப் பொறுத்தவரையில் இன்னும் மறையாமல் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல பெரியவர்களுடைய பெயரால் அமைந்துள்ள விருதுகள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

அதிலே மிக முக்கியமாக இசை உலக பிதாமகன் என்று வர்ணிக்கப்படுகின்ற அதற்கு முற்றிலும் பொருத்தமான செம்மங்குடி சீனிவாச அய்யர் அவர்களுக்கு மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் விருதும், கே.வி. நாராயணசாமி அவர்களுக்கு அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் விருதும், லால்குடி ஜெயராமன் அவர்களுக்கு கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை விருதும், கே.பி. சிவானந்தம் அவர்களுக்கு வீணை பாலசந்தர் விருதும், மன்னார்குடி எம்.என். ராஜகோபால் பிள்ளை அவர்களுக்கு நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை விருதும், ஆண்டான்கோவில் செல்வரத்தினம் அவர்களுக்கு திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை விருதும், புல்லாங்குழல் என். ரமணி அவர்களுக்கு புல்லாங்குழல் மாலி விருதும், வைஜந்திமாலா பாலி அவர்களுக்கு திருமதி பாலசரஸ்வதி விருதும், டி.வி.சங்கரநாராயணன் அவர்களுக்கு மதுரை மணி அய்யர் விருதும், பாலக்காடு ரகு அவர்களுக்கு பாலக்காடு மணி அய்யர் விருதும், திருச்சி சங்கரன் அவர்களுக்கு பழனி சுப்ரமணிய பிள்ளை விருதும், டி.என். சேஷகோபாலன் அவர்களுக்கு அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் விருதும், திருச்சூர் ராமச்சந்திரன் அவர்களுக்கு ஜி.என். பாலசுப்பிரமணியம் விருதும், சுதா ரகுநாதன் அவர்களுக்கு எம்.எல். வசந்தகுமாரி விருதும் இலுப்பூர் நல்லகுமார் அவர்களுக்கு இலுப்பூர் பஞ்சாபகேச பிள்ளை விருதும், மாயவரம் சோமு அவர்களுக்கு புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை விருதும், திருக்கோகர்ணம் செல்லையா அவர்களுக்கு நாச்சியார்கோவில் ராகவ பிள்ளை விருதும், திருவிழா ஆர். ஜெயசங்கர் அவர்களுக்கு காருக்குறிச்சி அருணாசலம் விருதும் வழங்கப்பட்டிருப்பது மிக மிக பொருத்தமுடையதாகும்.

இந்தப் பொருத்தமான காரியத்தைச் செய்த வலையப்பட்டி சுப்பிரமணியம் அவர்கள் அனைவருடைய பாராட்டிற்கும் போற்றுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரியவராவார். ★

**சாதியின் தருமம் இன்னும் தவிர்ந்திலை போலும் தக்கோய்!**

**– கம்பராமாயணம்**

# தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905–ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு தனது 93ஆண்டுகால பயனுள்ள சேவையை நிறைவு செய்துள்ளது. குறுகிய மற்றும் மத்திய கால வேளாண்மை கடன்கள் வழங்குவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மிக முக்கியமான பணியை செய்து மாநிலத்தின் பசுமைப் புரட்சிக்கு உதவி புரிந்து வருகின்றது. மேலும் மாநிலத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை, நூற்பு ஆலைகளின் முன்னேற்றம் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் உள்ளிட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்கும், பெருமளவில் தனது பங்கான நிதியுதவியை அளித்து வருகிறது.

## வைப்பீடுகள்

இவ்வங்கியின் மொத்த வைப்பீட்டுத் தொகை 30.9.1998 வரை ரூ.1,961.26 கோடியாகும். 30.9.1997 மற்றும் 31.3.1998 ஆம் நாட்களில் வங்கியின் மொத்த வைப்பீட்டுத் தொகை முறையே ரூ.1,396.62 கோடி மற்றும் ரூ.1,634.58 கோடியாகும்.

## கடன்கள்

30.9.1998 வரை வங்கி வழங்கிய மொத்தக் கடன்கள் ரூ.1,305.22 கோடியாகும். வங்கி வழங்கும் கடன் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ) பருவகால வேளாண்மை நடவடிக்கைகள், மத்தியகால வேளாண்மை கடன்கள், மத்தியகால மாற்றல் கடன்கள், நெசவாளர் கடன்கள், மகசூல் கொதுவைக் கடன்கள் ஆகியவற்றிற்கு தேசிய வங்கி வழங்கும் நிதியுதவியை வழிமுறைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உர வாணிபம், பொது வாணிபம், அத்தியா வசியப் பண்ட விநியோகம், மொத்த விலைக் கடைகள், ஊழியர் சங்கங்கள் ஆகிய நோக்கங்களுக்காக ஈடு செய்யக்கூடிய பொருளீட்டுக் கடன் வரம்புகளையும், சர்க்கரை மற்றும் நூற்பு ஆலைகள், பிரதம விவசாய கூட்டுறவு வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சொந்த நிதியிலிருந்து வழங்கும் கடன் களுக்கும், நடைமுறை மூலதனக் கடன்களையும் வழங்கி வருகிறது.

தேசிய வங்கியின் தானியங்கி மறுநிதியுதவித் திட்டத்தின் கீழ், பல்வேறு தேசியத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு மற்றும் குறு விவசாயி களுக்கான பெருமளவிலான நிதியுதவித் திட்டம், சாண எரிவாயு உற்பத்தித் திட்டம் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் வடிவமைக்கும் வேளாண்மை தொடர்பான திட்டங் களுக்கும் வங்கி மறுயுதவி வசதியை நீட்டித்து வருகிறது.

நகர/மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்கள்/ சிறு சாலைப் போக்குவரத்து இயக்குபவர் களுக்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவியின் கீழ் மத்திய/நகரக் கூட்டுறவு வங்கி களுக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மறுநிதியுதவி வழங்கி வருகிறது.

தேசிய வங்கியின் மறு நிதியுதவி யுடன் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, பண்ணையற்ற பிரிவின் கீழ் கிராமக் கைவினை ஞர்கள், சிறு, கிராம, குடிசை மற்றும் சிறிய அளவிலான தொழில்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது. தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்க தேசிய வங்கியின் மறுநிதி உதவியைப் பயன்படுத்தி, தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிதியுதவி அளித்து வருகிறது.

## தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரடி நிதயுதவி

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கே-ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் ஆகிய தலைமை நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கென தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நேரடியாக நிதியுதவி அளித்து வருகிறது.

## நூற்பு / சர்க்கரை ஆலைகளுக்கு தவணைக் கடன்

மாநிலத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை / நூற்பு ஆலைகளுக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து நேரடித் தவணைக் கடன் வசதிகளை அளித்து வருகிறது.


## கூட்டிணைப்பு முறையில் கடன் வழங்குதல்

கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தேசிய வங்கியின் கடன் அங்கீகாரமும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் முன் அனுமதியும் பெற்று, கூட்டிணைப்பு அடிப்படையில் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு ரூ.2.50 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கியுள்ளது. குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் மீதான வட்டி குறைக்கப்பட்டதன் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடு செய்ய, பாரத ஸ்டேட் வங்கியைத் தலைமையாகக் கொண்ட மாநில கூட்டுறவு வங்கிகளின் உணவுக் கடன் கூட்டிணைப்பு ஒன்றை தேசிய வங்கி அமைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் ஒப்புதலுடன் ரூ.5 கோடி வரையிலான உணவுக் கடன் கூட்டிணைப்பில் வங்கி வழங்கியுள்ளது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியைத் தலைமையாகக் கொண்டு அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.4.60 கோடியை மறுநிதியுதவிக் கடனாக வழங்கி யுள்ளது. கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் இரண்டாவது பிரிவுக்கு ரூ.5 கோடியை தவனைக் கடனாகவும் வழங்கியுள்ளது.

## வங்கியின் இதர கடன் திட்டங்கள்

வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற




சேவையை விரிவுபடுத்துகின்ற வகையில் இந்த நவம்பர் அல்லது டிசம்பர் திங்களுக்குள் வீடு கட்டுவதற்கும், பழுது பார்ப்பதற்கும், நகைகளின் ஈட்டின் பேரிலும் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சிப் பெட்டி, ஃப்ரிட்ஜ் போன்ற வீட்டிற்கு உபயோகமாக உள்ள பொருட்களை வாங்குவதற்கும், பில் டிஸ்கவுண்டிங் போன்ற கடன் திட்டங்களையும் செயல்படுத்த இருக்கின்றது.

## கிளைகள்

சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச்சேவையை அளிப்பதற்கென சென்னை நகரில் மொத்தம் 40 கிளைகள் தொடங்கப்பட்டுச் செயல்படுகின்றன.

## வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான கணக்கு வசதி

வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தங்களது சேமிப்புகளை இந்தியாவில் முதலீடு செய்வதற்கு வசதியாக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தனது அடையாறு, அசோக் நகர், அண்ணா நகர், கிள்ளியூர், இராயபுரம், திருவான்மியூர், கொரட்டூர் கிளைகளில் புறக்குடியிருப்பாளர் கணக்கு வசதி அளிப்பதற்கான உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுள்ளது. 22.8.1990 முதல் வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டு வருகிறது. 30.9.1998–ஆம் நாள் மேற்குறிப்பிட்ட கிளைகளில் உள்ள புறக்குடியிருப்பாளர்களின் மொத்தக் கணக்குகள் 114 ஆகும். இந்தக் கணக்குகளில் உள்ள வைப்பீடுகள் ரூ.73.69 இலட்சம் ஆகும்.



## வளர்ச்சிச் செயல் திட்டம்

மத்திய அரசும், நபார்டு வங்கியும் அறிவுறுத்தியதற்கு இணங்க மாநிலத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தங்களின் வளர்ச்சிக்கும், தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சிக்காகவும் ஐந்தாண்டு வளர்ச்சிச் செயல் திட்டங்களை தயாரித்தது. இந்தத் திட்டங்களுக்கு ஏற்ப தலைமைக் கூட்டுறவு வங்கியும் செயல் திட்டத்தினை தயாரித்தது. இந்தத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு மாநில அரசு நபார்டு வங்கியுடனும், மத்திய வங்கிகள் தலைமைக் கூட்டுறவு வங்கியுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டன. தற்போது வளர்ச்சி செயல் திட்டங்களை துரிதப்படுத்தும் வகையிலும் உறுதிப்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் வளர்ச்சி செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தங்கள்

செய்து கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. தலைமைக் கூட்டுறவு வங்கி தகுந்த ஆலோசனைகளை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கி வருகிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல்திறன் குறித்த ஆய்வு செய்யவும், இந்த வங்கிகள் தற்சார்பு நிலை எய்த வழிவகைகள் வகுக்கும் பொருட்டும் மாவட்ட அளவில், மாவட்ட இணைப்பதிவாளர் தலைமையின் கீழ் சிறப்புக் கடமைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

**தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் வளர்ச்சி நிதி**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை வலிமைப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஒன்றினை ஏற்படுத்தியதில் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்காற்றியது. 1990–91 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்ட இந்த நிதி தலைமைக் கூட்டுறவு வங்கியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தலைமைக் கூட்டுறவு வங்கியும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் தங்களது இலாபத்தில் 5 சதவிகிதத்தை இந்த நிதிக்கு ஆண்டுதோறும் அளித்து வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டடங்கள் கட்டவும், கவுன்ட்டர்கள் அமைக்கவும் இந்த நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்படுகின்றன. 30.9.1998இல் இந்த நிதியிலுள்ள இருப்பு ரூ.8.68 கோடியாகும்.

**சிறப்புச் செயல்பாட்டிற்கான விருது**

மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய சம்மேளனத்தினால் 1982–83 ஆம் ஆண்டில் தலைமைக் கூட்டுறவு வங்கிகளுக்கான செயல்பாட்டுத் திறன் பரிசுத் திட்டத்தின்படி தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1985–86ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பரிசுகளைப் பெற்று வருகிறது.

இந்த சம்மேளனம், அகில இந்திய பரஸ்பர ஏற்பாடு திட்டத்திற்காக உருவாக்கிய பரிசுத் திட்டத்தின்படி 1996–97 ஆம் ஆண்டிற்கான முதல் பரிசினைத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு அளித்துள்ளது.

நபார்டு வங்கியின், தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்து செயல்திறன்களுக்கான பரிசுத் திட்டத்தின்படி 1995–96 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது பரிசினை தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பெற்றது.

**வேளாண்மைக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம்**

உலக வங்கி, தேசியக் கூட்டுறவுக் கழகத்தின் மூலம் அளித்த கடன் திட்டத்தின் மூலம் தலைமைக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு பணியாளருக்கான பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்து நடத்தி வருகிறது. தொடக்க காலத்தில் என்.சி.டி.சி அளித்த நிதியுதவியின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது மாதவரத்தில் ரூ.2.50 கோடி செலவில் அமைக்கப்பட்ட சொந்தக் கட்டடத்தில் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. கட்டடம் கட்டுவதற்கான செலவில் ரூ.1.10 கோடி என்.சி.டி.சி மானியமாக அளித்தது. மீதமுள்ள தொகையை, வங்கி தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து அளித்தது. மாநிலத்திற்கான அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களுக்குப் பயிற்சி நிலையத்தில், பயிற்சி அளிக்கப் படுகிறது. 30.9.1998 வரையில், 11,397 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிக் கான செலவினைத் தலைமைக் கூட்டுறவு வங்கியே அளித்து வருகிறது.

**இலாபம்**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின், 1996–97 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூ.18.43 கோடி ரூபாய் ஆகும். 1997–98 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூ.20.25 கோடி ஆகும். ★



"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்".

– மகாகவி பாரதியார்

**1972**ஆம் ஆண்டிலேயே கலைக்கல்லூரி ஒன்று வியாசர்பாடியிலே தொடங்கி - அந்தக் கலைக் கல்லூரிக்கு முதன் முதலாக அம்பேத்கருடைய பெயரைச் சூட்டியதே இந்த அரசுதான் என்பதை பெருத்த மகிழ்ச்சியோடு நான் அறிவித்துக் கொள்வேன்.

சென்னை மைலாப்பூரில் இருக்கின்ற ஹாமில்டன் பாலம் - அந்தப் பாலத்தின் வரலாறு உங்களுக்குத் தெரியும். அது ஆமில்டன் பாலமாகி, பிறகு சென்னை வழக்கில் அம்பட்டன் பாலமாகி, பிறகு பார்பர் பிரிட்ஜ் என்று மொழி பெயர்க்கப்பட்டு இத்தனை கூத்துக்கும் ஆளான அந்தப் பாலத்திற்கு இருந்த இழிவைத் துடைத்து, இழிவைத் துடைத்த பெரியவர், மாபெரும் புரட்சிக்காரர் அம்பேத்கர் பெயரை அந்தப் பாலத்திற்கு சூட்டியதும் இந்த அரசுதான்.

அவர்களும் அனுப்பிவைத்து தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். நானும் தமிழ்நாட்டு மக்களுடைய சார்பில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இது வரலாறு.

### அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை ஓராண்டுக்காலம் நடத்த ஆணை

90ஆம் ஆண்டு அம்பேத்கருடைய நூற்றாண்டு விழாவையொட்டி ஓராண்டு காலம் அந்த விழாவை தமிழகத்திலே கொண்டாட வேண்டுமென்று மூன்றாவது முறையாக நான் முதல்வராக இருந்தபோது ஆணையிட்டு, விழா கொண்டாடப்பட்டதையும் நீங்கள் அறிவீர்கள். அந்த நேரத்திலேதான் சென்னை சட்டக்கல்லூரிக்கு டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி என்கின்ற பெயரும் சூட்டப்பட்டது. அதன் பின்னர் சேலத்திலே பெரியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கருடைய பெயரில் 25 இலட்சம் ரூபாயில் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

# அம்பேத்கர் மணிமண்டப கட்டுமானப்பணி தொடக்கம்

### மராட்டிய மாநிலத்திற்கு தமிழகத்திலிருந்து ஒரு இலட்சம் தந்திகள்

மராட்டிய மாநிலத்திலே மராட்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட மராட்டிய மாநிலச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது பதினைந்து இருபதாண்டு காலம் நடைமுறைக்கே வராமல் இருந்த நேரத்தில், அந்தப் பெயரைச் சூட்ட வேண்டுமென்று மராட்டியத்திலே ஒரு கிளர்ச்சி உருவானபோது அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாக மராட்டிய மாநில ஆளுநருக்கும், அன்றைய தினம் அந்த மாநில முதல்வராக இருந்த நண்பர் சரத்பவார் அவர்களுக்கும் தந்தி கொடுக்க வேண்டுமென்று சொல்லி அவ்வாறே தமிழகத்திலிருந்து ஒரு இலட்சம் தந்திகளும் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

அந்த மாநிலத்தின் ஆளுநர், நம்முடைய பழைய ஆளுநராக இருந்த அலெக்சாண்டர் அவர்கள் அந்தத் தந்திகளைப் பெற்று உடனடியாக எனக்கு பதில் அனுப்பினார்கள். தந்திகளும், கடிதங்களும் கிடைக்கப் பெற்றது. மராட்டிய மாநிலத்தில் அம்பேத்கர் பெயரால் பல்கலைக்கழகம் உருவாக நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறியது மட்டுமல்ல; அந்த முயற்சி முற்றுப்பெற்று அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டு அந்த ஆணையின் ஒரு நகலை எனக்கு அந்த கவர்னர் அவர்களும், முதல்வர்

இந்தியாவிலேயே முதலாவதாக சட்டப்பல்கலைக் கழகம் ஒன்று தமிழகத்திலே தொடங்கப்பட்டது. அப்படி முதலாவதாக தொடங்கப்பட்ட சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கருடைய பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைக்கின்ற அரும் பணியினை நம்முடைய குடியரசு தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்கள் வந்திருந்து நடத்தி வைத்தார் என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

### அம்பேத்கர் திரைப்படம்

அம்பேத்கருடைய வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் திரைப்படமாக எடுக்கப்படுகிறது என்ற செய்தி வந்தவுடன் அந்தப் படம் முற்றுப்பெற்று- அது தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், அரசின் சார்பாக பத்து இலட்சம் ரூபாய் அதற்கு நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அந்தப் படம் வெளிவரவிருக்கின்றது. பத்து இலட்ச ரூபாய் தமிழக அரசின் சார்பாக வழங்கப்படவிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

6-12-94 அன்று, கடந்த கால ஆட்சியில் ஆண்டுதோறும் ஒருவருக்கு அம்பேத்கர் விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப் பட்ட ஆண்டு 1994. அது அமல்படுத்துகின்ற ஆண்டு

1998 என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். எதையும் யார் வந்து செய்ய வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது போலும். அதனால்தான் இந்த மணி மண்டபத்தின் பணி துவக்க விழாவையும் உங்களுடைய இனிய முன்னிலையிலே நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

அதைப்போல 94ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அம்பேத்கர் விருதையும் நான்தான் நாளைய தினம் பெரியார், பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க. விருதுகள் வழங்கப்படுகின்ற நேரத்தில் அம்பேத்கர் விருது நம்முடைய பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரண்டு குவளை முறை அகற்ற உத்தரவு**

அது மாத்திரமல்ல; மண்டபங்களுடைய பெயர்கள், பல்கலைக் கழகங்களுடைய பெயர்கள், கல்லூரிகளுடைய பெயர்கள், விருதுகளுக்குப் பெயர்கள் வைத்தால் மாத்திரம் போதாது; அவருடைய கொள்கையை அவருடைய எண்ணத்தை அவருடைய குறிக்கோளை நாம் நிறைவேற்றியாக வேண்டும். அப்படி நிறைவேற்றுவதற்கு அடையாளமாகத்தான் கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் தமிழ்நாட்டில் இன்னமும் இருக்கின்ற சாதி பேத உணர்வுகளை கிள்ளி யெறிய வேண்டும். அடியோடு அகற்ற வேண்டும். வேரோடு அகற்ற வேண்டும் என்று எடுத்த முடிவிற்கிணங்க சில மாவட்டங்களில் இன்னமும் டீக்கடைகளில் இரண்டு குவளை முறை இருப்பதைப் பார்த்து அதை அகற்றுவதற்கு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது.

நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் ஆணையை ஏற்று அங்கே அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார் என்ற செய்தி ஏடுகளில் வந்திருக்கிறது. கரூரிலே அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் அங்கேயும் இந்த இரண்டு குவளை முறையை ஒழிப்பதற்காக அரும்பாடுபட்டு அரிய முயற்சி எடுத்துக் கொண்டு பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றார்கள். அதைப் பாராட்டுகிறவர்கள் கூட கலெக்டரையும் வருவாய்த்துறை அதிகாரிகளையும் தான் பாராட்டுகிறார்கள், இந்த அரசைப் பாராட்டுவதற்கு அவர்களுக்கு பெரும் உள்ளம் வராவிட்டாலுங்கூட, எனக்கு அதைப் பற்றி கவலை யில்லை. யார் பாராட்டாவிட்டாலும் கவலையில்லை, நடக்க வேண்டிய காரியம் நடந்தால் போதுமானது எல்லோரும் ஒன்று என்ற அந்த சமத்துவ நிலை வந்தால் போதுமானது. அதைதான் அம்பேத்கர் அன்றைக்கே சொல்லியிருக்கிறார்.



"There is no doubt, in my opinion that unless you change your social order you can achieve little by way of progress. You cannot mobilize anything on the foundations of Caste. You cannot build up a Nation, you cannot build up a morality. Anything that you will build on the foundations of caste, will crack and will never be a whole".

(அதாவது, உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிது கூட முன்னேற்றம் காண முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது. தேசிய இனத்தை உருவாக்க முடியாது. ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும் அது உடைந்து சிதறி உருப்படாமல் போய் விடும்)

- இவ்வாறு அன்றைக்கே **அண்ணல் அம்பேத்கர்** கூறியிருக்கிறார்.

எனவேதான் சாதி சமய உணர்வுகளற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணிப் பாடுபடுகின்ற இந்த அரசுக்கு நீங்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட, பல்வேறு கொள்கைகளைக் கொண்ட பெரியவர்கள் இங்கே இருந்தாலும் இந்த ஒரு பிரச்சினையிலே இந்த அரசுக்கு அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்பு கரத்தை நீட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நீண்ட நேரம் இன்றைக்கு என்னால் பேச இயலாது. இருந்தாலும் என்னுடைய கடமையை ஆற்றினேன் என்கிற அந்தக் களிப்போடு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். வாழ்க அம்பேத்கருடைய கொள்கை.

*- தமிழக அரசின் சார்பில் அமைக்கப்படவுள்ள அண்ணல் அம்பேத்கர் மணி மண்டப கட்டுமானப் பணி தொடக்கவிழா, 23-12-98 அன்று, சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்றது. கட்டுமானப் பணியினை தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

# தமிழ்நாடு உப்பு நிறுவனம்

வை.பழனிச்சாமி, இ.ஆ.ப.,
தலைவர்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு அரசு உப்பு மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்ட துணைப் பொருட்களைத் தயாரிப்பதற்குக் கிடைக்கக்கூடிய வள வாயில்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன், 1974ஆம் ஆண்டில், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை நிறுவியது. மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் அவசியத்தையும், பின்தங்கிய பகுதிகள் மேம்படுத்துவதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, தொழில் வளர்ச்சி மற்றும் வேளாண் நடவடிக்கை ஆகியவற்றின் மூலம் நிரந்தரமான வேலைவாய்ப்பு அளிக்க இயலாத கடலோரப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதென முடிவு செய்யப்பட்டது. உப்பளம் மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்ட ஏனைய நடவடிக்கைகளில் வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம், மக்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக 22.7.1974 அன்று தமிழ்நாடு உப்பு நிறுவனம் நிறுவப்பட்டது. உவரி நீரிலிருந்து உண்ணத்தக்க மற்றும் தொழிற்சாலை தரம் வாய்ந்த உப்பைத் தயாரிப்பதும், அனைத்து வகையான உப்பு மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயணப் பொருட்கள் மற்றும் அதன் துணைப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுமே தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 24 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருவதுடன், 1998-99 ஆம் ஆண்டு அதாவது (22.7.98 முதல் 21.7.99 முடிய) தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் வெள்ளிவிழா ஆண்டாகும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1974-75ஆம் ஆண்டில், ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் செயல்படத் தொடங்கியது. தற்போது, இதன் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமும், செலுத்தப்பட்ட மூலதனமும் முறையே 400 இலட்சமும் ரூ.317.01 இலட்சமும் ஆகும். இப் பங்கு மூலதனத்தொகை முழுவதும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம், மாரியூர் - வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் உப்பு உற்பத்தி செய்வதற்காக உள்ள 4,825 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படுகிறது.

தொழில் தரம் வாய்ந்த உப்பு உற்பத்திக்கு உகந்த பலவாயில்கள் இப்பகுதியில் இருப்பதாலும், சலவை சோடா, காஸ்டிக் சோடா மற்றும் சோடா ஆஷ் ஆகியவை தயாரிப்பதற்கு ஏதுவாக இத்தொழில் தரம் வாய்ந்த உப்பு "குளோர் ஆல்கலி" தொழிற்சாலைக்கு அதிக அளவில் தேவைப்படுவதாலும், வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு ஏதுவான வாய்ப்பு உள்ளதாலும், வாலிநோக்கத்தில் எஞ்சியுள்ள 2,510 ஏக்கர் நிலத்தை சுமார் ரூ.200 இலட்சம் மூலதனத்துடன் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் (அதாவது 1997-2002 கால அளவில்) படிப்படியாக மேம்படுத்துவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, இதன் உற்பத்தித் திறன் 2002 ஆம் ஆண்டின் இறுதியில், தற்போதுள்ள உற்பத்தி அளவான 1.50 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 3 இலட்சம் டன்னாக உயர்த்தப்படும். மேலும் 1,000 ஏக்கர் நிலப்பரப்பைப் பயன்படுத்துவதற்கான பணியும், 1998-99 ஆண்டில், முதல் கட்ட நிலையில் சுமார் 150 கல் உப்புப் படிகம் தயாரிக்கும் பாத்திகள் அமைப்பதற்கான பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

## நடந்தேறிவரும் திட்டப்பணிகள் : சிறப்புக்கூறுகள்

### *இரும்புச் சத்து கலக்கப்பட்ட உப்பு :*

ஐதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனம் மற்றும் இந்திய உணவு மற்றும் சத்துணவு வாரியம் வழங்கிய தொழில்நுட்ப உத்தியைக் கொண்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனம், இரும்புச் சத்துக் கலந்த உப்பைத் தொடர்ந்து தயாரித்து, இரத்தசோகை நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கிய நடவடிக்கையாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 1991 ஆம் ஆண்டு முதற்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள நண்பகல் சத்துணவு மையங்களுக்கு வழங்கி வருகிறது. இதன்வகையில் இதன் ஆண்டு உற்பத்தியளவு 3,000 முதல் 4,000 மெட்ரிக் டன் ஆகும்.

### *டை எதில் கார்போமைசின் மருந்துச்சத்து கலக்கப்பட்ட உப்பு*

தமிழ்நாடு பொதுச் சுகாதாரத்துறை இயக்குநரின் தொழில்நுட்ப ஆலோசனையின் உதவியுடன் "தமிழ்நாடு உப்பு நிறுவனம் டை எதில் கார்போமைசின் மருந்துச்சத்துக் கலந்த கலக்கப்பட்ட சுகாதாரமான உப்பைத் தொடர்ந்து உற்பத்தி செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களிடையே பரவியுள்ள யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், கன்னியாகுமரியிலுள்ள நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கி வருகிறது. இதன் ஆண்டு உற்பத்தி அளவு சுமார் 5,000 மெட்ரிக் டன்.

### *இருமடங்கு சத்தூட்டப்பட்ட உப்பு*

ஐதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனம் வழங்கிய தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையில்,

இருமடங்கு சத்தூட்டப்பட்ட உப்பை அதாவது இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பைத் தயாரிப்பதற்குத் தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. முதற்கண் சமுதாய அளவில் பயன்படுத்துவது குறித்து கண்டறிவதற்காக 3 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டு, 1997-98 ஆம் ஆண்டில் ஐதார பாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. முடிவுகள் ஊக்கமளிப்பதாக உள்ளன. தமிழ்நாடு உப்பு நிறுவனம் இருமடங்கு சத்தூட்டப்பட்ட உப்பைத் தயாரித்து குரல்வளைச் சுரப்பி வீக்க நோய் பரவியுள்ள நீலகிரி, கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள சத்துணவு மையங்களுக்கு வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டு முதற்கொண்டு இருமடங்கு சத்தூட்டப்பட்ட உப்பின் உற்பத்தி மேலும் சீரமைக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களுக்கும் வழங்கப்படும்.

## புதிய திட்டங்கள்

### *பொது மக்களுக்கு அயோடின் சத்து கலந்த உப்புத் தயாரித்து விநியோகித்தல்*

இந்தியாவில் அயோடின் சத்துக் குறைவால் பெரும் அளவில் உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. ஏறத்தாழ 200 மில்லியன் மக்கள் அயோடின் சத்துக் குறைவால் பாதிக்கப்படுகின்றனர். இவற்றில், 54 மில்லியன் மக்கள், குரல்வளை வீக்கம் நோயாலும், 2.2 மில்லியன் மக்கள் உடல்வளர்ச்சிக் குறைவு, மந்த அறிவு, பாதிப்பாலும், 6.65 மில்லியன் மக்கள் சிறிய அளவில் நரம்புத்தளர்ச்சி நோயாலும் பாதிக்கப்படுகின்றனர். அயோடின் சத்துக் குறைவால் அதிகமாகக் கருச்சிதைவு ஏற்படுதல், பிறவிக் கோளாறுகள், பேறுகாலத்திற்கு முன்பே குழந்தை பிறந்து இறந்துவிடுதல், பிறந்த குழந்தைகள் அதிக அளவில் இறந்துவிடுதல், குழந்தைகள் செத்துப்பிறத்தல், அறிவு ஊனம், சக்தி இழப்பு, மனநிலை பாதிப்பு, உடல்வளர்ச்சிக் குறைவு, மந்த அறிவு, மாறுகண், டிஸ்பிளிஜியா, குட்டை உருவம், உடல்வளர்ச்சிக் குறைவு, இயல்புக்கு அதிகமான வளர்ச்சி, குரல்வளை வீக்கம் போன்ற குறைபாடுகளும் நிகழும்.

கருவுற்ற தாய்மார்கள் அயோடின் சத்துக் குறைவினால் கருவிலுள்ள குழந்தைக்கு அயோடின் சத்து குறைந்துவிடுகிறது. இதன் விளைவாக, கருவின் தைராய்டு சுரப்பி உற்பத்தி செய்கின்ற ஓர் இன்றியமையாத ஹார்மோனாக விளங்கும் தைராக்சின் அளவும் குறைந்துவிடுகிறது. 'தைராக்சின்' குறைவாக இருப்பதால், கருவில் உள்ள குழந்தையின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியைப் பாதிக்கிறது. அத்தகைய கருவின் மூளை பாதிப்பு நிலையானதாகும். அத்தகைய பாதிப்பினால், மூளையின் செயல்திறன், அறிவு வளர்ச்சியைத் திரும்பப்பெற முடியாததாகும்.

எனவே தமிழ்நாடு அரசு, "அயோடின் சத்துள்ள உப்பை" இன்றியமையாப் பொருளாகச் சேர்த்து ஆணைகள் பிறப்பித்துள்ளது.

அயோடின் சத்து நிறைந்த உப்பைத் தயாரித்து, பொதுப் பங்கீட்டின் முறைத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான போதிய அடிப்படை வசதிகளையும், தனித்தொழில் திறனையும், தமிழ்நாடு உப்புநிறுவனம் கொண்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும், பொதுப்பங்கீட்டு முறைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, அயோடின் சத்துள்ள உப்பு வழங்குவது தொடர்பாக, தமிழ்நாடு உப்பு நிறுவனம் அளித்துள்ள செயற்குறிப்பு, பரிசீலிக்கப்பட்டு முதல் கட்டமாகத் திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### *அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் நோய் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள்*

அயோடின் சத்துக் கலந்த உப்பைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும், மாவட்டத் தலைமையிடங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உதவியுடன் மனிதச் சங்கிலித் தொடர் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதன் மூலமும், மத்திய அரசு உப்புத் துறை, "யூனிசெப்" நிறுவனம், பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்களின் ஒருங்கிணைப்பின் மூலமும், இரும்பு/அயோடின் சத்துக் குறைவினால் ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் குறித்தும், தமிழ்நாட்டைச் சேர்ந்த கிராமப்புற மக்களுக்கு அறிவுறுத்துவதில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது.



இதற்கிடையில், 1998 ஜூலை முதற்கொண்டு அனைத்து மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலும், சில்லறை விற்பனை நிலையங்களிலும், "அரசு உப்பு" என்ற வணிகப் பெயரில், அயோடின் சத்து நிறைந்த சாதாரண உப்பைக் கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 என்ற உயர்ந்த பட்சச் சில்லறை விற்பனை விலையில் கிடைக்கச் செய்வதற்குத் தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 20 சதவீதம் மட்டுமே அயோடின் சத்துக் கலந்த உப்பைப் பயன்படுத்தி வருகின்றனர். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அயோடின் சத்துக் கலந்த "அரசு உப்பு", கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 என்ற நிலையில் கிடைக்கச் செய்தால், 2000வது ஆண்டில், இந்த உப்பை 100 சதவீதம் பேர் பயன்படுத்தும் சாதனையைத் தமிழ்நாடு அடையும் நிலை உருவாகும். □

# சாதி, சமய நல்லிணக்க விழா

இந்தச் சமுதாய நல்லிணக்க விழாவிலே கலந்துகொண்டு மதுரை மறை மாநில வைர விழா நிகழ்ச்சி கண்டு களிப்படைகின்ற வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மேடைய்யைப் பார்க்கிறேன். சமுதாய நல்லிணக்கத்தின் அடையாளச் சின்னமாக இந்த மேடை விளங்குகிறது. இப்படித்தான் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ரயில்வே விழா மேடை அமைந்திட

இது அரசு விழா அல்ல என்றாலுங்கூட அரசை அமைக்கின்ற மக்கள் விழா. இந்த மக்கள் விழாவில் மதநல்லிணக்கம், சமுதாய நல்லிணக்கம் காணுகின்ற வகையிலே மேடை அமைந்திருப்பதைக் கண்டு

விரும்பவில்லை. அந்தக் கதையிலே மூன்று பேராயர்கள்; கத்தோலிக்கப் பேராயர்; சி.எஸ்.ஐ.பேராயர், ஈ.சி.ஐ.பேராயர் என்று இந்த மூன்று பேராயர்களும் மோட்ச லோகத்திற்குச் சென்றார்கள் என்று சொன்னார்.



வேண்டுமென்று நான் விரும்பினேன். அதற்கு எத்தனையோ விமர்சனங்கள் வந்தன. நான் யாரையும் அந்த மேடைக்கு அழைக்க வேண்டாமென்று சொல்லவில்லை, அவர்களோடு மற்றவர்களையும் அழைத்து மத நல்லிணக்கம், சமுதாய நல்லிணக்கம் காண்பதில் மாநில அரசைப் போலவே மத்திய அரசுக்கும் பொறுப்புண்டு என்பதை உலகத்திற்குக் காட்டுங்கள் என்ற வேண்டுகோளைத்தான் விடுத்தேன். ஆனால் அந்த எண்ணம் மத்திய அரசு முயன்றும் முழுமையாக ஈடேறவில்லை.

பெருமகிழ்ச்சியடைகின்றேன். பெருமிதம் கொள்கிறேன்.

இதற்குக் காரணகர்த்தாவாக விளங்குகின்ற மக்கள் பேராயர் ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களுக்கு என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தையும் இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் ஒரு கதை சொன்னார். நான் அந்தக் கதையை விமர்சிக்க

பேராயர்கள் எந்தப் பேராயராக இருந்தாலும் அவர்கள் வித்தியாச மில்லாமல் மோட்சத்திற்குச் செல்ல முடியுமென்ற மதமாக கிறிஸ்தவ மதம் இருக்கிறதென்பதை எண்ணி நான் பூரிப்படைகிறேன். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டாரென்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். எங்கள் மதத்திலே மோட்சத்திற்குச் செல்வதென்றால் ஒன்று தீக்குண்டத்திலே இறங்கிச் செல்ல வேண்டும் அல்லது எலும்பு உருவமெடுத்துத் தலைகீழாக கைலாயத்திலே நடந்துதான் செல்ல வேண்டும். அந்தச் சிரமம்

இல்லாமல் இந்த மூன்று பேராயர்களும் கத்தோலிக்கப் பேராயரும், சி.எஸ்.ஐ.பேராயரும், ஈ.சி.ஐ.பேராயரும் (ஈ.சி.ஐ.பேராயர் பெயருக்கேற்ப 'ஈசி'யாகவே) மோட்சத்திற்குச் செல்ல முடிந்திருக்கிறது.

இந்த சமுதாயத்தில் அடிகளார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல – இந்தியத் துணைக் கண்டத்தில் அதிலும் குறிப்பாக தமிழகத்தில், இந்த நிலத்திலே வந்து இறங்கிய மதம் கிறிஸ்தவ மதம். ஆனால் அந்த மதம் மக்களுக்கு அறிவைப் போதிக்கின்ற மதமாக – அன்பைச் செலுத்துகின்ற மதமாக–அருளை அள்ளி வழங்குகின்ற மதமாக இன்றளவும் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது.

**மத வித்தகர்கள் தமிழுக்காக தொண்டாற்றினார்கள்**

அந்த மதவித்தகர் பலர் தமிழுக்காக எப்படியெல்லாம் பாடுபட்டார்கள் என்பதை எனக்கு முன்னால் இங்கு உரையாற்றியவர்கள் – குறிப்பாக பேரவைத் தலைவர் பி.டி.ஆர். அவர்கள், அடிகளார் அவர்கள் மற்றும் பேராயர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான், தமிழுக்குத் தொண்டாற்றினார்கள், பணிபுரிந்தார்கள், தமிழை வளர்த்தார்கள், தமிழாகவே திகழ்ந்தார்கள் என்ற அந்தக் காரணத்தினாலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநகரத்திலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோது கடற்கரையிலே பலருக்கு ஆள் உயரச் சிலைகளை வைத்த நேரத்தில் அப்படி வைக்கப்பட்ட சிலைகளில் பெஸ்கி என்ற வீரமா முனிவருடைய சிலை, கால்டுவெல்லுடைய சிலை, ஜி.யு.போப் அவர்களுடைய சிலை – இவைகள் எல்லாம் இடம் பெற்றன என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

அந்தப் பெரியவர்களுடைய வழியில் – அந்த மதத் தலைவர்களுடைய வழியிலே வந்த நம்முடைய ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்கள் இங்குள்ள ஆயர்களைக் கலந்து மதுரை மறை மாநிலத்திலே இருக்கின்ற எல்லோருடைய ஒத்துழைப்போடும் இந்தச் சமுதாய நல்லிணக்க விழாவை இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**எல்லா சமுதாயங்களையும் ஒன்று கூட்டும் கிறிஸ்தவ அடையாளம்**

சமுதாய நல்லிணக்கத்தை விரும்புகிற – போற்றுகிற அதை ஏற்றுக்கொள்கிற – அதை நிலைநாட்ட வேண்டுமென்கிற குறிக்கோள் கொண்ட மதம் கிறிஸ்தவ மதம். உங்களுடைய அடையாளமே சிலுவை – சிலுவையை உற்று நோக்கினால் + கூட்டல் அடையாளம். எல்லா சமுதாயங்களையும் ஒன்று கூட்டி ஒன்றாக ஆக்க வேண்டுமென்ற கூட்டல் அடையாளத்தை சிலுவை அடையாளத்தைக் கொண்டிருக்கின்ற இந்த மதத்தின் காவலர்களாகிய நீங்கள் இன்றைக்கு சாதி சமய நல்லிணக்க விழாவை நடத்துவது வியப்புக்குரிய ஒன்றல்ல.

மதுரைப் பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் திருச்சி மாவட்டத்தில் உத்தமனூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். இப்போதுதான் அவர் உத்தமராக இருப்பதற்குக் காரணம் புரிகிறது. உத்தமனூரில் பிறந்து – எங்கள் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் உயர்நிலைக் கல்வி பயின்று, பிறகு ரோம் நகரத்திலே அர்பன் பல்கலைக்கழகத்திலே பயின்று பட்டம் பெற்று, கிறித்தவ சமயப் பணியிலே பல்வேறு பொறுப்புக்களையேற்று சிறப்பாக தொண்டாற்றி வரக்கூடியவராவார்.

**ஆத்திரத்திற்கு இடம் தராமல் அமைதியை ஏற்படுத்த பாடுபட்டவர்**

மண்டைக்காடு கலவரத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், கோட்டாற்றில் 17 ஆண்டுகள் ஆயராகப் பொறுப்பேற்றிருந்த ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்கள் 82–ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காட்டில் நடைபெற்ற அந்தக் கலவரத்தின்போது சிலர் கொல்லப்பட்டார்கள், ரத்த ஆறு ஓடியது, வழிபாட்டிடங்கள் எல்லாம் அன்றைக்கு பாழ்படுத்தப்பட்டன. அந்தச் சேதாரம் நிகழ்ந்த கால கட்டத்தில் பதற்றத்திற்காளாகாமல், ஆத்திரத்திற்கு இடம் தராமல் அனைவரும் பாராட்டுகின்ற வண்ணம் பொறுமையைக் கடைப்பிடித்து, அந்தப் பகுதியிலே அமைதியை ஏற்படுத்துவதிலே அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவருடைய அந்த அரிய முயற்சிக்கு அன்றைய தினம் குன்றக்குடி அடிகளார் அவர்களும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை நாடறியும். எனவேதான் இவரை, 'மக்கள் பேராயர்' என்றும் 'சமாதானக் காவலர்' என்றும் நாம் அழைக்கிறோம்.

**தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி கற்பிக்க வாதாடியவர் வீரமா முனிவர்**

அந்த அளவிற்கு பெரும் தொண்டினை சமுதாய நல்லிணக்கத்திற்காக ஆற்றியவர் இவர். இவருக்கு முன்னோடியாக 1628–ஆம் ஆண்டிலேயே டி.நொபிலி பாதிரியார் அதாவது 17–வது நூற்றாண்டிலேயே தாழ்த்தப்பட்ட மக்களை தேவாலயங்களுக்குள் செல்ல அனுமதித்த பெரியவர். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டிலும்

---

சாதி இரண்டொழிய
வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவார் நெறிமுறையில்
இட்டார் பெரியோர்;
இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி.

**– ஔவையார்**

---

> **சாதி மதம் தமிழ் இல்லை - அந்தச் சாதி மதத்தைத் தமிழ் கொள்வதில்லை**
>
> **- பாரதிதாசன்**

நம்மால் அது முழுமையாக முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வீரமா முனிவர் தேம்பாவணி என்ற இலக்கியத்தைத் தந்தவர். அவர் சாதிப் பாகுபாடுகளைப் பற்றி குறிப்பிடும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி அனுமதி கிடையாது என்று கூறப்பட்ட அந்தக் கொடுமையான நிலையை எதிர்த்து கருத்து தெரிவிக்கும்போது 'உடலுக்கு வாய் வழியாக உணவு உட்கொள்வது எப்படி எல்லோருக்கும் பொதுவானதோ அதுபோல செவி வழியாக கல்வியாகிய உணவை உட்கொள்வதும் எல்லோருக்கும் பொதுவாகும்" என்று கூறி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாக வாதாடியவர் வீரமாமுனிவர்.

அந்தக் காலத்திலே - 1872ஆம் ஆண்டில் திருச்சியில் பேராயராக இருந்த பார்த்தீ என்பவர் ஒரு ஆணையிட்டார். அப்பொழுதிருந்த சாதிப் பாகுபாடு, அந்தக் கொடுமையின் காரணமாக தாக்குப்பிடிக்க முடியாமல் அன்றைக்கு நெருக்கடிக்கு ஆளான சூழ்நிலையில், அவரிட்ட ஆணை - தேவாலயங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நின்று வணங்க - அதைப் போலவே உயர்சாதிக்காரர்கள் நின்று வணங்க - தனித்தனி இடங்கள் பிரிக்கப்பட்டு குறுக்குச் சுவரொன்று எழுப்பப்பட்டிருந்தது. அந்தக் குறுக்குச் சுவரை 1910ஆம் ஆண்டில் அகற்றி கவுசானெல் பாதிரியார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், உயர் சாதி மக்களுக்கும் இடையில் மாதாகோவிலில் இருந்த பாகுபாட்டைப் போக்கினார் என்கிற பெருமையை சரித்திரத்திலே சேர்த்தார் என்பது முக்கியமாக நம் நெஞ்சிலே பதிய வைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சியாகும்.

**மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்கும் விழா**

மதங்களுக்கிடையே ஒரு நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக - அந்தச் செய்தியை இங்கே கலந்து கொண்டிருக்கின்ற அனைவரும் நெஞ்சிலே பதிய வைத்துக் கொள்வதற்காக நடைபெறுகின்ற விழா இது. வெறும் வைர விழா மாத்திரமல்ல இது. இந்த மறை மாநிலத்திற்காக நடைபெறும் வைர விழாவில், வைரம் போல் நம் நெஞ்சில் பதிய வேண்டிய கருத்தாக சமுதாய நல்லிணக்கம் பயன்பட்டாக வேண்டும்.

இன்றைக்கு ஜாதிமத சண்டைகள் ஆங்காங்கு ஒன்றிரண்டு இடங்களில் என்றாலுங்கூட - அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்றன என்றாலுங்கூட - அதுகூட நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்கள் இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற காட்சியைத்தான் நீங்கள் காணுகிறீர்கள்.

தமிழகத்தில் அரசியல் தலைவர்களானாலும், சமுதாயத் தலைவர்களானாலும், பெருந்தலைவர் காமராஜரானாலும், பேறிஞர் அண்ணா அவர்களானாலும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களானாலும், காயிதே மில்லத் அவர்களானாலும், முத்துராமலிங்கத் தேவர் அவர்களானாலும், யாரும் சாதிகள் இருந்திட வேண்டுமென்று கூறியவர்கள் அல்ல. சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும், சாதி பேதம் அகற்றப்பட வேண்டும் என்பதில் திடமாக இருந்தவர்கள்தான். அப்படிப்பட்டவர்கள் உலவிய இந்தப் பூமியில் - அவர்கள் வாழ்ந்த இந்த மண்ணில் - அவர்கள் பக்குவப்படுத்திய இந்த நிலத்தில் இன்றைக்கு களை அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைப்பதைப் போல் சாதி வெறி, மத வெறி முளைப்பதையும் - அந்த மத வெறியையும், சாதி வெறியையும் மாய்ப்பதற்கு நாமெல்லாம் அன்பை ஆயுதமாக எடுத்துக் கொண்டு அமைதியை உருவாக்கப் பாடுபட்டதையும், நினைவு கூர்வதற்கும் இந்தப் பணி தொடர் பணியாக இருந்திட வேண்டுமென்பதற்கும் தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

ஏன் இந்தப் பிளவுகள்? மொத்தமாக ஆதிதிராவிட மக்களோ அல்லது முக்குலத்து மக்களோ அல்லது வன்னிய மக்களோ அல்லது யாதவ மக்களோ அல்லது உயர்சாதிக்காரர்களோ - மொத்தச் சமுதாயமாகக் கூடி நாங்கள் படை திரண்டு இன்னொரு சமுதாயத்தை எதிர்க்கப் போகிறோம் என்று சொல்கிறார்களா என்றால், அந்த நிலை நாட்டிலே இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் ஒரு சமுதாயத்திலே யாரோ ஒருவர் தோன்றுகிறார், அவர் தலைவராக வேண்டுமென்பதற்காக தான் பிறந்த சாதியை, சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார். பெரியார் பிறந்தார். தான் பிறந்த சமுதாயம் இழிவுற்றிருக்கிறதே என்பதற்காக மொத்தச் சமுதாயத்திற்கும் பாடுபட்டார். அண்ணா பிறந்தார், வாழ்ந்தார். அவர் தான் பிறந்த சமுதாயத்திற்காக மாத்திரமல்ல, தான் பிறந்த சமுதாயத்தைப் போன்றிருக்கிற எல்லா சமுதாயங்களிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும், புதுமையை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினார். இந்தியாவினுடைய அரசியல் ஆசானாக அம்பேத்கர் பிறந்தார். அந்த அம்பேத்கர் தான் பிறந்த சமுதாயத்திற்காக

மாத்திரமல்ல, எல்லா சமுதாயங்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்.

## சாதிக்கு ஒரு கட்சி – சாதிக்கு ஒரு தலைவர்

அத்தகைய நிலையிலே இன்றைக்கு பாடுபடுகிற தலைவர்கள் சமுதாயங்களிலே பிறக்கவில்லை. பிறந்திருந்தாலும் அவர்கள் தங்களை அப்படி உருவாக்கிக் கொள்ளவில்லை. தங்களை தன்னலத்தின் பாற்பட்டு உருவாக்கிக் கொள்வதற்காக தாங்கள் பிறந்த சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொள்கிற தலைவர்களாக இன்றைக்கு நாட்டிலே அன்றாடம் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். சாதிக்கொரு தலைவர் – ஒவ்வொரு சாதிக்கும் ஒரு கட்சி – என்றளவிற்கு நிலைமைகள் வளருகின்ற காரணத்தினாலே தான் அந்தச் சமுதாயத்திலே உள்ள மக்கள் ஒற்றுமையாக இருந்தாலுங்கூட, அவர்களைத் தூண்டி விட்டு கலவரங்களை, அமளிகளை இந்தத் தமிழ் நிலத்திலே ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அடித்தளத்து மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் – சமுதாயத்திலே இல்லை என்று கூறுகிற அறிவு குறைந்தவனல்ல நான், அந்த மக்களுக்காக இளமைக் காலந்தொட்டு என்னையே அர்ப்பணித்துக் கொண்டிருப்பவன். அதைப்போலவே சிறுபான்மை சமுதாயத்து மக்களுக்காக – அவர்கள் கிறிஸ்தவ சமுதாயமாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயமாக இருந்தாலும், எந்தச் சமுதாயத்து மக்களாக இருந்தாலும் அவர்களுக்காக என்னுடைய உயிரைப் பணயமாக வைத்து போராடக்கூடியவன். அவர்களுடைய உரிமைகளுக்காக வாதாடக் கூடியவன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

எனவேதான் இன்றைக்கு நான் இந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சியில் ஒன்றை மாத்திரம் நினைவுபடுத்தி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

## திருவிவிலியம் நூலில் சீராக்கின் ஞானம்

திருவிவிலியம் என்ற நூலில் சீராக்கின் ஞானம் என்று ஒரு பகுதி வருகிறது. இந்தச் சீராக்கின் ஞானம், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே எழுதப்பட்டது. அந்த சீராக்கின் ஞானம் என்ற பகுதியில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றால் –

> மனிதன் அமைதியாக வாழவேண்டும், வாழ்வில் உயரவேண்டும், அவனுடைய அமைதியையும் முன்னேற்றத்தையும் தடைப்படுத்தும் சாதிகள் தேவைதானா?
>
> **– கலைஞர்**

குழந்தாய்,
ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே;
கையேந்தி நிற்போரைக்
காத்திருக்க வைக்காதே.
பசித்திருப்போரை
வாட்டி வதைக்காதே;
வறுமையில் உழல்வோரை
எரிச்சலூட்டாதே.
உள்ளம் உடைந்தோர்க்கு
துயரங்களைக் கூட்டாதே;
வறுமையில் உழல்வோருக்குக்
காலம் தாழ்த்தாமல் உதவி செய்.
துன்புறுவோரின் வேண்டுதலைத்
தள்ளிவிடாதே;
ஏழையிடமிருந்து உன்
முகத்தைத்
திருப்பிக் கொள்ளாதே.
உன்னிடம் உதவி
வேண்டுவோரிடமிருந்து
உன் கண்களைத் திருப்பிக்
கொள்ளாதே;
உன்னைச் சபித்திட யாருக்கும்
வாய்ப்பு அளிக்காதே.
பூசலைத் தவிர்த்திடு;
உன் பாவங்கள் குறையும்.
சீற்றம் கொள்வோர் சண்டையை
மூட்டி விடுகின்றனர்.

(அதுதான் இன்றைக்கு நடக்கின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, 400 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள்)

பூசலைத் தவிர்த்திடுக!
உன் பாவங்கள் குறையும்.
சீற்றம் கொள்வோர் சண்டையை
மூட்டி விடுகின்றனர்.
பாவிகள் நட்பைக்
கலைக்கிறார்கள்;
அமைதியாய் இருப்போரிடையே
பிணக்கை விதைக்கிறார்கள்.
விறகின் தன்மைக்கு ஏற்ப
அது பற்றி எரியும்.
மனிதரின் வலிமையைப் பொறுத்து
அவர்களின் சீற்றம் அமையும்;
திடீர் வாக்குவாதம் நெருப்பை
மூட்டுகிறது;

(பார்க்கிறோமே அன்றாடம் இன்றைக்கு)

திடீர் வாக்குவாதம் நெருப்பை
மூட்டுகிறது;
திடீர்ப் பூசல் கொலைக்கு
இட்டுச் செல்கிறது.
ஊதும்போது தீப்பொறி
கொழுந்துவிட்டு எரிகிறது;
அதன் மீது துப்பும்போது
அது அணைந்து போகிறது;
இந்த இரு விளைவுகளுமே
உன் வாயில் இருந்தே
புறப்படுகின்றன.

ஊதுவதும் வாயில் இருந்துதான்; துப்பி அணைப்பதும் உன் வாயில் இருந்துதான். ஆகவே வாயைக் காப்பாற்று என்று அன்றைக்கே சொன்ன அந்த மொழியை மனதிலே வைத்து வாய்மையோடு நடப்போம். சமுதாயத்திலே நல்லிணக்கத்தை உருவாக்குவோம்.

*– மதுரையில் 27-12-1998 அன்று நடைபெற்ற சாதி-சமய நல்லிணக்க விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை*

# வாசனைத் திரவியங்கள் பயிரிட்டு வளம் பெறலாம்


— எம். ஞானசேகர், விவசாயத் தொழில் ஆலோசகர்

“ஸ்பைசஸ்” என்று அழைக்கப்படும் வாசனைத் திரவியங்களைப் பணப் பயிர்கள் என்று கூறுகின்றனர். ஏலம், மிளகு, புளி, வெந்தயம், ஜாதிக்காய், ஓமம். கிராம்பு, இஞ்சி, மஞ்சள், கடுகு இப்படிப்பட்ட பல பொருட்கள் பல்லாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டுதோறும் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்பயிர்களை நம்பிப் பல கோடி விவசாயிகள் உள்ளனர்.

இந்த வாசனைப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் வரவேற்பு அதிகரித்து வருகின்றது. இதரப் பயிர்களைவிட இலாபகரமாகவும் உள்ளது.

எனவே மத்திய அரசு வாசனைத் திரவியங்கள் வாரியம் (SPICES BOARD) என்ற அமைப்பை — கொச்சியைத் தலைமை இடமாகக் கொண்டு ஆரம்பித்துள்ளது. ஐ.ஏ.எஸ். அதிகாரியின் கீழ் இயங்கும் இதர நிறுவனம் இப்பொருட்களைப் பயிரிடுவோர், வாங்கி விற்போர், ஏற்றுமதியாளர்களுக்குப் பல உதவிகளைச் செய்து வருகிறது.

விவசாயிகளுக்கு நாற்றுக்களை வழங்குதல், பயிற்சி கொடுத்தல், வழிகாட்டுதல், விவசாயிகள் கருத்தரங்கம் நடத்துதல், ஸ்பைசஸ் இந்தியா எனும் தமிழ் மாத இதழை வெளியிடுதல் எனப் பல நற்செயல்களைச் செய்து வருகிறது. ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க மார்க்கெட்டிங் சென்டர்களை நடத்தி வருகிறது. ஆராய்ச்சி மையங்களை நடத்துகிறது.



ஏற்றுமதி செய்ய விரும்புவோருக்கு இலவச ஆலோசனைகளை வழங்குகிறது. இந்தியன் ஸ்பைசஸ் எனும் ஏற்றுமதி ஆலோசனை ஆங்கில வெளியீட்டினை மாதந்தோறும் வெளியிட்டு வருகின்றது. வெளிநாடுகளில் நடக்கும் டிரேட் ஃபேர் எனும் “தொழில் கண்காட்சிகளில்” கலந்துகொண்டு விளம்பரம் செய்து வருகிறது. புதிதாக வாசனைத் திரவியங்களைப் பயிரிட விரும்புவோருக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள், குறுகியகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றது.

இப்பொருட்களை உற்பத்தி செய்வதிலும், ஏற்றுமதி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதால் தமிழகமெங்கும் தன் கிளைகளை நிறுவியுள்ளது. இதன் தலைமை அலுவலக விலாசம்: ஸ்பைசஸ் போர்டு, அஞ்சல் பெட்டி எண்:2277, கொச்சி—682 025, கேரளா. இதன் தலைவராக திரு. வி. ஜெயசங்கர் எனும்

## தொழிலாளர் நலத் திட்டங்கள்

1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி தொழிலாளர் நல திட்டங்களை அமல்படுத்த நிதி ஆதாரங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஆண்டுதோறும் தொழிலாளர் நல நிதி வசூலித்து வருகிறது. இதனை தற்போது ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளியின் பங்காக ரூ.3ம், தொழிலதிபர்களின் பங்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.6ம், அரசின் பங்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.3ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு அவர்களது நலன் மேம்பாடு அடையும் பொருட்டு இவ்வாரியத்தால் ஏற்கெனவே பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன 10-ஆம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை புத்தகங்கள் வாங்கவும், கல்வித்தொகை, மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவி, மூன்று சக்கர வண்டி, இறந்த தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகை, தையற்ப் பயிற்சி பள்ளி, அவர்களுக்கு உதவித் தொகை, தட்டச்சு பயில உதவித் தொகை, குழந்தைகளுக்கு கல்விச் சீருடை, மதிய உணவு, படிப்பில் முதலாவதாக வரும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை, மகாபலிபுரம், குற்றாலம், வால்பாறை போன்ற இடங்களில் சுற்றுலா செல்லும் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் தங்கும் வசதி போன்றவைகளாகும்.

மேலும் பல நலத்திட்டங்களை அமுல்படுத்தவும் அதிக அளவு தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பயன்பெறும் பொருட்டு, 1998-ஆம் ஆண்டு முதல் இந்தத் தொகை தொழிலாளியின் பங்காக ரூ.5 எனவும், தொழிலதிபர்களின் பங்காக ரூ.10 எனவும், அரசின் பங்காக ரூ.5 எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அரசிற்கு ஆண்டு ஒன்றிற்கு ஏற்படும் மொத்தச் செலவு ரூ.75,00,000 ஆகும் என தெரிவிக்கப்படுகிறது. □

---

ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குக் கடிதம் எழுதி மேலும் விவரங்கள் கேட்டறியலாம்.

தமிழ்நாட்டுக்கான மண்டல அலுவலக முகவரி: ஸ்பைசஸ் போர்டு, 13, முதல் தளம், இரண்டாம் வீதி, கிழக்கு அபிராமபுரம், மைலாப்பூர், சென்னை–600 004. கிளை மண்டல அலுவலகம்: உதவி இயக்குநர், ஸ்பைசஸ் போர்டு, குரங்கணி சாலை, போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் 625 513. ஆலோசனை, வளர்ச்சி தொடர்பான தகவல்கள், மார்கெட்டிங் பற்றி இங்கு அறியலாம்.

கடிதம் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

மாநில ஆராய்ச்சி மையம்: விஞ்ஞானி, மாநில ஆராய்ச்சி மையம், இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிறுவனம், ஸ்பைசஸ் போர்டு, தடியன் குடிசை கிராமம், பெரும்பாறை – 624 212, திண்டுக்கல் மாவட்டம். இங்கு ஏலக்காய் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றது. ஏலக்காய் விவசாயிகள் நேரில் சென்று பயிற்சி பெறலாம்.

மார்க்கெட்டிங் மற்றும் விரிவாக்க மையங்கள்:


1. ஸ்பைஸ் போர்டு, 238, திருவனந்தபுரம் சாலை, இராஜபாளையம்–626 117, காமராஜ் மாவட்டம்
2. ஸ்பைசஸ் போர்டு மார்கெட் இண்டலிஜன்ஸ் அலுவலகம், 29பி/1, பிரையண்ட் நகர், 8வது வீதி, தூத்துக்குடி–628 008
3. ஸ்பைஸஸ் போர்டு கள அலுவலகம், 64–பி, வேலப்பர் கோவில் தெரு, கம்பம், தேனி மாவட்டம்–626 516
4. ஸ்பைசஸ் போர்டு கள அலுவலர், 16, இராதாகிருஷ்ணன் வீதி, ஆசிரியர் காலனி, ஈரோடு 638 011
5. ஸ்பைசஸ் போர்டு கள அலுவலகம், 223, கௌளி பிரவுந் சாலை, ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் 641 002.
6. ஸ்பைசஸ் போர்டு கள அலுவலகம், அஜந்தா ஸ்டுடியோ பில்டிங், கடலூர்–643 579, நீலகிரி மாவட்டம்
7. ஸ்பைசஸ் விவசாயிகள், வியாபாரிகள், மாணவர்கள் இந்த அலுவலகங்களில் இது பற்றிய தகவல்களைப் பெற்று மென்மேலும் முன்னேறலாம்.

**உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிது கூட முன்னேற்றம் காண முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது. தேசிய இனத்தை உருவாக்க முடியாது. ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும் அது உடைந்து சிதறி உருப்படாமல் போய் விடும்**

**– அம்பேத்கர்**

# பொழுதின்னும் விடியலையே!

– ரெ.எழில்மாறன்



நீரு பூத்த நெருப்பாக - நம்
நாட்டுக்குள்ளே இருக்குதய்யா!
யாரு செய்த ச(ா)தி - இது
யாவரையும் வருத்துதம்மா!

பேரு கூட சேத்துச் சொல்லி - சனம்
பெருமைபட்டுக் கொள்ளுதய்யா!
ஊருக் குள்ளே சாதியாலே - ஓர்
ஒற்றுமையே இல்லையம்மா!

சாதியாலே சண்டை யிட்டு - தினம்
சனங்களெல்லாம் சாகிறதே!
நீதி கூட சாதியாலே - இங்கு
நிலையில் மாறிப்போனதுவே!

நாதி யற்ற மக்களுக்கு - நல்ல
நாளுமின்னும் வாரலையே!
மோதி தினம் மாய்கின்றார் - நிலையில்
மாற்றமின்னும் சேரலையே!

சரித்தி ரத்தின் ஏடுகளில் - சாதிச்
சண்டைகளால் இரத்தக்கறை!
தரித்திரம் தான் பிடித்ததுவோ - மக்கள்
தாழ்வுயர்வு பிரித்தனரே!

சரிநிகர் சமம் என்று - மனதில்
சத்திய நெறிகள் கொண்டு
புரியாத மக்க ளெல்லாம் - இதைப்
புரிந்து வாழமாட்டாரோ!

சாதிக்கொரு சங்கம் வைத்து - பல
சங்கடங்கள் வந்ததென்ன?
சாமியிலும் கூட இங்கு - ஒரு
சாதிக்கொன்றாய் பிரித்ததென்ன?

ஆதி முதல் சாதியத்தான் - நாம்
அழிப்பதற்கு முடியலையே!
பூமியிது புனிதம் பெற - நல்ல
பொழுதின்னும் விடியலையே!

# எலும்புப் புற்றுநோய்

டாக்டர் எம். மயில்வாகனன்



ஒரு மனிதனின் வாழ்வுக்குச் சுவாசக் காற்று காரணமாக இருக்கலாம்; ஆனால், மனிதனின் கம்பீரமான தோற்றப் பொலிவுக்கு, உடலில் உள்ள எலும்புகளே முக்கியக் காரணம். எலும்பில்லாத உடலைக் கற்பனை செய்துதான் பாருங்களேன் – வெறும் சதைப் பிண்டமாகத்தான் இருக்கும்! உடலை நிமிர்த்தி நிறுத்துகிற வலிமை எப்படி வெறும் சதைக்கு உண்டாகும்?

அவ்வளவு முக்கியமான எலும்புகளை மிகுந்த கவனிப்போடு நாம் பாதுகாக்க வேண்டியது முக்கியம்.

விபத்துக் காரணமாக ஒருவர் கையிலோ, காலிலோ எலும்பு முறிவு ஏற்பட்டால் அதை அத்தோடு துண்டித்துவிட்டுப் புண்ணை ஆற்றிவிடும் காலம் ஒன்று இருந்தது. பிறகு – கையையோ காலையோ கட்டையிலேயே செய்து பொறுத்தும் காலம் வந்தது; ஆனால், இயற்கையான கைகால்களைப் போல இந்தப் போலி உறுப்புகளை அவ்வளவு சுலபமாக இயங்கச் செய்ய முடியாது.

இவ்வகையான குறைபாடுகூட இப்போதெல்லாம் – வெளி மாநிலங்களிலோ, வெளி நாடுகளிலோ அதிகமான பொருட்செலவின் மூலம் ஓரளவிற்குச் சரிப்படுத்தப்பட்டு வருவதாக நாம் அறிகிறோம்.

நம் உடலிலிருந்து வேறு ஒரு எலும்பை எடுத்து, உடைந்த எலும்பிற்குப் பதிலாகப் பொருத்தும் முறை ஒன்றும் இருக்கிறது.

இவ்வாறான எலும்புக் குறைபாடுகள் பொதுவானவை; இதைச் சரிப்படுத்துவது பற்றி மட்டும் கற்ற மருத்துவர்கள் நம் இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டிலே மட்டும் இவ்வகைத் திறம்பெற்ற மருத்துவ நிபுணர்கள் ஐநூறு பேருக்கும் குறைவாகவே இருக்கிறார்கள்.

இவர்களிலெல்லாம் இணையற்றவராக, எலும்புப் புற்றுநோய்ச் சிகிச்சை அளிப்பதில் (Custom Mega Prosthesis in Bone Tumours) குறிப்பிடத்தக்க சிறப்புடைய ஒரே முட நீக்கியல் மருத்துவராக இருக்கிறார் சென்னை–அரசுப் பொது மருத்துவ மனையில் உள்ள டாக்டர் எம். மயில்வாகனன்.

எப்படி என்கிறீர்களா? அதை அறியுமுன்பாக அந்தக் கொடிய நோயான எலும்புப் புற்றுநோயினைப் பற்றியும் சிறிது தெரிந்துகொள்ளலாம்.

தோளுக்குக் கீழே உள்ள புஜம், இடுப்புக்குக் கீழே தொடை அல்லது முட்டிப் பகுதிகளிலே உள்ள எலும்புகளில்தான் எலும்புப் புற்றுநோய் அதிகம் உண்டாகிறது. இதில் இன்னொரு கொடுமை – செல்வந்தர்களை என்ன காரணத்தினாலோ இந்நோய் அதிகம் பாதிப்பதில்லை; நடுத்தர– அல்லது பாமர மக்களுக்குத்தான் அதிகமாக வருகிறது.

இதற்கு என்ன காரணம் என்பது இனிமேல்தான் கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டும்.


அதேபோல– இந்நோய் ஆண்களுக்கு அதிக அளவில் வருமா, பெண்களுக்கு அதிக அளவில் வருமா, எந்த வயது வரம்புக்கு உட்பட்டவர்களுக்கு அதிக அளவில் வரும் என்றெல்லாம் கணக்கில்லை. இரு பாலினருக்கும் வரும்; எல்லா வயதினருக்கும் வரும்!

இதையெல்லாம் நமக்குத் தெரிவித்த டாக்டர் எம். மயில்வாகனன் அவர்களிடம் எந்த மாநிலத்தில் இந்த வகை எலும்புப் புற்றுநோய் அதிகம் காணப்படுகிறது என்று கேட்டோம்.

"முதன்முதலாக எலும்புப் புற்றுநோய்க்கு ஆளான நம் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நான் 30.10.1988ல் தான் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தினேன்; அதன்பிறகு நாளுக்கு நாள் இந்த வகையில் நானே என் திறமையை வளர்த்துக் கொண்டேன். இந்தப் பத்தாண்டு காலத்தில் பல மாநிலங்களையும் சேர்ந்த 216 ஆண்களையும், 156 பெண்களையும் இவ்வகை நோய்க்கூறு அடிப்படையில் மருத்துவ ரீதியில் நான் ஆராய்ந்திருக்கிறேன். இப்போதைக்கு நம் தமிழ்நாட்டில்தான் இந்நோய் அதிகம் உள்ளது. இதற்கு

அடுத்தபடியாகக் கேரளா, கர்நாடகம், ஆந்திரம் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் இதை வைத்தே எந்த மாநில மக்கள் அதிக அளவில் எலும்புப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அறுதியிட்டுச் சொல்லிவிடமுடியாது. இது ஒரு தேசிய நோய்தான்!" என்று சிரித்தவாறே கூறினார், அவர்.

எலும்பானது புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால்– அது கையாக இருந்தாலும், காலாக இருந்தாலும் அப்பகுதியை வெட்டி வீசிவிட்டால் அல்லது தீய்த்து விட்டால் சரியாகிவிடும் என்ற நிலை முன்பு இருந்தது. ஆனால், அப்படிச் செய்வது முடிவான நிவாரணமாக இருக்காது. அதுதொடர்பான கிருமிகள் உடலின் வேறு அங்கம் எங்காவது தங்கியிருக்கக்கூடும்; அப்படி பாதிக்கப்பட்ட பகுதி வெட்டப்பட்ட இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்துக் கூட, வேறு உறுப்பில் அதன்மூலம் புற்றுநோய் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எலும்புப் புற்றுநோய்க்கு ஆளானவர்களை நான் என் முழுப் பொறுப்பில் வைத்துச் சிகிச்சை தருவதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த நபர் எப்படியிருக்கிறார் என்று நானே கடைசிவரை கவனமாகக் கண்காணித்து வருகிறேன்" என்றார் டாக்டர்.


கையில் எலும்புப் புற்றுநோய் கண்டவர்

"சாதாரணமாக அவ்வகை எலும்புப் புற்றுநோய் கண்ட நோயாளிக்கு நீங்கள் அளிக்கும் சிகிச்சை பற்றிக் கொஞ்சம் விளக்கமுடியுமா?

"அந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட எலும்பை மட்டும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு, அப்பகுதியில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் அல்லது டைடானியம் மூலம் தக்கபடி வடிவமைத்துத் தயாரிக்கப்பட்ட செயற்கை உலோக எலும்பை மிகக் கவனத்தோடு பொருத்திவிடுகிறேன். இப்படிச் செய்வதன்மூலம் கையையோ காலையோ துண்டித்து வந்த நிலையை நான் அடியோடு மாற்றியிருக்கிறேன். இதுவரை வேறு யாரும் இப்படிச் செய்ததில்லை என்று என்னால் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடியும்!"

"எலும்புப் புற்றுநோயின் அறிகுறிகள் என்ன டாக்டர்?"

"ஆஸ்டியோ சார்கோமா, ஜெயன்ட்சல் டியூமர், காண்ட்ரோ சார்கோமா என்றெல்லாம் புற்றுநோயில் பல வகைகள் உண்டு. இதில் நான் தேர்ந்தெடுத்துப் பல வெளிநாடுகளுக்கும் போய்ப் படித்துத் தேர்ச்சி பெற்றுள்ள எலும்புப் புற்றுநோய் மிகவும் பயங்கரமானதாகும். பாதிக்கப்பட்ட எலும்பு உள்ள இடத்தில் உள்ள சதைப் பகுதி பெரிய அளவில் பருத்து விடும்; வலி தாங்க முடியாது..."

"அந்தப் புற்றுநோய் வந்த பகுதியில் உள்ள கையை அல்லது காலை வெட்டி விட்டால்?" என்று நாம் கேட்க – சிரித்து விட்டு அவர் சொன்னார். இத்தனையாண்டுக் காலமும் அதைத் தான் செய்து வந்தார்கள். நான் மனிதன் கை, கால் இல்லாமல் முடமாகி, படுத்த படுக்கை ஆகிவிடும் அந்த முறையைத் தானே மாற்றியிருக்கிறேன்!".

புகழ்பெற்ற முடநீக்கியல் மருத்துவர் எம்.நடராசன் அவர்களின் மகனான இவர், முடநீக்கியல் பற்றி Orthopaedic Oncology என்றொரு புத்தகமும் எழுதியிருக்கிறார். Text Book of Orthopaedic and Traumetology என்ற பெயரில் தன் தந்தையாருடன் இணைந்து இவரெழுதிய புத்தகம் தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலெல்லாம் பாடநூலாக வைக்கப்பட்டிருக்கிறது.

"உலோகத்தை எலும்பிற்குப் பதில் அதே வடிவில் பொருத்துவதென்றால் அதற்கு ஏராளமாகச் செலவாகுமே?" என்று கேட்டோம்.

"வெளிநாட்டிலிருந்து முன்பெல்லாம் தேவைப்பட்ட செயற்கை எலும்பை வரவழைத்து இந்தச் சிகிச்சையைச் செய்து வந்தேன். அதற்கு மூன்று இலட்சம் ரூபாய்க்குமேல், செலவாயிற்று. இப்போது அவ்வாறான செயற்கை எலும்புகளை நானே வடிவமைத்துத் தருவதை, தமிழ்நாட்டிலேயே தயாரித்துக் கொடுக்கிறார்கள். ஆகையால் இருபத்தையாயிரத்திலிருந்து முப்பதாயிரம் ரூபாய்க்குள்தான் செலவே ஆகும். அரசு பொது மருத்துவமனையிலும், அடையாறிலுள்ள புற்றுநோய் மையத்திலும் மிகவும் ஏழை எளிய மக்களுக்கு அரசு உதவியோடு இந்த வகைச் சிகிச்சையை இலவசமாகவே செய்கிறோம்" என்றார் டாக்டர்.

"அந்த மாதிரி எலும்பு இங்கே தமிழகத்தில் யாரால் தயாரிக்கப்படுகிறது?"

"சில ஆண்டுகளுக்குமுன், திருமணமாகாத இளம் பெண் ஒருவருக்கு இந்த நோய் வந்திருந்தது. அதை

நான் குணப்படுத்தினேன். அப்போதெல்லாம் செயற்கை எலும்பை வெளிநாட்டிலிருந்துதான் வரவழைக்கும் நிலைமை இருந்தது. அந்தப் பெண்ணின் தந்தை ஜெய்சிங் என்பவர் வசதிமிக்கவர் என்பதால் நான் கேட்டுக்கொண்டபடி வாங்கித் தந்தார். தன் மகள் குணமான மகிழ்ச்சியில் இருந்த அவர், ஒரு சிறிய உலோகத் தொழிற்சாலை வைத்திருக்கிறார். அதன் மூலம் 'ஏழை எளிய மக்களுக்கு இந்த நோய் வந்தால் தெரிவியுங்கள் இலவசமாகவே நான் செய்து தருகிறேன்' என்றார்; இப்போது நான் வடிவமைக்கும் செயற்கை எலும்பை அவர்தான் செய்து கொடுத்து வருகிறார்".

2000 ஆம் ஆண்டுக்குத் 'தமிழ்நாடு முடநீக்கியல் மருத்துவர் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள டாக்டர் எம். மயில்வாகனன். தமிழ்நாடு விஞ்ஞானத் தொழில் நுட்பக் கழகத்தால் வழங்கப்பட்ட 'அறிவியல் அறிஞர்' விருதையும் இந்த ஆண்டு பெற்றிருக்கிறார். அடையாறு புற்றுநோய் மருத்துவ மையத்திலும், இராணுவ மருத்துவமனையிலும் அப்பெல்லோ மருத்துவமனையிலும் டில்லியில் உள்ள எலும்பு புற்றுநோய் குறித்த ஆலோசனை மையத்திலும் (Centre for Advanced Research on Bone Tumours) சிறப்பு ஆலோசகராக இருந்து வருகிறார்.

கொரியாவில் எலும்புப் புற்று நோய்ச் சிகிச்சை மருத்துவர்கள் கழகம் நடத்திய மாநாட்டில் இவர் இது பற்றி ஆற்றிய உரை – எல்லோரையுமே வியக்கச் செய்வதாக இருந்தது; மாநாட்டு முடிவில், இவரே அந்த அமைப்பின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

பிரிட்டிஷ் முடநீக்கியல் மற்றும் எலும்புப் புற்றுநோய்க் கழகத்தின் சிறப்பு உறுப்பினராகவும் இத்தாலியில் உள்ள 'ஸ்கூல் ஆஃப் ஆங்காலஜி'யால் 'ஃபெலோ' பட்டம் பெற்றவராகவும் – மெக்சிகள், யு.ஐ.சி.சி., ஹௌமெடிகா போன்ற பல ஃபெலா ஷிப்புகள் விருது பெற்றவராகவும் இவர் இருக்கிறார்.

நாம் அடுத்த கேள்வி கேட்க நேரம் எடுத்துக் கொள்ளும்போது கூட, ஏதாவது புத்தகத்தைப் புரட்டும் சுபாவம் உடையவராக இருக்கிறார் டாக்டர் எம்.மயில்வாகனன்.

"ஏராளனமான விருதுகள் பாராட்டெல்லாம் வாங்கிக் குவித்துவிட்டீர்கள் போலிருக்கிறதே?" என்று நாம் கேட்டதும், ஒரு பெருமூச்சுடன் அவர் சொன்ன பதில் இது.

"தாய்வீடாம் தமிழ்நாடு என் திறமைக்கு அங்கீகாரம் அளித்துவிட்டது. வெளிநாடுகளும் என் சிகிச்சை முறையை வியந்து பாராட்டிச் சிறப்பித்துள்ளன. ஆனால், இந்திய அளவில்... அதாவது தேசிய அளவில் உரிய பாராட்டு எப்போது கிடைக்கப்போகிறதோ!"

எலும்புப் புற்றுநோய்ச் சிகிச்சையைப் பொருத்தவரை, பெரிய பலன் ஏதும் கருதாமல், அரிய தொண்டு புரிந்துவரும் டாக்டர் மயில்வாகனின் இந்தக்குறை விரைவில் நீங்கட்டும் என்று வாழ்த்திவிட்டு, நாம் அவரிடமிருந்து விடைபெற்றோம்.

– பி.எல்.ஆர்.

## இன்பம் பொங்கட்டும்

புதிய ஆண்டே வந்திடு வாயே
புதிய பாதை காட்டிடு வாயே
விதியை மாற்றித் தந்திடு வாயே
விடியலை நோக்கி நடத்திடு வாயே
சதியை வென்று சாதித் திடவே
சரித்தி ரத்தை மாற்றிடு வாயே
மதியால் என்றும் போதிக் கின்ற
மனித நேயம் மலரவைப் பாயே.

கொஞ்சம் பேரோ கோபுர வாழ்வில்
கொஞ்சும் அவர்க்கு உல்லாச
மென்றும்
பஞ்சம் நீங்கா பாட்ட ளியரோ
பசுமைப் புரட்சியின் கூட்டா ளியரே
தஞ்சம் தருவாய் புத்தாண் டேநீ
தாழ்ந்த குடிசை மானிடர் வாழ்வில்
அஞ்சும் நிலையில் இருக்கும் மக்கள்
அல்லல் நீக்கி அருள்வாய் நீயே

ஜனநா யகத்தைக் காத்தே நின்று
சமதர் மத்தை வளர்ப்பாய் நீயே
தினமும் காணும் தீமைகள் யாவும்
தீர்ந்திட வழிகள் தந்திடு வாயே
மனித மனத்தின் வன்முறை உணர்வை
மாற்றிட நீயும் எண்ணிடு வாயே
இனிய உலகை உருவாக் கியதில்
இன்பம் பொங்க வைத்திடு வாயே.

கவிஞர். எஸ்.எம். செபாஸ்டின்

தமிழ்நாட்டு பொருளாதாரத்தில் மீன்வளம் ஓர் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. இம்மாநிலம் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 442 கடலோரக் கிராமங்கள் உள்ளன. ஏறக்குறைய 8.53 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவர்களில் 2.62 இலட்சம் மீனவர்கள் கடல் மீன்பிடிப்பில் நேரிடையாக ஈடுபட்டுள்ளனர். மீனவ சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்தி அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர சீரிய பல நல்ல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அவைகளில் ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதி திட்டம், ஒரு வீடு ஒரு விளக்குத் திட்டம், மீனவ கிராமங்களில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், கடல் மீனவர் சேமிப்புத் திட்டம், மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம், மீன் இறங்குதளம் அமைத்தல், மீனவ மகளிருக்கு ஐந்து சக்கர இழுவை ஊர்திகள் அளித்தல் மற்றும் மீனவ மகளிர் பயிற்சித் திட்டம் ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். அதே போன்று உள்நாட்டு மீனவ மக்களுக்கும் வீட்டு வசதித் திட்டம், மீன்குஞ்சுகள் தேவையான அளவு உற்பத்தி செய்திட மீன் பண்ணை, குளங்கள் மற்றும் மீன்குஞ்சுப் பொறிப்பகம், மிதவைக் கூடுகள் அமைத்தல் நன்னீர் இறால் வளர்ப்புக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல்

1975–76ஆம் ஆண்டில் துவக்கிய இத்திட்டம் 1996–97ஆம் ஆண்டிலிருந்து "சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர்" நினைவினைப் போற்றும் வகையில் **"ம.சிங்கார வேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்"** என்ற சீரிய திட்டமாக அரசு செயல்படுத்தி வருகிறது.

### ஒரு வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டம்

ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1996–97ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 4,000 வீடுகளுக்கு **"ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு"** என்ற புதிய திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் மின் விளக்கு வசதி செய்து தர உரிய துரித நடவடிக்கை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

மீனவர் கிராமங்களுக்கு 1996–97ஆம் ஆண்டு 1,203 மின் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது.

1997–98இல் 1,188 மின் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1998–99ஆம் ஆண்டில் 2,578 புதிய மின் விளக்குகள் அமைக்கப் படும்.

இரண்டாண்டுச் சாதனைகள்

# மீன் வளத்துறை


ஆண்டொன்றுக்கு மீனவர்களுக்கு 4,000 வீடுகள் வீதம் 5 ஆண்டுகளில் 20,000 வீடுகள் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளது. அதன் அடிப்படையில் 1996–97 முதல் 1998–99 வரை 3 ஆண்டுகளுக்கு 12,000 வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தில் நடப்பு ஆண்டில் ஒரு வீட்டின் கட்டுமானச் செலவு, ரூ.37,000 ஆகும். இதுவரை 5,115 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டிற்கு இதுவரை 45 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

### மீனவர் வீடுகளை பழுது பார்க்கும் திட்டம்

1975–76 முதல் மீனவர்களுக்காக கட்டி கொடுக்கப்பட்ட இலவச வீடுகளை பழுது பார்க்க 1996–97இல் முதற்கட்டமாக 2,000 வீடுகளை பழுது பார்க்க ஒரு வீட்டிற்கு ரூ.5,000 வீதம் ரூபாய் ஒரு கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த சீரிய திட்டத்தினால் மீனவர்கள் தங்களுடைய பழுதடைந்த வீடுகளை புதுப்பித்துக் கொள்ள ஒரு வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்தி உள்ளது. 1,310 வீடுகளுக்கு பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் எஞ்சிய 690 வீடுகள் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### இணைப்புச் சாலைகள்

பெரும்பாலான மீனவர் கிராமங்கள் கடற்கரைப் பகுதியில் மணற்பாங்கான இடங்களில் அமைந்துள்ளன. சாலை வசதிகள் பெரும்பாலும் மீனவ கிராமங்களிலிருந்து தொலைவிலேயே உள்ளன. இதன் காரணமாக பிடிக்கப்படும் மீன்களை அங்காடிகளுக்கு கொண்டு செல்ல மீனவர்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். இந்த நிலைமையை போக்கிட இந்த அரசு மீன்களை மிக விரைவில் எடுத்துச் செல்ல ஏதுவாக இணைப்புச் சாலைகளை அமைத்து வருகிறது.



அந்த அடிப்படையில் 1996–97ஆம் ஆண்டு 34 இணைப்புச் சாலைகள் ரூபாய் ஒரு கோடியில் அமைக்க இந்த அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தப் பணிகளில் 32 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இரண்டு பணிகள் நடவடிக்கையில் உள்ளன. இது தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றின் குறுக்கே மேலமணக்குடி, கீழ மணக்குடி இணைப்புப் பாலம் ரூ.5 கோடியில் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### மீன் இறங்கு தளம்

கடலில் பிடிக்கப்படும் மீன்கள் கரை இறங்கியவுடன் சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் விற்பனை செய்ய ஏதுவாக அடிப்படை வசதிகளை பெருக்க ஆற்காட்டுத்துறை, வீரபாண்டியன் பட்டினம், பழவேற்காடு, தேங்காப் பட்டினம், முடசல் ஓடை, பாம்பன், ஜெகதாப்பட்டினம் புன்னக்காயல், அனுமந்தை, சேதுபாவாசத்திரம் ஆகிய இடங்களில் புதியதாக 10 மீன் இறங்கு தளங்கள்/தளம் ஒன்றிற்கு ரூ.1½ கோடி வீதம் ரூ.15 கோடிக்கு திட்டம் தீட்டி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசின் 50 சதவீத பங்காக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### மீன் இறங்கு தளங்களில் சோடியம் விளக்குகள்

தமிழகத்தின் 12 கடலோர மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 மீன் இறங்கு தளங்களில் தளம் ஒன்றுக்கு இரண்டு சோடியம் விளக்குகள் வீதம், மொத்தம் ரூ.13.20 இலட்சம் செலவில் விளக்குகள் அமைக்க அனுமதி அளித்துள்ளது. அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தபட ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதனால் இரவு காலங்களில் மீனவர்கள் மீன்பிடித்து கரைக்கு வரும் பொழுது அவர்களுக்கு சுகாதாரமான முறையில் மீன்களை கையாளவும் மீன்களை தரம் மற்றும் அளவு வாரியாக பிரிப்பதற்கு இந்த விளக்குகள் பேருதவியாக இருக்கும்.

### கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

தமிழ்நாட்டு கடல் மீனவர்களால் 12 மாதங்களுக்கும் மீன்பிடிக்க இயலாது. வடகிழக்கு பருவ மழை காரணமாகவும் செப்டம்பர் முதல் டிசம்பர் வரை கடலில் ஏற்படும் சூறாவளிக் காற்றினாலும், மீனவர்கள் மீன்பிடிக்க இயலாத நிலையினை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவிடும் வகையில் நிவாரணம் வழங்கும் திட்டம் மத்திய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ.270 வீதம் மீனவர்கள் மீன்பிடிக்க இயலாத காலங்களில் வழங்க இத்திட்டத்திற்காக ரூ.12.8 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி சுமார் 1.69 இலட்சம் மீனவர்கள் பயனடைவார்கள்.

### மீனவர் விபத்து காப்புறுத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மீனவர் ஒருவர் விபத்தில் சிக்கி மரணமடைந்தாலோ அல்லது முழு நிரந்தர ஊனமடைந்தாலோ ரூ.25,000, பகுதி நிரந்தர ஊனமடைந்தால் ரூ.12,500 புதுடெல்லி தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனம் மூலம் வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது ஒரு மீனவர் இறந்தால் அவரின் வாரிசுக்கு ரூ.50,000, பகுதி ஊனமடைந்தால் ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது.

### மீனவ மகளிர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இந்த அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1998–99 ஆம் ஆண்டு முதல் காப்பீட்டுத் தொகையாக ரூ.24 செலுத்தும் மீனவர்களுக்கும் ரூ.20 செலுத்தும் மீனவ மகளிருக்கும் விபத்தில் இறக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமடைந்தாலோ ரூ.1 இலட்சமும் பகுதிநேர ஊனமடைந்தாலோ ரூ.50,000 நிவாரணமாக வழங்க அரசு ஆணை.

### மரணமடைந்த மீனவர் குடும்பங்களுக்கு உதவி

இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த/மரணமடைந்த மீனவர் குடும்பங்களுக்கு ரூ.10,000 முதல் ரூ.50,000 வரை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தது. அதனை இந்த அரசு பரிசீலித்து 12.8.97 முதல் துப்பாக்கிச் சூட்டினால் காயமடையும்/மரணமடையும் மீனவர் குடும்பங்களுக்கு எவ்வித பாகுபாடுமில்லாமல் நிவாரணத் தொகையை ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கடல் மீன்பிடிப்பின்போது இலங்கை இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்படும் தமிழ்நாட்டு மீனவர்களின் குடும்பங்கள் மிகவும் அவதிப்படுவதை உணர்ந்து தமிழக முதல்வர் பாதுகாப்பு அளிக்கும்முகமாக நிவாரணம் அளிக்க ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் அக்குடும்பத் தலைவர் திரும்பி வரும்வரையில் நிவாரணமாக வழங்க ஆணைப் பிறப்பித்துள்ளார்.

### சுங்கத் தீர்வையை திரும்ப அளித்தல்

20 மீட்டர் நீளத்திற்கு குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் உயர் வேக டீசல் எரியெண்ணெய்க்கு சுங்கத் தீர்வு விதிக்கப்படுகிறது. 1996–97ஆம் ஆண்டு வரை இந்த சுங்கத் தீர்வையை திரும்ப பெற்று மாநில அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு 0.07 பைசா விதமுடன், மைய அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு 0.28 பைசா விதமும் மொத்தம் லிட்டர் ஒன்றுக்கு ரூ.0.35 பைசா வீதம் மானியம் வழங்க மத்திய அரசின் ஆதரவுடன் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31.3.1998 வரை 1,440 பயனிட்டாளர்களுக்கு ரூ.69,80,265 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுங்கத் தீர்வை உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டு மீனவர்கள் டீசல் மானியத்தை உயர்த்தித் தர கோரிக்கை எழுப்பியதை பரிசீலித்து 1997–98ஆம் ஆண்டிற்கு மாநில அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு 0.17 பைசா விதமும் மத்திய அரசின் பங்கு 0.28 பைசா விதமும் மொத்தம் ஒரு லிட்டருக்கு 0.45 பைசா விதம் டீசல் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

### பாரம்பரிய மீனவர்களுக்கு மண்ணெண்ணெய்/ டீசல் மானியம் வழங்கும் திட்டம்

பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் கட்டுமரங்கள் மற்றும் வள்ளம் போன்ற படகுகளில் உள்ள இயந்திரங்களில் உபயோகப் படுத்தும் டீசல்/ மண்ணெண்ணெய்க்கு இதுவரை எந்த அரசும் மானியம் வழங்கவில்லை. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை பயன்படுத்தும் மீனவர்களின் நிலைமைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவிடும் பொருட்டு டீசல் எண்ணெய்/ மண்ணெண்ணெய்க்கு மானியம் வழங்க இந்த அரசு ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது. இதன்படி 20,000 உட்பொருத்தும்/ வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் உள்ள சிறிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் ஒரு லிட்டருக்கு ரூ.0.50 பைசா வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.125க்கு மிகாமல் ஆண்டொன்றுக்கு ரூ.1,500 மானியமாக வழங்க நடப்பு நிதியாண்டில் அரசு ரூ.3 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது. அதனால் சிறிய படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களை வாங்கிட மீனவர்களை ஊக்குவிக்க ஏதுவாகிறது.

### மீனவ மகளிர்களுக்கு குளிர் சாதன பெட்டிகள் வழங்குதல்

மீன்கள் கெட்டுப்போகாமல் சுகாதாரமான முறையில் பாதுகாத்திட மீனவ மகளிர்களுக்கு உதவிடும் வகையில் மத்திய அரசு உதவியுடன் 2,400 குளிர் சாதனப் பெட்டிகளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிட ரூ.59.70 இலட்சத்திற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதில் மத்திய அரசு 75 விழுக்காடு மானியமாக வழங்குகிறது. மீதம் 25 விழுக்காடு பயனாளிகள் செலுத்த வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒப்பளிக்கப்பட்ட 5,000 குளிர் சாதனப் பெட்டிகளில் தமிழ்நாட்டிற்கு மட்டும் 2,400 குளிர் சாதனப்பெட்டிகள் இந்த அரசின் சீரிய முயற்சியால் பெறப்பட்டது. இதில் 60 லிட்டர் கொள்ளளவு, கொண்ட பெட்டிகள் 1750–ம் 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்பதன பெட்டிகள் 650–ம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

### பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 6 மீனவர் பயிற்சி நிலையங்களில் மீனவர்களுக்கான 10 மாத பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முந்தைய ஆட்சியில் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை மாதம் ரூ.150 ஆக வழங்கப்பட்டு வந்ததை ரூ.50 உயர்த்தி தற்போது ரூ.200 ஆக வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு கடல் பயணப்படியாக நாள் ஒன்றுக்கு ரூ.1.25 வழங்கியதை தற்போது ரூ.2.50 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் சிறுதரக் கம்பியர் (Junior Mechanic) பயிற்சி 3 மாவட்ட மீனவர் பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகிறது. வரும் ஆண்டில் கடலூரில் இப்பயிற்சி நடத்திட ஆணை பிறப்பிக்கப் பட்டது. இந்த ஆண்டில் 20 பேர் இப்பயிற்சியில் சேர உள்ளனர். கடலூர் மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் 750 விசைப் படகுகளுக்கு பழுது ஏற்படும்போது, பழுதை நீக்க தேவையான கம்பியர்கள் உருவாக இப்பயிற்சி மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

### மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஆட்டோ டிரெயிலர்கள் வழங்குதல்

கடந்த ஆட்சிக்காலத்தில் ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் (சிகபதுல்லாமனை) ஒரு 'வேன்' இலவசமாக வழங்கப் பட்டது. ஆனால் இந்த அரசு 25 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து சக்கர ஆட்டோ டிரெயிலர்களை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. இதில் 6 ஆட்டோ டிரெயிலர்கள் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆட்டோ டிரெயிலர்கள் விரைவில் மற்ற மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### சென்னை மெரினா மீன் காட்சியகத்தினை நவீனப்படுத்துதல்

சென்னை மெரினா கடற்கரை சுற்றுலாப் பயணிகளை கவரும் இயற்கை அழகு வாய்ந்ததாகும். இந்த கடற்கரையில் 88 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மீன் காட்சியகத்தை பழுதுபார்த்து நவீனப்படுத்த ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மெரினா மீன்காட்சியகம் புதுப்பொலிவுடன் பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படும்.

### ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் பலன் எல்லா கடலோர மீனவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக மீன் உற்பத்தியை பெருக்குவதுடன் மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும் ஏதுவாக ரூ.45 கோடியில் 13 கடலோர மாவட்ட 100 மீனவர் கூட்டுறவு சங்கங்களில் 1998–99 முதல் ஐந்தாண்டுகளில் செயல்படுத்திட ஆணை வழங்கி உள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் ரூ.34.65 கோடி செலவில் 5 ஆண்டுகளில் 10,900 மீனவ பயனாளிகளுக்கு 3,565 மீன்பிடி சாதனங்கள் (கட்டுமரம், எப்.ஆர்.பி. கட்டுமரம், பெரிய/சிறிய வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள்) வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டில் (1998–99) ரூ.502 இலட்சத்தில் 600 மீன்பிடி சாதனங்கள் 13 மாவட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளன. மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்கள், குளிர்பதன பெட்டி, இயந்திரங்களை பழுது பார்க்க ஏதுவாக பணி நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்துவதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.83 கோடி மதிப்புள்ள சுமார் 35 ஆயிரம் டன் மீன்கள் கூடுதலாக பிடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கயல்மலர்

மீனவ மக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு இந்த அரசு அறிவிக்கும் சீரிய திட்டங்களை அவர்கள் அறிந்து பயனடைய ஏதுவாக கயல் மலர் என்னும் காலாண்டு செய்திமடல் ஏப்ரல் 1998 முதல் வெளியிடப்படுகிறது. இதனை மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு அனுப்பி அரசின் திட்டங்களை அறிந்து அதன் முழுபலனை அடையவும் மற்ற மீனவர்களுக்கு் இத்திட்டங்களின் முக்கிய அம்சங்களைத் தெரிவிக்க இம்மலர் பெரிதும் துணையாக உள்ளது. காலாண்டுக்கு ஒரு முறை, ஆண்டிற்கு 4 மலர்கள் இந்த அரசினால் முதன்முறையாக வெளியிடப்படுகின்றன.

### கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு முறை

கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை மீன்துறை சிறப்பாக செயல்படுத்த மத்திய அரசின் முழுமானியத்துடன் 5 ரோந்துப்படகுகளை வாங்க அரசு ரூ.450 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 2 படகுகள் ஜனவரி திங்களுக்குள் வெள்ளோட்டம் விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்படகுகள் மீனவர்களின் பாதுகாப்பிற்கும் மீன்பிடிப்பு ஒழுங்கு முறைச் சட்டம் முறைப்படி சிறப்பாக செயல்படுத்த உதவியாக இருக்கும்.

### இலவச வேட்டி/சேலை வழங்குதல்

கடந்த ஆட்சியில் கடல் மீனவருக்கு மற்றும் மீனவ மகளிருக்கு வேட்டி சேலைகள் மீன்துறை மூலம் வழங்கப்பட்டது. இந்த அரசு கடந்த ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை வருவாய்துறை மூலம் செயல்படுத்திட ஆணைப்பிறப்பித்துள்ளது.

### மக்கள் சாசனம்

இந்தியாவில் முதன் முறையாக தமிழகத்தில் மீனவ மக்களுக்கு மீன்துறையின் அனைத்து திட்டங்களும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் மக்கள் சாசனம் தயாரிக்கப்பட்டு கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது. இதனால் அரசின் அனைத்து திட்டங்களும் எளிய மக்கள் அறிந்து பயன் பெறுவார்கள்.

### இறால்விலை

உலகச் சந்தையில் இறால் விலையை மீனவ மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக இத்துறை கடல்பொருள் ஏற்றுமதி கழகத்திடமிருந்து உலகச் சந்தையில் இறால் விலையை உடனுக்குடன் பெற்று அவ்விவரத்தை அனைத்து கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் தினசரி நாளிதழ்களில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற பல திட்டங்களை **கலைஞர்** அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி மீனவமக்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்து வருகிறது.

●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556

தமிழரசு

பதிவு எண்.

Licence No. TN/MS(C)/PP-23











தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்
மூன்று நிகழ்ச்சிகள்
முக்கிய செய்திகள் !



தியாகி விஸ்வநாததாஸ் இல்லம் - அன்றைய தோற்றம்



கலைஞர் அரசின் முயற்சியால்
தியாகி விஸ்வநாததாஸ் இல்லம் - இன்றைய தோற்றம்

# மூன்று நிகழ்ச்சிகள் முக்கிய செய்திகள்!

## தியாகி விஸ்வநாததாஸ் நினைவகத் திறப்பு விழா
திருமங்கலம் – மதுரை (27–12–1998)

## சாதி, சமய நல்லிணக்க விழா
மதுரை (27–12–1998)

## பூலித்தேவன் மாளிகை திறப்பு விழா
நெல்கட்டும் செவல் – திருநெல்வேலி (28–12–1998)

ஆகிய நிகழ்ச்சிகளில்,

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 14

'தமிழரசு' இலவச வெளியீடு

**31–12–1998**

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

# தியாகி விஸ்வநாததாஸ் நினைவகத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் உரை

வீரத் தியாகி விஸ்வநாததாஸ் நினைவில்லத்தையும், அந்த இல்லத்தில் அமைந்துள்ள நூலகத்தையும், அந்த இல்லத்தை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தையும் அந்தப் பெருமகனுடைய சிலையையும் திறந்து வைக்கின்ற இந்த உணர்ச்சி மிகுந்த வைபவத்தில் இந்த வட்டாரத்தில் உள்ள பயனாளிகள் பலருக்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவில் பல்வேறு அரசு உதவித் திட்டங்களை வழங்குகின்ற நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டிருப்பது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

## தமிழகம் முழுவதுமிருந்து வந்துள்ள மருத்துவ சகோதரர்கள்

இந்த விழா காண்பதற்காக இந்த விழாவிலே எனக்கு நன்றி கூறுவதற்காக, இந்த விழாவிலே அனைவரும் பெறுகிற மகிழ்ச்சியில் பங்கு கொள்வதற்காக தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவ சகோதரர்கள் இன்று ஒருநாள் தங்களுடைய வேலையை நிறுத்தி விட்டு கடைகளை மூடிவிட்டு வந்திருக்கின்ற காட்சியை வழிநெடுகக் கண்டேன். இங்கேயும் கண்டு பூரித்து நிற்கிறேன்.

## முடிதிருத்தும் நிலையங்கள்தான் திராவிட இயக்க தொட்டில்கள்

நம்முடைய பேரவைத் தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திராவிட இயக்கத்தின் தொட்டில் – சிகை அலங்காரக் கடைகள்தான்.

முடிதிருத்தும் நிலையங்கள்தான் திராவிட இயக்கத்தின் தொட்டில்களாக இருந்தன. ஏனென்றால் நாட்டில் இருக்கின்ற 'முடி'களைத் திருத்துவது – ஒவ்வொரு மனிதனுடைய முடிகளை மாத்திரமல்ல; நாட்டை ஆளுகின்றவர்களுடைய முடியையும் திருத்த வேண்டியது அவசியம்.

அதற்கு நாற்றங்காலாக, தொட்டிலாக இருந்த இடம், எங்களைப் பொறுத்தவரையில் திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையில், பெரியாருடைய கொள்கைகளைப் பொறுத்தவரையில் அறிஞர் அண்ணாவின் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரையில் தொட்டிலாக அமைந்திருந்த இடம் மருத்துவர்களின் கடைகள்.

நான் திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்றபோது, திருவாரூர் தெற்கு வீதியில் பிரசித்தி பெற்ற ஏ.என்.இரத்தனம் அண்ட் கோ என்ற ஒரு பெரிய வியாபார ஸ்தலம் உண்டு. அதற்குப் பக்கத்தில் ஒரு மூலையில் ஒரு முடிதிருத்தகம் உண்டு. அந்த முடித்திருத்தகத்தின் அதிபர் சிங்கப்பூர் சென்று திரும்பி வந்தவர். அப்போதெல்லாம் சிங்கப்பூர் சென்றவர்களை "சிங்கப்பூர் சவராளி" என்று அழைப்பது வழக்கம். சிங்கப்பூர் சவராளி என்றால், கப்பல் ஏறி வெளிநாடு சென்று வந்தவர்கள், குறிப்பாக சிங்கப்பூர் சென்று நிறைய சம்பாதித்துக் கொண்டு வந்தவர்கள் என்று பொருள்.

## அங்கேதான் 'குடியரசு', 'பகுத்தறிவு' பத்திரிகைகள் கிடைக்கும்

அவருடைய பெயர் இராமச்சந்திரன். தங்கப்பல் கட்டியிருப்பார். சிலபேர் பல் இல்லாத காரணத்தால், தங்கத்தில் பல் வைத்துக் கொள்வதும் உண்டு. பல் இருப்பவர்களேகூட, தங்கத்தால் பல்லின் மீது தங்கத் தகடு கட்டிக் கொள்வது உண்டு. பல் இருந்தும் தங்கத்தால் பல்லில் தகடு போட்டு கட்டிக் கொண்டிருந்தவர் அந்த முடிதிருத்தும் தொழிலகத்தை நடத்திய இராமச்சந்திரன் அவர்கள்.

நான் இளைஞனாக இருந்த காரணத்தால், அவர் என்னை "தம்பி, தம்பி" என்று அன்போடு அழைப்பார். நான் அவருடைய கடைக்குச் செல்வது முடிதிருத்திக் கொள்வதற்கு மாத்திரமல்ல; அவரோடு உரையாடுவதற்காகவும் அடிக்கடி செல்வது வழக்கம். அங்கேதான் அந்தக் காலத்திலே யாரும் படிக்கப் பயப்படுகிற பச்சை அட்டை 'குடியரசு' பத்திரிகை படிக்கக் கிடைக்கும். 'பகுத்தறிவு' பத்திரிகை படிக்கக் கிடைக்கும்.

அவர் தான் படிப்பது மாத்திரமல்லாமல்; அங்கே அவரிடத்திலே முடிவெட்டிக் கொள்ள வருபவர்கள், ஷேவிங் செய்து கொள்ள

வருபவர்களிடமெல்லாம் அந்தப் பத்திரிகைகளைக் கொடுத்து, உள்ளே வருகிறவர்கள் முடியை மாத்திரம் திருத்திக் கொண்டு போகமாட்டார்கள். மூளையையும் திருத்திக் கொண்டு போகிற அளவிற்கு பக்குவப்படுத்தக் கூடிய அத்தகைய நல்ல திறமையாளர் அந்த இராமச்சந்திரன்.

இன்றைக்கு அவர் இல்லை. இருந்தாலும் அவரை நான் நினைவுகூர்வது இந்த நிகழ்ச்சியிலே மிகமிக முக்கியம். இப்படி ஒவ்வொருடைய மருத்துவருடைய கடையிலும் அன்றைக்கு, யாரும் படிக்கக்கூடாது, படித்தால் பாவம், ஆபத்து, அரசாங்கத் தடை உண்டு என்றெல்லாம் இருந்த சூழ்நிலையில் 'குடியரசு' பத்திரிகையை 'பகுத்தறிவு' பத்திரிகையை சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகளை, பெரியாரின், அண்ணாவின் புத்தகங்களை,'திராவிட நாடு' பத்திரிகையை அன்றைக்கு இந்தக் கடைகளில்தான் படிக்க முடியும். வேறு எங்கேயும் கிடையாது.

நூல் நிலையங்களில் எங்கேயும் இதற்கு அனுமதி கொடுக்க மாட்டார்கள். நகராட்சி மன்றம் இருக்கும். அங்கே நூல் நிலையம் இருக்கும். ஆனால் இந்தப் பத்திரிகைகளை, புத்தகங்களை அங்கே படிக்க முடியாது. எனவே எங்களுக்கு நிரந்தரமான, யாராலும் தட்டிக் கேட்க முடியாத நூல் நிலையங்களாக இந்த மருத்துவர்களின் கடைகள்தான் அன்றைக்கும் இருந்தன. இன்றைக்கும் இருக்கின்றன.

### இன்றைக்கும் நமது நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் விஸ்வநாததாஸ்

அவர்களிலே, அந்தச் சமுதாயத்திலே பிறந்து இன்றைக்கு தியாகத் திருவிளக்காக, இந்த நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட மாபெரும் கலைஞராக வாழ்ந்தவர், இன்றைக்கும் நமது நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தியாகி விஸ்வநாததாஸ்.

தியாகி விஸ்வநாததாஸ் அவர்களுக்கு ஒரு நினைவு இல்லத்தை உருவாக்க வேண்டும், அதுவும் அவர் வாழ்ந்த இடத்தையே நினைவு இல்லமாக ஆக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்றால், நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நான் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கும் பழக்கம் உடையவன். அது நாளேடாக இருந்தாலும் சரி, வார ஏடாக இருந்தாலும் சரி – எல்லா ஏடுகளையும் படிக்கக் கூடியவன்.

சில ஏடுகள் வேண்டுமென்றே எதிர்த்து எழுதுகிற ஏடுகளாக இருக்கும். சில தினசரி பத்திரிகைகள் வேண்டுமென்றே என்னைப் பற்றியும், என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிற கழகத்தைப் பற்றியும், அல்லது என்னை ஆட்சிப் பொறுப்பின் முதல்வனாக ஏற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியைப் பற்றியும் வேண்டுமென்றே வெறுப்போடு எழுதக்கூடிய ஏடுகளும் உண்டு. இருந்தாலும் கூட, என்னதான் சொல்கிறார்கள் பார்ப்போம் என்பதற்காக, நான் அவைகளைத் தொடர்ந்து படிப்பதுண்டு. நான் மாத்திரமல்ல; என்னுடைய அமைச்சர்களையும் கூட, தினந்தோறும் எல்லாப் பத்திரிகைகளையும் முடிந்தவரையில் படியுங்கள் என்று கூறுவதுண்டு. அதிகாரிகளையும் நான் கட்டாயப்படுத்துவது உண்டு. அவர்களையும் "படியுங்கள், அப்போதுதான் என்ன குறை என்பதை அவர்கள் எடுத்துச் சொல்ல அதை நாம் நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய நிலை நமக்கு ஏற்படும்" என்று சொல்வேன்.

அப்படி நான் படித்தபோது ஒரு வாரப் பத்திரிகையில் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் எழுதிய கட்டுரை ஒன்று என்னுடைய கவனத்திற்கு வந்தது. அந்தக் கட்டுரையில்தான் வீரத்தியாகி விஸ்வநாததாஸ் அவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

### சுந்தரலிங்கம் வாரிசுகளுக்காக ஒரு நகரமே நிர்மாணிக்கப்பட்டது

அதற்கு முன்பே 'விகடன்' பத்திரிகை என்று கருதுகிறேன். அந்தப் பத்திரிகையில் வீரன் சுந்தரலிங்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தளபதிகளில் ஒருவர் வீரன் சுந்தரலிங்கம்.

முன்பிருந்த கழக அரசு, வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு – கோட்டை கட்டி எழுப்பியது. அவருடைய வாரிசுதாரர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுத்து வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. ஆனால் கட்டபொம்மனுக்கு, தளபதியாக இருந்த சுந்தரலிங்கத்தினுடைய வாரிசுதாரர்கள், வழித்தோன்றல்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று 'விகடன்' பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதப்பட்டிருந்தது. அந்த வாரிசுதாரர்களின் பெயர்கள் சிலவற்றையும், 'விகடன் ஏடு' குறிப்பிட்டிருந்தது. உடனடியாக நான் அந்த வாரிசுதாரர்களுக்கு கடிதம் எழுதச் சொல்லி, அவர்களை வரவழைத்துப்

பேசி, சுந்தரலிங்கம் பெயரால் கட்டபொம்மன் கோட்டைக்குப் பக்கத்திலேயே, “வீரன் சுந்தரலிங்கனார் நகர்” என்ற ஒன்றை அமைத்து அங்கே 200 வீடுகளைக் கொண்டு ஒரு நகரமே நிர்மாணிக்கப்பட்டு அங்கே அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்து, சுந்தரலிங்கத்தினுடைய வாரிசுகள், வழித்தோன்றல்கள் அத்தனை பேரையும் அங்கே குடியமர்த்துகின்ற காரியத்தைச் செய்து முடித்தேன்.

## குமரி அனந்தன் கட்டுரையைப் படித்தவுடன் கோட்டையில் அறிவிப்பு

அதைப்போல ‘குமுதம்’ பத்திரிகையைப் படித்தவுடன், அதில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் எழுதிய கட்டுரையைப் படித்தவுடன், படித்த மறுநாள் ஆகஸ்டு 15 – அவர் இங்கே குறிப்பிட்டதைப்போல – சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றுகின்ற நாளின்போதே நான் குறிப்பிட்டேன்; “வீரத் தியாகி விஸ்வநாததாசுக்கு அவர் வாழ்ந்த இடத்திலேயே, அந்த வீட்டிலேயே நினைவகம் அமைக்கப்படும்” என்று சொன்னேன்.

அந்த எண்ணத்தை வெளியிட்டு அதை உடனடியாக செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் காசி விஸ்வநாதன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, மிக விரைவில் அதைக் கட்டி முடித்திருக்கிறார். அவருக்கும் அவருக்குத் துணையாக இருந்த பொதுப்பணித்துறைக்கும், மற்ற நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை, பாராட்டுதலை, வாழ்த்துக்களை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமைந்திருக்கின்ற இந்த இல்லம் – அமைச்சர் முல்லைவேந்தன் குறிப்பிட்டதைப் போல, மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல, இந்த இல்லம் கடனில் மூழ்கிய காரணத்தால் – ஒருவர் அதை ஏலத்தில் 2000 ரூபாய் அளவிற்கு எடுத்து தன் வசப்படுத்தியிருந்தார். அந்த இல்லத்தில் எப்படி நாம் நினைவு இல்லம் எழுப்ப முடியும் என்று யோசித்தபோது, அவரிடத்திலே பேசி 11 இலட்சம் ரூபாய் அந்த இல்லத்திற்காகத் தந்து, மேலும் 50 இலட்சம் ரூபாய் செலவழித்து ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்டதுதான் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் என்பதை உங்களிடம் நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

தியாகிகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து காரியங்களைச் செய்து வருகிறது என்பதை இலக்கியச் செல்வரும், பேரவைத் தலைவர் அவர்களும், முல்லைவேந்தன் அவர்களும், சமயநல்லூர் செல்வராசு அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக் கின்றார்கள்.

அவைகளைப் பற்றியெல்லாம் ஒவ்வொன்றாக நான் சொன்னால்; விரிக்கின் பெருகும். அதை ஒரு நூலாக வெளியிட்டால் கூட 100, 200 பக்கம் கொண்ட நூலாக அது அமையும்.

**1969**–ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்தக் கால கட்டத்தில், 1972ல் இந்திய சுதந்திரத்தின் வெள்ளிவிழா ஆண்டின்போது இந்தியாவின் தலைநகரான டெல்லிக்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தியாகிகளை அனுப்பி வைத்தார்கள். ஆனால் அப்படி அனுப்பி வைக்கப்பட்ட தியாகிகளை இரயிலடி வரையிலே சென்று அவர்களுக்கு சால்வை அணிவித்து வழியனுப்பி வைத்த ஒரே ஒரு மாநில முதலமைச்சர் நான் தான் என்பதை உங்களுக்கு அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்வேன்.

டெல்லிக்குச் சென்ற மற்ற மாநிலங்களின் தியாகிகள் எல்லாம் எவ்வளவு வசதிக் குறைவால் கஷ்டப்பட்டார்கள். ஆனால் நம் மாநிலத்திலிருந்து சென்ற தியாகிகள் எவ்வளவு வசதியாகச் சென்று திரும்பினார்கள் என்பது, அவர்களே மற்றவர்களிடம் கூறிய செய்திகளாகும். அது நம்முடைய இலக்கியச் செல்வருக்கும் தெரிந்த ஒரு செய்திதான்.

## குமரி அனந்தன் கோரியபடி தியாகிகள் மணிமண்டபம் அமைக்கப்பட்டது

இந்த விஸ்வநாததாஸ் இல்லம் மாத்திரமல்ல; சென்னையில் காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் பல வடநாட்டுத் தலைவர்கள் எல்லாம் கலந்துக் கொண்ட விழாவில், காங்கிரஸ் கட்சியினுடைய முதுபெரும் தலைவர் நிஜலிங்கப்பா கலந்து கொண்ட விழாவில், கேப்டன் லட்சுமி அம்மையார் கலந்து கொண்ட அந்த விழாவில் குமரி அனந்தன் தான் சொன்னார்; “தியாகிகளுக்கு ஒரு மணிமண்டபம் அமைக்க

வேண்டும்'' என்று அவர்தான் சொன்னார். அது கடந்த சில வாரங்களுக்கு முன்பு சென்னையிலே இராஜ்பவனுக்கு அருகிலே அமைக்கப்பட்டு தமிழகத்திலே இருக்கின்ற எல்லா தியாகிகளின் படங்களும் அங்கே வைக்கப்பட்டு அந்த விழாவும் நடத்தப்பட்டது. அதற்கு நான் குமரி அனந்தன் அவர்களை அழைத்திருந்தேன்.

யார் காரணகர்த்தாக்களாக இருந்து தூண்டி விடுகிறார்களோ, அவர்களை அந்த விழாக்களுக்கு அழைப்பது ஒரு பண்பாடு என்ற முறையிலே அவரை அழைத்தேன். அதைப்போல சட்டமன்றத்திலே நண்பர்கள் சந்தானம் அவர்களும், வல்லரசு அவர்களும், "சுதந்திரதின பொன்விழாவின் போது நேதாஜியின் சிலையை சென்னையில் அமைக்க வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையை ஏற்று சென்னை கடற்கரையில் நேதாஜியின் சிலையைத் திறந்து வைத்தேன். அதற்கு அந்தப் பண்பாட்டு உணர்வோடு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் அய்யணன் அம்பலம் அவர்களை அழைத்து அந்த திறப்பு விழா நிகழ்ச்சியை நடத்தினேன். காரணம்; தூண்டுதலாளர்களாக இருந்தார்கள் என்பதால்!

அதைப்போல இன்றைக்கு இந்த விழாவிற்கு இலக்கியச் செல்வர் குமரிஅனந்தனை அழைத்திருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் வேறு ஒன்றும் அல்ல; சில பத்திரிகைகளில் கூட பார்த்தேன். "கருணாநிதி தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து வரும் போதெல்லாம்; காங்கிரஸ்காரர்களை அழைத்து அவர்களுக்கு விருதுகள் கொடுப்பார்" என்று ஒரு தலைவர் பேசியதை இன்று பத்திரிகைகளில் பார்த்தேன்.

## வ.உ.சி. இழுத்த செக்கை சென்னையில் கண்காட்சிப் பொருளாக வைத்தோம்

1969—ல் நான் முதலமைச்சராக வந்தபோது வ.உ.சிதம்பரனார் அவர்கள் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லி, அது கோவை சிறைச்சாலையில் இருப்பதைக் கண்டு, அதைக் கொண்டு வந்து அந்த செக்கை — சென்னையில் வைத்து கண்காட்சிப் பொருளாக ஆக்கியவன் இந்தக் கருணாநிதி. அப்பொழுது ஒன்றும் கருணாநிதிக்கு ஆட்சி போய்விடும் என்ற கவலை இல்லை, அச்சம் இல்லை, பயம் இல்லை.

சிலபேர் வேறு 'செக்கு'களை தேடிக் கொண்டிருந்த கால கட்டத்தில் நான் வ.உ.சி. இழுத்த செக்கு எங்கே என்று தேடிக் கண்டுபிடித்து சென்னையிலே கொண்டுவந்து வைத்தேன்.

## யாரையும் கைக்குள் போடவேண்டிய அவசியம் எனக்கு இல்லை

அதை மறந்துவிட்டு, ஏதோ குமரிஅனந்தனை அழைத்து அவருக்கு நான் விருது கொடுத்த காரணத்தாலோ, அல்லது இங்கே இந்த விழாவில் அவர் உரையாற்ற வேண்டும் என்று விரும்பிய காரணத்தாலோ, அவர்களை எல்லாம் நான் ஏதோ என் கைக்குள் போட்டுக் கொள்ள எண்ணுகிறேன் என்று யாரும் கருதத் தேவையில்லை. அவருடைய 'கை' அவருடனேயே இருக்கிறது. 'கை' என்றால் உங்களுக்குப் புரியும். எனவே யாரையும் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கும் இல்லை, இந்தக் கட்சிக்கும் இல்லை. இந்தக் கட்சி தலைமையேற்று நடத்துகின்ற இந்த ஆட்சிக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லதைச் சொன்னால், நல்லதை நினைவூட்டினால் நினைவூட்டியதை இன்று செய்து முடித்திருக்கிறோம். தொடர்ந்து பல விஷயங்களை இங்கே அவர்கள் சொன்னார்கள். இங்கே உள்ள தெருக்களுக்கு பெயர் வைக்க வேண்டும் என்பதைப் பற்றிக்கூட இலக்கியச் செல்வர் சொன்னார்.

## தெருக்களுக்கு பெயர் சூட்ட அரசு தயாராக உள்ளது

அவர் இன்றைக்குச் சொல்கிறார். ஆனால் நம்முடைய என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் 22.12.98 தேதியிட்டு ஒரு கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் "திருமங்கலத்தில் டிசம்பர் 27ஆம் தேதி தாங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் மறைந்த மூத்த தியாகிகளின் நினைவாக எங்கள் தந்தையார் திரு.என்.வீரபத்திரத் தேவர் வாழ்ந்த ஜவஹர் நகர் 7வது தெருவின் பெயரை 'தியாகி என்.எஸ்.வீரபத்திரன் தெரு' என்றும், திரு.புலி எஸ்.மீனாட்சி சுந்தரம் அய்யர் வாழ்ந்த உசிலம்பட்டி சாலையை, 'தியாகி புலி மீனாட்சி சுந்தரம் தெரு' என்றும் பெயர் மாற்றி, தாங்கள் இந்த நிகழ்ச்சியிலே அறிவிக்க

வேண்டும் என்று மெத்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று என்.எஸ்.வி.சித்தன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

இதை நான் அறிவிப்பதற்கு பதிலாக, இங்கே நகராட்சி மன்றத் தலைவர் அதியமான் அவர்களுக்கு சிபாரிசு செய்கிறேன். நகராட்சி மன்றத்திலே இதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை அரசுக்கு அனுப்பினால், அதை அரசு ஏற்றுக் கொண்டு – அந்தப் பெயர்களைச் சூட்டத் தயாராக இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஸ்வநாததாஸ் வாரிசுகளை**
**இந்த அரசு கைவிட்டு விடவில்லை**

தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் வாரிசுகளை இந்த அரசு கைவிட்டு விடவில்லை என்பதற்கு அடையாளமாக சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

விஸ்வநாததாஸ் அவர்களின் முதலாவது மகன், தியாகி சுப்பிரமணியதாஸ் காலமாகி விட்டார். இவரது துணைவியார் திருமதி கண்ணம்மாள். இந்த அம்மையாருக்கு மைய அரசின் தொடர் ஒய்வூதியமாக 3000 ரூபாய் கிடைக்கிறது. மாநில அரசு ஒய்வூதியமாக 500 ரூபாயும், மருத்துவப்படியாக 15 ரூபாயும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

அடுத்து விஸ்வநாததாஸ் அவர்களின் மகள் திருமதி. பிச்சம்மாள். இவருக்கு மாநில அரசு தொடர் ஒய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக 15 ரூபாயும் அளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்து, அவருடைய மகன் காசிநாதன். இவர் காலமாகி விட்டார். இவருடைய மகள் திருமதி பாப்பாத்தியம்மாள். அவருக்கு மாநில அரசு தொடர் ஒய்வூதியமாக 1,500 ரூபாயும் மருத்துவப்படியாக 15 ரூபாயும் அளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்து – அவரது மகள் தங்கத்தாய். இவர் மாநில அரசின் தொடர் ஒய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக 15 ரூபாயும் பெற்று வருகிறார்.

அடுத்து அவருடைய மகன் முத்தையா தாஸ். இவர் மாநில அரசின் தொடர் ஒய்வூதியமாக 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக 15 ரூபாயும் பெற்று வருகிறார். விஸ்வநாததாசின் மகன் முத்தையா தாசுக்கு திருவில்லிபுத்தூர் வட்டம் – பாட்டக்குளம் சல்லிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் சமத்துவபுரத்தில் ஒரு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஸ்வநாததாசின் பேரன் குணசேகரனுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 40,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

விஸ்வநாததாசின் பேத்தி நிர்மலா தேவியின் கணவரான கே.கணேசனுக்கு ரெடிமேடு ஆடைகள் தயாரிக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 20,000 ரூபாய் நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

விஸ்வநாததாசின் பேரன் குணசேகரனுக்கும், பேரன்களின் மனைவியரான திருமதி.கிருஷ்ணவேணி, திருமதி. உமாராணி ஆகியோருக்கும் பேத்தியர் சரஸ்வதி, பாக்கியலட்சுமி, பஞ்சவர்ணம், நிர்மலா தேவி ஆகியோருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் அரசினால் இன்றைக்கு வழங்கப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் வசித்து வரும் விஸ்வநாததாசின் மகள் திருமதி. பிச்சம்மாளின் பேத்தி திருமதி. அமலம் புஷ்பத்திற்கு 3,500 ரூபாய் செலவிலே ஒரு தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.

அதேபோல் விஸ்வநாததாசின் மற்றொரு மகன் திருமதி.தங்கத்தாயின் பேத்தி திருமதி. எலிசபெத் ராணிக்கு 3,500 ரூபாய் செலவில் ஒரு தையல் இயந்திரமும் இந்த விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் அந்தக் குடும்பத்திலே உள்ள உறுப்பினர்களை மறவாமல் அரசின் சார்பில் செய்யப்படுகின்ற காரியங்கள்.

இவைகள் மாத்திரம் விசுவநாததாசின் புகழுக்கு, அவருடைய தியாகத்திற்குப் போதுமானவை என்று சொல்ல மாட்டேன். விஸ்வநாததாசின் குடும்பத்திலே திருமணமாகாத பெண்கள் இருப்பதாக குமரிஅனந்தன் இங்கே சொன்னார். அதைப்பற்றியும் நிச்சயமாக

விசாரித்து அந்த திருமண உதவியையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துக்காட்டுகிறேன்.

## நேருவுக்கே பயப்படாத அரசாங்கம் விஸ்வநாததாசுக்கு பயப்பட்டது

விஸ்வநாத தாஸ் எந்த அளவிற்கு பல ஏகாதிபத்தியங்களால் வெறுக்கப்பட்டவர் அல்லது எத்தனை ஏகாதிபத்தியங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தவர் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், பண்டித ஜவஹர்லால் நேரு, அவருடைய திருமகளார் இந்திராகாந்தியோடு இலங்கைக்குச் சென்றார். அவர்கள் சென்ற அதே கப்பலில் விஸ்வநாத தாஸ், அவருடைய குழுவினரோடு கலை நிகழ்ச்சி நடத்த இலங்கைக்குச் சென்றார். தலைமன்னாரில் போய் கப்பல் நின்றதும் ஜவஹர்லால் நேரு அவர்களையும் இந்திராகாந்தி அவர்களையும் இலங்கையிலே இறங்க அந்த அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் விஸ்வநாத தாசையும், அவரது குழுவினரையும், அங்கே இறங்கக் கூடாது என்று திரும்ப இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது; காரணம் அவர்கள் அங்கே வந்து பாடினால், கலை நிகழ்ச்சி நடத்தினால் பெரிய புரட்சி ஏற்படும் என்ற அந்த பயத்தின் காரணமாக அவர்களை திருப்பிஅனுப்பி வைத்தது.

இப்படி நேருவுக்கே பயப்படாத அரசாங்கம், அன்றைக்கு விஸ்வநாத தாசுக்குப் பயப்பட்டது என்றால், ஒரு கலைஞனுக்குக் கிடைத்த அந்தப் புகழ் – நானும் ஒரு கலைஞன் என்பதால் அந்தப் புகழில் எனக்கும் பங்குண்டு என்கின்ற காரணத்தால் அந்தப் பங்கினைப் பெறுவதிலே எனக்குப் பெருமை உண்டு என்பதால் இந்த விழா இவ்வளவு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதிலே நீங்கள் இங்கே பல்லாயிரக்கணக்கிலே கலந்து கொண்டு, உங்களுடைய அன்பையும், பாசத்தையும் வழங்கி இருக்கிறீர்கள். விசுவநாததாசைப் போன்ற வீரத்தியாகிகள் இந்தச் சமுதாயத்திலே மேலும் மேலும் உருவாக வேண்டும். அந்தத் துணிவான கலைஞர்கள் மேலும் மேலும் உருவாக வேண்டும்.

# சாதி, சமய நல்லிணக்க விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை

இந்தச் சமுதாய நல்லிணக்க விழாவிலே கலந்துகொண்டு மதுரை மறை மாநில வைர விழா நிகழ்ச்சி கண்டு களிப்படைகின்ற வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மேடையைப் பார்க்கிறேன். சமுதாய நல்லிணக்கத்தின் அடையாளச் சின்னமாக இந்த மேடை விளங்குகிறது. இப்படித்தான் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ரயில்வே விழா மேடை அமைந்திட வேண்டுமென்று நான் விரும்பினேன். அதற்கு எத்தனையோ விமர்சனங்கள் வந்தன. நான் யாரையும் அந்த மேடைக்கு அழைக்க வேண்டாமென்று சொல்லவில்லை, அவர்களோடு மற்றவர்களையும் அழைத்து மத நல்லிணக்கம், சமுதாய நல்லிணக்கம் காண்பதில் மாநில அரசைப் போலவே மத்திய அரசுக்கும் பொறுப்புண்டு என்பதை உலகத்திற்குக் காட்டுங்கள் என்ற வேண்டுகோளைத்தான் விடுத்தேன். ஆனால் அந்த எண்ணம் மத்திய அரசு முயன்றும் முழுமையாக ஈடேறவில்லை.

இது அரசு விழா அல்ல என்றாலுங்கூட அரசை அமைக்கின்ற மக்கள் விழா. இந்த மக்கள் விழாவில் மதநல்லிணக்கம், சமுதாய நல்லிணக்கம் காணுகின்ற வகையிலே மேடை அமைந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். பெருமிதம் கொள்கிறேன்.

இதற்குக் காரணகர்த்தாவாக விளங்குகின்ற மக்கள் பேராயர் ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களுக்கு என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தையும் இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் ஒரு கதை சொன்னார். நான் அந்தக் கதையை விமர்சிக்க விரும்பவில்லை. அந்தக்

கதையிலே மூன்று பேராயர்கள்; கத்தோலிக்கப் பேராயர்; சி.எஸ்.ஐ.பேராயர், ஈ.சி.ஐ.பேராயர் என்று இந்த மூன்று பேராயர்களும் மோட்ச லோகத்திற்குச் சென்றார்கள் என்று சொன்னார்.

பேராயர்கள் எந்தப் பேராயராக இருந்தாலும் அவர்கள் வித்தியாச மில்லாமல் மோட்சத்திற்குச் செல்ல முடியுமென்ற மதமாக கிறிஸ்தவ மதம் இருக்கிறதென்பதை எண்ணி நான் பூரிப்படைகிறேன். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டாரென்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். எங்கள் மதத்திலே மோட்சத்திற்குச் செல்வதென்றால் ஒன்று தீக்குண்டத்திலே இறங்கிச் செல்ல வேண்டும் அல்லது எலும்பு உருவமெடுத்துத் தலைகீழாக கைலாயத்திலே நடந்துதான் செல்ல வேண்டும். அந்தச் சிரமம் இல்லாமல் இந்த மூன்று பேராயர்களும் கத்தோலிக்கப் பேராயரும், சி.எஸ்.ஐ.பேராயரும், ஈ.சி.ஐ.பேராயரும் (ஈ.சி.ஐ.பேராயர் பெயருக்கேற்ப 'ஈசி'யாகவே) மோட்சத்திற்குச் செல்ல முடிந்திருக்கிறது.

இந்த சமுதாயத்தில் அடிகளார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல – இந்தியத் துணைக் கண்டத்தில் அதிலும் குறிப்பாக தமிழகத்தில், இந்த நிலத்திலே வந்து இறங்கிய மதம் கிறிஸ்தவ மதம். ஆனால் அந்த மதம் மக்களுக்கு அறிவைப் போதிக்கின்ற மதமாக – அன்பைச் செலுத்துகின்ற மதமாக–அருளை அள்ளி வழங்குகின்ற மதமாக இன்றளவும் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது.

## மத வித்தகர்கள் தமிழுக்காக தொண்டாற்றினார்கள்

அந்த மதவித்தகர் பலர் தமிழுக்காக எப்படியெல்லாம் பாடுபட்டார்கள் என்பதை எனக்கு முன்னால் இங்கு உரையாற்றியவர்கள் – குறிப்பாக பேரவைத் தலைவர் பி.டி.ஆர். அவர்கள், அடிகளார் அவர்கள் மற்றும் பேராயர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேதான், தமிழுக்குத் தொண்டாற்றினார்கள், பணிபுரிந்தார்கள், தமிழை வளர்த்தார்கள், தமிழாகவே திகழ்ந்தார்கள் என்ற அந்தக் காரணத்தினாலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை

மாநகரத்திலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோது கடற்கரையிலே பலருக்கு ஆள் உயரச் சிலைகளை வைத்த நேரத்தில் அப்படி வைக்கப்பட்ட சிலைகளில் பெஸ்கி என்ற வீரமா முனிவருடைய சிலை, கால்டுவெல்லுடைய சிலை, ஜி.யு.போப் அவர்களுடைய சிலை – இவைகள் எல்லாம் இடம் பெற்றன என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

அந்தப் பெரியவர்களுடைய வழியில் – அந்த மதத் தலைவர்களுடைய வழியிலே வந்த நம்முடைய ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்கள் இங்குள்ள ஆயர்களைக் கலந்து மதுரை மறை மாநிலத்திலே இருக்கின்ற எல்லோருடைய ஒத்துழைப்போடும் இந்தச் சமுதாய நல்லிணக்க விழாவை இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

## எல்லா சமுதாயங்களையும் ஒன்று கூட்டும் கிறிஸ்தவ அடையாளம்

சமுதாய நல்லிணக்கத்தை விரும்புகிற – போற்றுகிற அதை ஏற்றுக்கொள்கிற – அதை நிலைநாட்ட வேண்டுமென்கிற குறிக்கோள் கொண்ட மதம் கிறிஸ்தவ மதம். உங்களுடைய அடையாளமே சிலுவை – சிலுவையை உற்று நோக்கினால் + கூட்டல் அடையாளம். எல்லா சமுதாயங்களையும் ஒன்று கூட்டி ஒன்றாக ஆக்க வேண்டுமென்ற கூட்டல் அடையாளத்தை சிலுவை அடையாளத்தைக் கொண்டிருக்கின்ற இந்த மதத்தின் காவலர்களாகிய நீங்கள் இன்றைக்கு சாதி சமய நல்லிணக்க விழாவை நடத்துவது வியப்புக்குரிய ஒன்றல்ல.

மதுரைப் பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் திருச்சி மாவட்டத்தில் உத்தமனூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். இப்போதுதான் அவர் உத்தமராக இருப்பதற்குக் காரணம் புரிகிறது. உத்தமனூரில் பிறந்து – எங்கள் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் உயர்நிலைக் கல்வி பயின்று, பிறகு ரோம் நகரத்திலே அர்பன் பல்கலைக்கழகத்திலே பயின்று பட்டம் பெற்று, கிறித்தவ சமயப் பணியிலே பல்வேறு பொறுப்புக்களையேற்று சிறப்பாக தொண்டாற்றி வரக்கூடியவராவார்.

## ஆத்திரத்திற்கு இடம் தராமல் அமைதியை ஏற்படுத்த பாடுபட்டவர்

மண்டைக்காடு கலவரத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், கோட்டாற்றில் 17 ஆண்டுகள் ஆயராகப் பொறுப்பேற்றிருந்த ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்கள் 82–ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காட்டில் நடைபெற்ற அந்தக் கலவரத்தின்போது சிலர் கொல்லப்பட்டார்கள், ரத்த ஆறு ஓடியது, வழிபாட்டிடங்கள் எல்லாம் அன்றைக்கு பாழ்படுத்தப்பட்டன. அந்தச் சேதாரம் நிகழ்ந்த கால கட்டத்தில் பதற்றத்திற்காளாகாமல், ஆத்திரத்திற்கு இடம் தராமல் அனைவரும் பாராட்டுகின்ற வண்ணம் பொறுமையைக் கடைப்பிடித்து, அந்தப் பகுதியிலே அமைதியை ஏற்படுத்துவதிலே அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவருடைய அந்த அரிய முயற்சிக்கு அன்றைய தினம் குன்றக்குடி அடிகளார் அவர்களும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை நாடறியும். எனவேதான் இவரை, 'மக்கள் பேராயர்' என்றும் 'சமாதானக் காவலர்' என்றும் நாம் அழைக்கிறோம்.

## தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி கற்பிக்க வாதாடியவர் வீரமா முனிவர்

அந்த அளவிற்கு பெரும் தொண்டினை சமுதாய நல்லிணக்கத்திற்காக ஆற்றியவர் இவர். இவருக்கு முன்னோடியாக 1628–ஆம் ஆண்டிலேயே டி.நொபிலி பாதிரியார் அதாவது 17–வது நூற்றாண்டிலேயே தாழ்த்தப்பட்ட மக்களை தேவாலயங்களுக்குள் செல்ல அனுமதித்த பெரியவர். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம்மால் அது முழுமையாக முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வீரமா முனிவர் தேம்பாவணி என்ற இலக்கியத்தைத் தந்தவர். அவர் சாதிப் பாகுபாடுகளைப் பற்றி குறிப்பிடும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி அனுமதி கிடையாது என்று கூறப்பட்ட அந்தக் கொடுமையான நிலையை எதிர்த்து கருத்து தெரிவிக்கும்போது 'உடலுக்கு வாய் வழியாக உணவு உட்கொள்வது எப்படி எல்லோருக்கும் பொதுவானதோ அதுபோல செவி வழியாக கல்வியாகிய உணவை உட்கொள்வதும் எல்லோருக்கும்

பொதுவாகும்" என்று கூறி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாக வாதாடியவர் வீரமாமுனிவர்.

அந்தக் காலத்திலே – 1872ஆம் ஆண்டில் திருச்சியில் பேராயராக இருந்த பர்த்தீ என்பவர் ஒரு ஆணையிட்டார். அப்பொழுதிருந்த சாதிப் பாகுபாடு, அந்தக் கொடுமையின் காரணமாக தாக்குப்பிடிக்க முடியாமல் அன்றைக்கு நெருக்கடிக்கு ஆளான சூழ்நிலையில், அவரிட்ட ஆணை – தேவாலயங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நின்று வணங்க – அதைப் போலவே உயர்சாதிக்காரர்கள் நின்று வணங்க – தனித்தனி இடங்கள் பிரிக்கப்பட்டு குறுக்குச் சுவரொன்று எழுப்பப்பட்டிருந்தது. அந்தக் குறுக்குச் சுவரை 1910ஆம் ஆண்டில் அகற்றி கவுசானெல் பாதிரியார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், உயர் சாதி மக்களுக்கும் இடையில் மாதாகோவிலில் இருந்த பாகுபாட்டைப் போக்கினார் என்கிற பெருமையை சரித்திரத்திலே சேர்த்தார் என்பது முக்கியமாக நம் நெஞ்சிலே பதிய வைத்துக் கொள்ளக் கூடிய நிகழ்ச்சியாகும்.

## மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்கும் விழா

மதங்களுக்கிடையே ஒரு நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக – அந்தச் செய்தியை இங்கே கலந்து கொண்டிருக்கின்ற அனைவரும் நெஞ்சிலே பதிய வைத்துக் கொள்வதற்காக நடைபெறுகின்ற விழா இது. வெறும் வைர விழா மாத்திரமல்ல இது. இந்த மறை மாநிலத்திற்காக நடைபெறும் வைர விழாவில், வைரம் போல் நம் நெஞ்சில் பதிய வேண்டிய கருத்தாக சமுதாய நல்லிணக்கம் பயன்பட்டாக வேண்டும்.

இன்றைக்கு ஜாதிமத சண்டைகள் ஆங்காங்கு ஒன்றிரண்டு இடங்களில் என்றாலுங்கூட – அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்றன என்றாலுங்கூட – அதுகூட நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்கள் இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற காட்சியைத்தான் நீங்கள் காணுகிறீர்கள்.

தமிழகத்தில் அரசியல் தலைவர்களானாலும், சமுதாயத் தலைவர்களானாலும், பெருந்தலைவர் காமராஜரானாலும், பேரறிஞர் அண்ணா அவர்களானாலும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்

அவர்களானாலும், காயிதே மில்லத் அவர்களானாலும், முத்துராமலிங்கத் தேவர் அவர்களானாலும், யாரும் சாதிகள் இருந்திட வேண்டுமென்று கூறியவர்கள் அல்ல. சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும், சாதி பேதம் அகற்றப்பட வேண்டும் என்பதில் திடமாக இருந்தவர்கள்தான். அப்படிப்பட்டவர்கள் உலவிய இந்தப் பூமியில் – அவர்கள் வாழ்ந்த இந்த மண்ணில் – அவர்கள் பக்குவப்படுத்திய இந்த நிலத்தில் இன்றைக்கு களை அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைப்பதைப் போல் சாதி வெறி, மத வெறி முளைப்பதையும் – அந்த மத வெறியையும், சாதி வெறியையும் மாய்ப்பதற்கு நாமெல்லாம் அன்பை ஆயுதமாக எடுத்துக் கொண்டு அமைதியை உருவாக்கப் பாடுபட்டதையும், நினைவு கூர்வதற்கும் இந்தப் பணி தொடர் பணியாக இருந்திட வேண்டுமென்பதற்கும் தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

ஏன் இந்தப் பிளவுகள்? மொத்தமாக ஆதிதிராவிட மக்களோ அல்லது முக்குலத்து மக்களோ அல்லது வன்னிய மக்களோ அல்லது யாதவ மக்களோ அல்லது உயர்சாதிக்காரர்களோ – மொத்தச் சமுதாயமாகக் கூடி நாங்கள் படை திரண்டு இன்னொரு சமுதாயத்தை எதிர்க்கப் போகிறோம் என்று சொல்கிறார்களா என்றால், அந்த நிலை நாட்டிலே இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் ஒரு சமுதாயத்திலே யாரோ ஒருவர் தோன்றுகிறார், அவர் தலைவராக வேண்டுமென்பதற்காக தான் பிறந்த சாதியை, சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார். பெரியார் பிறந்தார். தான் பிறந்த சமுதாயம் இழிவுற்றிருக்கிறதே என்பதற்காக மொத்தச் சமுதாயத்திற்கும் பாடுபட்டார். அண்ணா பிறந்தார், வாழ்ந்தார். அவர் தான் பிறந்த சமுதாயத்திற்காக மாத்திரமல்ல, தான் பிறந்த சமுதாயத்தைப் போன்றிருக்கிற எல்லா சமுதாயங்களிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும், புதுமையை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினார். இந்தியாவினுடைய அரசியல் ஆசானாக அம்பேத்கர் பிறந்தார். அந்த அம்பேத்கர் தான் பிறந்த சமுதாயத்திற்காக மாத்திரமல்ல, எல்லா சமுதாயங்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்.

## சாதிக்கு ஒரு கட்சி – சாதிக்கு ஒரு தலைவர்

அத்தகைய நிலையிலே இன்றைக்கு பாடுபடுகிற தலைவர்கள் சமுதாயங்களிலே பிறக்கவில்லை. பிறந்திருந்தாலும் அவர்கள் தங்களை அப்படி உருவாக்கிக் கொள்ளவில்லை. தங்களை தன்னலத்தின் பாற்பட்டு உருவாக்கிக் கொள்வதற்காக தாங்கள் பிறந்த சமுதாயத்தைப் பயன்படுத்திக் கொள்கிற தலைவர்களாக இன்றைக்கு நாட்டிலே அன்றாடம் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். சாதிக்கொரு தலைவர் – ஒவ்வொரு சாதிக்கும் ஒரு கட்சி – என்றளவிற்கு நிலைமைகள் வளருகின்ற காரணத்தினாலே தான் அந்தச் சமுதாயத்திலே உள்ள மக்கள் ஒற்றுமையாக இருந்தாலுங்கூட, அவர்களைத் தூண்டி விட்டு கலவரங்களை, அமளிகளை இந்தத் தமிழ் நிலத்திலே ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அடித்தளத்து மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் – சமுதாயத்திலே இல்லை என்று கூறுகிற அறிவு குறைந்தவனல்ல நான், அந்த மக்களுக்காக இளமைக் காலந்தொட்டு என்னையே அர்ப்பணித்துக் கொண்டிருப்பவன். அதைப்போலவே சிறுபான்மை சமுதாயத்து மக்களுக்காக – அவர்கள் கிறிஸ்தவ சமுதாயமாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயமாக இருந்தாலும், எந்தச் சமுதாயத்து மக்களாக இருந்தாலும் அவர்களுக்காக என்னுடைய உயிரைப் பணயமாக வைத்து போராடக்கூடியவன். அவர்களுடைய உரிமைகளுக்காக வாதாடக் கூடியவன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். எனவேதான் இன்றைக்கு நான் இந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சியில் ஒன்றை மாத்திரம் நினைவுபடுத்தி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

## திருவிவிலியம் நூலில் சீராக்கின் ஞானம்

திருவிவிலியம் என்ற நூலில் சீராக்கின் ஞானம் என்று ஒரு பகுதி வருகிறது. இந்தச் சீராக்கின் ஞானம், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே எழுதப்பட்டது. அந்த சீராக்கின் ஞானம் என்ற பகுதியில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றால் –

குழந்தாய்,

ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே;

கையேந்தி நிற்போரைக்

காத்திருக்க வைக்காதே.

பசித்திருப்போரை

வாட்டி வதைக்காதே;

வறுமையில் உழல்வோரை

எரிச்சலூட்டாதே.

உள்ளம் உடைந்தோர்க்கு

துயரங்களைக் கூட்டாதே;

வறுமையில் உழல்வோருக்குக்

காலம் தாழ்த்தாமல் உதவி செய்.

துன்புறுவோரின் வேண்டுதலைத்

தள்ளிவிடாதே;

ஏழையரிடமிருந்து உன் முகத்தைத்

திருப்பிக் கொள்ளாதே.

உன்னிடம் உதவி

வேண்டுவோரிடமிருந்து

உன் கண்களைத் திருப்பிக்

கொள்ளாதே;

உன்னைச் சபித்திட யாருக்கும்

வாய்ப்பு அளிக்காதே.

பூசலைத் தவிர்த்திடு;

உன் பாவங்கள் குறையும்.

சீற்றம் கொள்வோர் சண்டையை

மூட்டி விடுகின்றனர்.

**(அதுதான் இன்றைக்கு நடக்கின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, 400 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள்)**

பூசலைத் தவிர்த்திடுக!
உன் பாவங்கள் குறையும்.
சீற்றம் கொள்வோர் சண்டையை
மூட்டி விடுகின்றனர்.
பாவிகள் நட்பைக் கலைக்கிறார்கள்;
அமைதியாய் இருப்போரிடையே
பிணக்கை விதைக்கிறார்கள்.
விறகின் தன்மைக்கு ஏற்ப
அது பற்றி எரியும்.
மனிதரின் வலிமையைப் பொறுத்து
அவர்களின் சீற்றம் அமையும்;
திடீர் வாக்குவாதம் நெருப்பை
மூட்டுகிறது;

(பார்க்கிறோமே அன்றாடம் இன்றைக்கு)

திடீர் வாக்குவாதம் நெருப்பை
மூட்டுகிறது;
திடீர்ப் பூசல் கொலைக்கு
இட்டுச் செல்கிறது.
ஊதும்போது தீப்பொறி
கொழுந்துவிட்டு எரிகிறது;
அதன் மீது துப்பும்போது
அது அணைந்து போகிறது;
இந்த இரு விளைவுகளுமே
உன் வாயில் இருந்தே
புறப்படுகின்றன.

ஊதுவதும் வாயில் இருந்துதான்; துப்பி அணைப்பதும் உன் வாயில் இருந்துதான். ஆகவே வாயைக் காப்பாற்று என்று அன்றைக்கே சொன்ன அந்த மொழியை மனதிலே வைத்து வாய்மையோடு நடப்போம். சமுதாயத்திலே நல்லிணக்கத்தை உருவாக்குவோம்.

# நெற்கட்டும் செவல் பூலித்தேவன் மாளிகை திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை

"நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும்
நெற்கட்டும் செவல் கோட்டையன்றோ"

– என்று புகழ்ந்து பாடப்படுகின்ற இந்தப் பகுதியில் பூலித்தேவனுடைய கோட்டையைப் புதுப்பித்து, பூலித்தேவனுடைய சிலையைத் திறந்து வைத்து, பூலித்தேவனுடைய வீரத்தைப் பாராட்டி, தியாகத்தைப் பாராட்டி, சுதந்திரக்கனலைப் பாராட்டி உங்களிடத்திலே சில கருத்துக்களை சொல்ல நின்று கொண்டிருக்கிறேன்.

## தியாகம் என்றைக்கும் மறைவதில்லை என்ற செய்தியைச் சொன்ன நிகழ்ச்சி

நேற்றும் இன்றும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தால் அந்த நிகழ்ச்சிகள் தமிழகத்துக்கு சொல்கிற செய்திகள் என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

நேற்று காலையிலே மதுரைக்கு அருகேயுள்ள திருமங்கலத்தில் வீரத்தியாகி விஸ்வநாததாஸ் அவர்களுடைய நினைவு இல்லத்தைத் திறந்துவைத்தேன். அவர் சுதந்திரத்திற்காக தன்னுடைய உயிரையே கொடுத்தவர். தன்னுடைய கலை உணர்வை, கலை ஆர்வத்தை, சுதந்திரக் கனலை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தியவர். உத்தமர் காந்தியடிகளிடத்தில் பாராட்டு பெற்றவர். வெள்ளைக்கார அரசாங்கத்தால் ஏறத்தாழ இருபது முறைக்கு மேல் சிறைப்பட்டவர்.

அந்த உத்தமத் தியாகியினுடைய இல்லம், அவருடைய தியாகத்தினுடைய அடையாளமாக ஏலம் போய், பாழ்பட்டு, சேதமுற்று இடிந்து கிடக்கும் நிலையில் – அதை ஏலம் எடுத்தவர்களிடமிருந்து பதினோரு இலட்சம் ரூபாய்க்கு அந்த மனையை இந்த அரசு பெற்று அங்கே ஐம்பது இலட்சம் ரூபாயில் புதிய இல்லத்தை உருவாக்கி அதை திறந்துவைக்கின்ற நிகழ்ச்சி நேற்று காலையில் நடைபெற்றது.

அது சொல்கிற செய்தி என்னவென்றால் தியாகத்திற்கு என்றைக்கும் மதிப்புண்டு. தியாகம் செய்த மனிதன் இறந்து விட்டாலும் மறைந்து விட்டாலும் அவனுடைய தியாகம் என்றைக்கும் மறைவதில்லை. ஆகவே "மனிதா, தியாகம் செய்ய தயாராகு, தயாராக இரு" என்ற செய்தியை அந்த நிகழ்ச்சி சொன்னது.

## சமுதாய நல்லிணக்க விழா சொல்கின்ற செய்தி

நேற்று மாலையிலே, மதுரையிலே மற்றொரு நிகழ்ச்சி, கிறித்துவ பேராயர்களெல்லாம் ஒன்றுகூடி நடத்திய நிகழ்ச்சி. மதுரை மறை மாநில பேராயர்களும், ஆயர்களும் ஒன்றிணைந்து மகத்தான நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினார்கள். அந்த நிகழ்ச்சியின் தலைப்பு "சமுதாய நல்லிணக்க விழா". அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டேன். இஸ்லாமிய சமுதாய சகோதரர்களும் கலந்து கொண்டார்கள். மேடையிலே வந்து அமர்ந்து உரையும் ஆற்றினார்கள். குன்றக்குடி அடிகளார் கலந்து கொண்டார். கிறித்துவ பாதிரியார்களும், கிறித்துவ சமுதாயத்திலே உள்ள எல்லாப் பிரிவு பேராயர்களும் கலந்துகொண்டார்கள். நானும் கலந்து கொண்டு உரையாற்றினேன்.

அந்த நிகழ்ச்சி சொல்கின்ற செய்தி என்னவென்றால்; சமுதாயத்திலே அனைவரும் சகோதரர்களாக வாழவேண்டும், சமத்துவம், சமத்துவ மனப்பான்மை, மனித நேயம் நம்மிடத்திலே அரும்பி, மலர்ந்து, கனிந்து இந்த சமுதாயத்தை உலகம் போற்றுகின்ற அளவிற்கு மாற்றிட வேண்டும் என்ற அந்தச் செய்தியைத்தான், மனித நேயம் வேண்டும் என்ற அந்தச் செய்தியைத்தான் மதநல்லிணக்கம், சமுதாய நல்லிணக்கம் வேண்டும் என்ற அந்தச் செய்தியைத்தான் அந்த நிகழ்ச்சி சொன்னது.

## அழகியபாண்டியபுரத்தில் சமத்துவபுரத்தை திறந்துவைத்தேன்

இன்று காலையில் வருகிற வழியில் அழகியபாண்டியபுரத்தில் ஒரு சமத்துவபுரத்தை திறந்துவைத்தேன். அந்தச் சமத்துவபுரத்தில் நூறு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த நூறு வீடுகளில் வாழ்கிறவர்கள் ஒரே சமுதாயத்தைத் சேர்ந்தவர்கள் அல்ல. பிராமணர்களும் அங்கே குடிபுகுந்திருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களும் குடிபுகுந்திருக்கிறார்கள்,

முக்குலத்துப் பெருமக்களும் அங்கே குடிபுகுந்திருக்கிறார்கள், வன்னியர்கள் உண்டு, செட்டியார்கள் உண்டு, முதலியார்கள் உண்டு. இப்படி பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே குலமாக, தமிழ்க்குலமாக, தமிழ் இனமாக மனித ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடு வாழவேண்டும் என்ற செய்தியை சமத்துவபுரத்தின் மூலமாக உலகத்திற்குச் சொல்கிறோம். அந்த நிகழ்ச்சி, அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

## பூலித்தேவன் வீரமும், விவேகமும், கருணையும் உள்ளவன்

இங்கே இப்போது நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித்தேவனுடைய வீரத்தை நினைவுபடுத்த, அவன் வீரம் மிக்கவன் மாத்திரமல்ல, விவேகம் மிக்கவன் மாத்திரம் அல்ல, கருணை உள்ளவன், அன்பு உள்ளவன், பகைவரையும் மன்னிக்கக் கூடிய பண்பாளன் என்ற இந்தச் செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதைப்போல நாமும் வீரம் மிக்கவர்களாக, விவேகம் மிக்கவர்களாக, நம்முடைய தாய்நாட்டுப் பற்றுள்ளவர்களாக, மண்ணின் மைந்தர்களாக, எதிரிகளுக்கு இடங்கொடுக்காதவர்களாக அதேநேரத்தில் பகையைக்கூட பண்போடு மன்னிப்பவர்களாக இருந்திட வேண்டும் என்ற அந்தச் செய்தியை சொல்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சி.

## 17 ஆண்டு காலம் போரிட்ட மாவீரன் பூலித்தேவன்

இந்த நெற்கட்டும் செவல் புகழ்பெற்ற மண்ணுக்கு கீர்த்தி பெற்ற சொல்லுக்கு இலக்கணமாக இன்றைக்குத் திகழ்கிறது. காரணம், இது பூலித்தேவன் வாழ்ந்த பூமி என்பதுதான். எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல இந்தியாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலே 17 ஆண்டு காலம் போரிட்ட ஒரு பாளையக்காரன் உண்டென்றால் அது மாவீரன் பூலித்தேவன்தான்.

ஒன்றல்ல இரண்டல்ல, பதினேழு ஆண்டு காலம் தொடர்ந்து போரிட்டான். அவன் கட்டிய கோட்டையை இன்றைக்கு அதன் அடையாளம் மாறாமல் புதுப்பித்து ஏறத்தாழ 3 இலட்ச ரூபாய் அந்த

பூலித்தேவனின் உறவினர்களுக்கு அந்த மனையைப் பெறுவதற்காக அரசு சார்பில் வழங்கி, மேலும் 50 இலட்ச ரூபாய் செலவிட்டு திருமண மண்டபம், தர்பார் மண்டபம், பூலித்தேவனுடைய சிலை, நூலகம், காட்சியகம் அத்தனையையும் இங்கே அமைத்திருக்கிறோம்.

இந்த பூலித்தேவனுடைய பெயரை அடிக்கடி நினைவூட்டி பூலித்தேவனுக்கு சிலையெழுப்ப வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி இந்த மாளிகையை முன்பிருந்தவாறே மீண்டும் புதுப்பித்துத் தரவேண்டும் என்று அடிக்கடி என்னை வலியுறுத்தியவர்களெல்லாம் இங்கே அமர்ந்திருக் கிறார்கள்.

குறிப்பாக அருமை நண்பர் சீனிச்சாமி தேவர், டாக்டர் இராமகிருஷ்ணன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அருமை நண்பர் சந்தானம், அருமை நண்பர் வல்லரசு மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த என்னுடைய நண்பர்கள், இந்த வட்டாரத்திலே உள்ளவர்கள், அருணா போன்றவர்கள், தம்பி தங்கவேலு போன்றவர்கள் அத்தனை பேருமே தேவர், தேவர் அல்லாதார் என்கிற பாகுபாடு இல்லாமல் அத்தனை பேருமே பூலித்தேவனுடைய மாளிகையை இங்கே புதுப்பிக்க வேண்டும், இந்தக் கோட்டையை மீண்டும் கட்டித்தர வேண்டும், சிலை எழுப்ப வேண்டும் என்று என்னை பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

## கலைநுட்பத்தோடு கட்டப்பட்ட பூலித்தேவன் கோட்டை

இந்தக் கோட்டை அந்தக் காலத்திலே எப்படி கட்டப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தபோது, விசித்திரமாக இருக்கிறது. எவ்வளவு கலைநுட்பத்தோடு எவ்வளவு பொறியியல் நுட்பத்தோடு இந்தக் கோட்டை அன்றைக்குக் கட்டப்பட்டது என்பதை எண்ணி நான் வியப்படைகிறேன்.

பனை ஓலை மற்றும் பனை நாரை பொடி செய்து கடுக்காய் பொடியைக் கலந்து அத்தனையையும் பதநீரிலே ஊறவைத்து, ஊறவைக்கப்பட்ட பதநீரோடு முட்டையைக் கலந்து அப்படிக் கட்டப்பட்ட கோட்டை பகைவர்களால் அழிக்கப்பட்டது. அந்தக் கோட்டைதான்

இன்றைக்கு மீண்டும் உங்களுடைய முன்னிலையிலே புதுப்பிக்கப்பட்டு பொலிவோடு தோன்றுகிறது.

இந்தக் கோட்டையைக் கட்டுவதென்று அறிவித்து 18 மாதங்கள் ஆகின்றன. கட்டுவதற்கான அனுமதி 13–1–98 அன்று வழங்கப்பட்டது என்று எனக்கு நினைவு. ஏறத்தாழ பத்து மாத காலத்தில் இந்தக் கோட்டையைக் கட்டி முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் தனவேலு, ஐ.ஏ.எஸ்., அவர்களும், பொதுப்பணித்துறையும், குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் அரும் பாடுபட்டு இதை அமைத்திருக்கிறார்கள். செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் முல்லைவேந்தன் அடிக்கடி இந்த இடத்திற்கு வந்து கோட்டை எப்படி உருவாகிக் கொண்டிருக்கிறது, சிலை எப்படி உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை எனக்கு சொல்லிக் கொண்டிருப்பார்.

ஏதோ ஒரு பத்திரிகையில்கூட படித்ததாக எனக்கு நினைவு. அவசர அவசரமாக கோட்டையைக் கட்டிவிட்டார்கள் என்று எழுதியிருந்தார்கள். நிதானமாகக் கட்டினால், இன்னும் கட்டவில்லை என்று சொல்வார்கள். வேகமாகக் கட்டினால், அவசர அவசரமாகக் கட்டிவிட்டார்கள் என்று சொல்வார்கள். எனவே இவை இரண்டிற்குமிடையே இந்தக் கோட்டை இன்று கட்டப்பட்டிருக்கிறது.

## முதன்முதலாக நடைபெற்ற சுதந்திரப் போராட்டம்

இந்தியாவிலே சுதந்திரப் போராட்டம், அருணா குறிப்பிட்டதைப்போல – வெள்ளையரை எதிர்த்து பல பகுதிகளில் நடைபெற்றிருக்கிறது. ஆனால், முதன்முதலாக நடைபெற்ற போராட்டம் என்று எடுத்துக் கொண்டால், அண்மையில் நான் வேலூரில், 'வேலூர் சிப்பாய்க் கலகம்' என்று சொல்லப்படுகின்ற சுதந்திரப் போராட்டத்தினுடைய சின்னம் என்ற அளவில் ஒரு தூணைத் திறந்துவைத்தேன்.

சிப்பாய்க் கலகம் வெள்ளையர்களை எதிர்த்து நடைபெற்ற கலகம். அதுகூட தமிழ்நாட்டில் நடைபெறவில்லை என்பதைப் போல, வடக்கே நடைபெற்றது என்பதைப் போலத்தான் வரலாறு கூறிக் கொண்டிருக்கிறது.

இல்லை. முதல் சுதந்திரப் போராட்டம் சிப்பாய்க் கலகம் என வருணிக்கப்பட்ட அந்தப் போராட்டம் நடைபெற்ற ஊர் வேலூர். 1806ஆம் ஆண்டு நடைபெற்ற அதுதான் முதல் சுதந்திரப் போராட்டம் என்று உண்மையிலே சரித்திரம் எழுதுகிறவர்கள் குறிப்பிடுவார்கள். ஆனால் அதையும் முந்திக்கொண்டு நடைபெற்ற போராட்டம்தான் பூலித்தேவன் நடத்திய சுதந்திரப் போராட்டம் என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய போராட்டத்திற்கு முன்பே நடத்தப்பட்ட போராட்டம் பூலித்தேவன் நடத்திய சுதந்திரப் போராட்டம் என்பதை எந்த வரலாற்றுப் பேராசிரியரும் மறைக்க முடியாது என்பதை திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியும்.

## 53 ஆண்டுகள் வாழ்ந்து
## சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்

பூலித்தேவர் 1715ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் பிறந்தார். 1715 முதல் 1767 வரை 53 ஆண்டுகள் வாழ்ந்தார். 53 ஆண்டுகள்தான் வாழ்ந்திருக்கிறார். அதற்குள்ளாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் உயிர் துறந்தார். அவருடைய இயற்பெயர் காத்தப்ப துரை. ஆறு வயது சிறுவனாக இருந்தபோது திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தார். 12வது வயதிலேயே குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, வாள்வீச்சு, அம்பு எறிதல், கவண் எறிதல், வல்லயம் எறிதல் ஆகியவற்றில் போர்ப் பயிற்சிகள் பலவற்றைப் பெற்றார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச் சிலை போன்ற உடற்கட்டும் கொண்டவர் பூலித்தேவர் என்று வருணிக்கப்படுகிறார்.

வீரம், நேர்மை, தன்மான உணர்வுகள் இவற்றின் வடிவம்தான் பூலித்தேவர். அதுமாத்திரமல்ல; கொடையுள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை, எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கவழக்கமுடையவர். சாலை வசதிகளைச் செய்து மக்கள் பணியாற்றினார்.

ஏழை, எளியவர்கள் தங்கிட மண்டபங்கள் பல கட்டி, அந்த மண்டபங்களிலே ஏழை எளியவர்களுக்கு உணவளித்தார்.

குளங்கள், கிணறுகள், ஏரிகள் அமைத்து வேளாண்மையை வளர்த்தார். பல கோயில்களுக்கு திருப்பணியும் செய்துள்ளார்.

### கப்பம் கட்ட முடியாது என்று அடித்துச் சொன்னவர் பூலித்தேவர்

ஆர்க்காட்டு நவாபு உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு ஆங்கிலேயர்களுக்கு முதன்முதலாக கதவைத் திறந்துவிட்டவர் ஆர்க்காட்டு நவாப். அந்த ஆர்க்காட்டு நவாப்பின் முதல் ஆங்கிலத் தளபதியின் பெயர் அலெக்சாண்டர். அந்த அலெக்சாண்டர் நெல்லைச்சீமைக்கு வரிவசூல் செய்ய வந்தார். வந்தபோது "கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக்காசும் கட்ட முடியாது" என்று ஓங்கியடித்துச் சொன்னவர்தான் பூலித்தேவர்.

அதுமாத்திரமல்ல; "நெல்லாவது கொடு, வரிக்கு பதிலாக" என்று கேட்டபோது, "வரி என்று நீ கேட்டால் ஒரு மணி நெல்லைக்கூட நான் உனக்குத் தரமுடியாது" என்று பூலித்தேவர் மறுத்துக் கூறினார். ஒரு மணி நெல்கூட தரமுடியாது, கட்டமுடியாது என்று சொன்ன காரணத்தால்தான் 'நெல் கட்டான் செவல்' என்று இந்த ஊருக்கே பெயர் வந்தது. 'நெல் கட்டான்' – வரியாக நெல்லைக் கட்டமாட்டான் என்று சொன்ன அந்தச் சொல்தான் இந்த ஊருக்கே பெயராக அமைந்தது. அதுதான் இப்போது திரிந்து, 'நெல் கட்டும் செவல்' என்று ஆகிவிட்டது.

கட்டமாட்டேன் என்று சொன்ன காலம் அது. நெல் கட்டும் செவல் என்று சொல்கின்ற அளவிற்கு அந்தப் பெயரே பொருளை மாற்றுகின்ற அளவிற்கு மாறிவிட்ட விபரீதம் ஏற்பட்டு விட்டது.

### பாளையக்காரர்களுடன் கூட்டணி அமைத்து போரிட்டவர்

1806 சிப்பாய்க் கலகத்திற்கு முன்பே, 1857 சிப்பாய்ப் புரட்சிக்கும் முன்பே இவர் நடத்திய அந்த சுதந்திரப் போராட்டத்தில் ஒரு கூட்டணி

அமைத்து போரிட்டிருக்கிறார். பல பாளையக்காரர்களையெல்லாம் தன்னோடு இணைத்துக்கொண்டு வெள்ளையவர்களை எதிர்த்த விவேகி பூலித்தேவர்.

கொல்லங்கொண்டான், சேத்தூர், சொக்கம்பட்டி, தலைவன் கோட்டை, ஊத்துமலை போன்ற பாளையங்களுடைய அரசர்களுடன் இணைந்து, வலுவாக கூட்டணி அமைத்து வெள்ளையனை எதிர்த்தவர் பூலித்தேவர்.

1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 ஆண்டுகள் பலமுறை வெள்ளைக்காரர்களோடு அவர் யுத்தம் செய்திருக்கிறார்.

திருச்சியில் இராபர்ட் கிளைவுடன் சண்டையிட்டதாகப் 'பூலித்தேவன் சிந்து' கூறுகிறது.

அலெக்சாண்டர் கெரானுடன் 1755இல் போர் நடத்தியிருக்கிறார்.

களக்காட்டில் மாபுஸ்கானுடன் 1755இல் போர் நடத்தியிருக்கிறார். அந்தப் போரில் மாபுஸ்கான் தோல்வியுற்றார். மாபுஸ்கானை அழைத்து வந்து தன்னுடைய மாளிகையிலேயே விருந்தாளியாக வைத்து மரியாதையோடு நடத்தினார் என்று வரலாறு கூறுகின்றது.

திருவில்லிபுத்தூரில் ரகீமுடன் 1755இல் போர் நடத்தினார்.

திருநெல்வேலியில் 1756இல் போர் நடத்தினார்.

நெல்கட்டும் செவலில் 1759இல் யூசுப்கான் என்று சொல்லப்படுகின்ற கான்சாகிப்போடு போர் நடத்தியிருக்கிறார்.

வாசுதேவ நல்லூரில் 1759 மற்றும் 1760 ஆகிய ஆண்டுகளில் யூசுப்கானுடன் மீண்டும் போர் நடத்தியிருக்கிறார்.

1761இல் நெல் கட்டும் செவல், வாசுதேவநல்லூர் கோட்டைகளில் அதே யூசுப்கானுடன் மறுபடியும் போர் நடத்தினார்.

1767இல் வாசுதேவநல்லூரில் ஆங்கிலத் தளபதி டோனால்டு காம்பெல்லுடன் நடத்திய போர்தான் கடைசிப் போராகும்.

இவற்றைத் தவிர கங்கைகொண்டான், ஆழ்வார் குறிச்சி, சேத்தூர், கொல்லங்கொண்டான், ஊத்துமலை, சொக்கம்பட்டி, தலைவர்கோட்டை ஆகிய கோட்டைகளில் நடைபெற்ற போர்களிலும் பூலித்தேவன் பங்கு பெற்றார்.

## பூலித்தேவர் புகழ்பாடும் பல்வேறு பாடல்கள் வெளிவந்தன

இந்த மாவீரனுடைய புகழைப் பாட பூலித்தேவன் சிந்து, புதுக்கோட்டைச் சண்டை, பூலித்தேவன் வண்ணக் கோடாங்கிப் பாடல்கள், பூலித்தேவன் உடுக்கு அடிக்கும் பாடல், பூலித்தேவன் கும்மிப்பாடல்கள், பூலித்தேவன் தாலாட்டுப் பாடல், பூலித்தேவன் ஒப்பாரிப் பாடல் என்று பல பாடல்கள் பூலித்தேவன் பெயரால் வெளியாகி பல பகுதிகளிலே பாடப்படுகிற நிகழ்ச்சியையும் உங்களிலே பலர் அறியக்கூடும்.

அமெரிக்க உள்நாட்டுப் போர், பிரெஞ்சுப் புரட்சி ஆகிய புரட்சிகள் நடைபெறுவதற்கு முன்னரே இந்தியாவில் விடுதலைப் புரட்சியை நடத்தியவர்தான் இங்கே நம்முன் சிலையாக நிற்கின்ற மாவீரன் பூலித்தேவன் என்பதை நான் சொல்லுகின்ற நேரத்திலேயே வீரம் கொப்பளிக்கின்றது. அப்படிப்பட்ட வீரன் வாழ்ந்த மண் இந்த மண். அந்த பூலித்தேவருக்குத் துணையாக யார் யார் இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கேதான் நேற்று மாலை நடைபெற்ற சமுதாய நல்லிணக்க நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தச் செய்தியை நான் உங்களுக்கு திரும்பச் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர் வெள்ளையத்தேவன் பாதர் வெள்ளை..அந்த வெள்ளையத்தேவனுடைய ஆருயிர் நண்பன் சுந்தரலிங்கம். சுந்தரலிங்கம் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். கட்டபொம்மனின் தளபதிகளிலே ஒருவர். வெள்ளையத்தேவனும் வீரன் சுந்தரலிங்கமும் இணைந்து பல போராட்டங்களை வெள்ளைக்காரர்களோடு நடத்தியிருக்கின்றார்கள். வீரன் சுந்தரலிங்கம் – கட்டபொம்மனைக் காப்பாற்றுவதற்காக, வெள்ளையத் தேவனைக் காப்பாற்றுவதற்காக தன்னைத்தானே மாய்த்துக் கொள்கின்ற தற்கொலைப் படை வீரனாக மாறி உயிர் நீத்தவர்.

கட்டபொம்மனுக்கு கோட்டை கட்டியவன் மாத்திரமல்ல இந்த கருணாநிதி, அந்த சுந்தரலிங்கத்திற்கும், சுந்தரலிங்கம் நகர் என்ற ஒரு நகரை நிர்மாணித்து அண்மையிலே திறந்துவைத்தவன்தான் நான். ஏன் சொல்கிறேன் என்றால், அந்தப் போராட்டத்திலே வெள்ளையத்தேவன், சுந்தரலிங்கம் என்ற ஆதிதிராவிடர் – இந்த இருவரும் ஒன்றாக இணைந்து நின்று சுதந்திரப் போராட்டத்தை நடத்த முடிந்தது.

## பூலித்தேவனுக்கு உதவியாக இருந்த ஆதிதிராவிட வீரர்கள்

அதைப்போலத்தான் பூலித்தேவனுக்கு உதவியாக முன்னணியில் இருந்தவர்கள் பகடை ஒண்டி வீரன், வெண்ணிக்காலாடி – இவர்கள் இருவரும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

இருவரும் பூலித்தேவனுக்கு உதவியாக முன்னணியிலே இருந்தவர்கள். அதுமாத்திரமல்ல. இவர்களுடன் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த தளபதிகள் 350 பேர் பூலித்தேவனுக்கு உதவியாக இருந்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.


அந்தக் காலத்தையும் எண்ணிப்பாருங்கள். இந்தக் காலத்தையும் எண்ணிப்பாருங்கள். சமுதாய நல்லிணக்கத்திற்கு இன்று சொல்லப்பட்ட செய்தியையும் எண்ணிப்பாருங்கள். நேற்று சொல்லப்பட்ட செய்தியையும் எண்ணிப்பாருங்கள். ஒரு வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும் ஒன்றாக இருக்க முடிந்தது. அதைப் போல ஒரு பூலித்தேவனும், பகடை ஒண்டி வீரனும், வெண்ணிக்காலாடியும் ஒன்றாக இருக்க முடிந்தது. இன்றைக்கு முடியவில்லையே? என்ன காரணம்?

என்ன சதி இடையிலே குறுக்கிட்டது. அந்தச் சதியை முறியடிக்க வேண்டாமா? நாமெல்லாம் தமிழர்கள். நடப்பது தமிழர்களுக்காக இருக்கின்ற அரசு, தமிழர்களுக்காக இருக்கின்ற நாடு என்கின்ற அந்த உணர்வைப் பெற வேண்டாமா?

★ ★ ★



மாவீரன் பூலித்தேவன் மாளிகை - அன்றைய தோற்றம்



கலைஞர் அரசின் முயற்சியால் -
மாவீரன் பூலித்தேவன் மாளிகை - இன்றைய தோற்றம்



